

கல்கி
KALKI ஆகஸ்ட் 12, 1956
4 அணா



L. 263-50 TM

இந்தியாவில் தயாரித்தது

மலர் 16
இதழ் 2


கல்கி
பொருளடக்கம்

துன்முகி
ஆடி 28

ஆகஸ்டு 12, 1956

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

''ஐயோ, நீர்மூழ்கிக் கப்பல் வருகிறதே!''



... 'கைத்தறி' நெசவாளர்களிடையே பெரும் பீதியை உண்டாக்கியிருக்கிறது!



மலர் 16 | இதழ் 2

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

துன்முகி ௵ ; ஆடி 28

இயந்திரத் தறிகள் வேண்டாம்

கையினால் செய்யும் வேலையை இயந்திரங்களின் உதவியினால் சுலபமாகச் செய்யலாம். இதைப் பற்றிச் சிறிதும் சந்தேகமே இல்லை.

இயந்திரங்களின் மூலம் தேக சிரமத்தைக் குறைத்துக் கொள்வது புத்திசாலித் தனமாகும். இதைப் பற்றியும் சந்தேகமில்லை.

இயந்திரமே கூடாது என்று இயந்திரங்களுக் கெல்லாம் ஓரே அடியாக ஆட்சேபனை செய்வது நியாயமல்ல. இப்படி காந்தியடிகள் ஆட்சேபனை செய்த தில்லை. விநோபாஜியும் செய்யவில்லை.

அவ்விருவரும் இந்திய மக்களுடைய தொழில் நிலையையும் வாழ்க்கை நிலையையும் நுட்பமாக ஆராய்ந்தவர்கள். அவர்களுடைய ஆட்சேபனை என்ன வென்றால், லட்சக்கணக்கான குடும்பங்கள் ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது அதைக் கலைத்துக் கெடுத்துவிட்டு இயந்திரத்தைப் புகுத்தினால் மேற்படி குடும்பங்கள் ஏற்கெனவே ஈடுபட்டிருந்த தொழிலும் போய் வேறு தொழிலும் இல்லாமல் அலைய நேரிடும் என்பதே.

லட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு வேறு எந்தத் தொழிலும் பொருந்தாது. அவர்களுக்கு நிலங்கள் இல்லை; உழுது பயிர் செய்யவும் தெரியாது. பயிர்த் தொழில் தெரிந்தவர்களும் கூடப் போதிய நிலமில்லாமல் தத்தளிக்கிறார்கள். அப்படியிருக்க நெசவுக்காரர்களுக்கு விவசாயத் தொழில் எங்கே கிடைக்கப் போகிறது? கிடைத்தாலும் அவர்களுக்கு அதில் பயிர் செய்து வாழவும் முடியாது.

லட்சக்கணக்கான குடும்பங்கள் செய்வதற்குத் தொழில் இன்றி, பிழைப்பதற்கு வழி இன்றி அலைந்து கொண்டிருக்கும்போது ஆலைகளிலிருந்தும் இயந்திரத் தறிகளிலிருந்தும் துணிகளை வேகமாக உற்பத்தி செய்து குவிப்பதால் என்ன பயன்?

ஒரு நாட்டில் பரம்பரையாகப் பயிற்சி அடைந்து, மக்களுக்கு வேண்டிய துணிகளை மிக மிக நேர்த்தியான வகைகளில் நெய்து கொடுத்து வாழ்க்கை நடத்தி வரும் லட்சக்கணக்கான குடும்பங்களைத் தீர்க்காலோசனை செய்யாமல் தெருவில் அலைய விடுவது மகா பாவமாகும். ராஜ நீதியான செயலும் ஆகாது. இயந்திரங்களைப் பார்த்த மோகத்தினாலுண்டான அறியாமையே யாகும்.

இயந்திரத் தறிகளை வைத்துச் சின்ன முதலாளிகள் லாபம் பெறலாம். முப்பது பேருக்கு வேலை கிடைக்கலாம். ஆனால் அதே சமயம் ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் துணிக்குக் கிராக்கி இல்லாமற் போய்விடும். கிராக்கி இல்லாத துணியைக் குப்பையில்தான் போடவேண்டும். அதாவது அந்தத் தொழிலை நம்பி வாழும் குடும்பங்கள் பிச்சைக்காரர்கள் ஆக நேரிடும்!

வேலை கிடைக்காத ஏழை மக்கள் கூட்டத்தைக் குறைப்பதே அரசாங்கத்தின் நோக்கமும் முயற்சியும் என்று ஒரு புறம் சொல்லுவதும் மற்றொரு புறம் லட்சக்கணக்கான ஏழைகளின் தொழிலுக்கு ஆபத்து உண்டாக்குவதும் பைத்தியக்காரத்தனம்!

கைத்தறிகளை யெல்லாம் இயந்திரத் தறிகளாக்க முடியவே முடியாது. மின்சாரம் ஓடும் சில ஊர்களில்தான் மின்சாரத் தறிகள் ஓட்ட முடியும். சுற்றியுள்ள கிராமத் தறிகள் அழிந்து போக வேண்டியதுதான்!

எல்லாத் தறிகளையும் இயந்திரத் தறிகளாக்கி விடலாம் என்னும் யோசனையைப் பைத்தியக்காரத்தனம் என்றே கூற வேண்டும். ஐம்பது தறிகளுக்கு ஒரு தறி கூட மாற்ற முடியாது. கைத்தறிகளுக்கு வேறு உதவி செய்யாமற் போனாலும் புதிதாக இயந்திர விசைத்தறிகளை அனுமதிக்காமலிருந்தாலே போதும். இருப்பதையும்

பறிப்பது என்றால் பெரிய அநீதியாகும். எல்லாத் தறிகளையும் கூட்டுறவுத் தறிகளாக்க முயற்சி செய்வதும் முடியாத காரியமாகும்.

தாங்களாகவே கூட்டுறவு சேருவதற்கும் சர்க்கார் பலாத்காரத்தினால் கூட்டுறவு சேருவதற்கும் ரொம்பவும் வித்தியாசம் உண்டு. பலாத்காரத்தினால் செய்யப்படும் தொழில், அடிமைத் தொழிலாகப் பாவிக்கப்படும். கூட்டுறவுச் சங்கங்கள், நிர்வாகத்தில் குற்றம் குறையில்லாமல் தற்போது நடைபெறவில்லை. அந்த உத்தியோகஸ்தர்களின் நடவடிக்கைகளிலும் குறைகள் உண்டு.

சுதந்திரத் தொழிலைப் பற்றி எந்த நடவடிக்கை எடுத்தாலும் ஆய்ந்து ஆராய்ந்து செய்ய வேண்டும். சுதந்திரத்திலிருக்கும் நன்மையும் மகிழ்ச்சியும் வேறு எதிலும் இருக்க முடியாது.

பெரிய ஆலைத் துணியின் போட்டியே பெரும் போட்டியாகவும் கவலையாகவும் இருக்கும் போது கைத்தறித் தொழிலாளர்களுக்குப் புதுப் போட்டியும் புதுக் கவலையும் உண்டாக்குவது கொஞ்சமும் நியாயமாகாது.

சேலத்தில் கைத்தறிக்காரர்கள் மத்திய சர்க்கார் உதவி மந்திரி திரு எஸ்.என். மிஸ்ரா அவர்களுக்குக் கொடுத்த விண்ணப்பத்தை வேறொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம்.

அவர்களுடைய அழுகுரல் வெகு தூரத்திலுள்ள டில்லி சர்க்காரின் செவிகளுக்கு எட்டுமா? சென்னை சர்க்காராவது கருணை கூர்ந்து அவர்களுக்குப் பரிந்து பேசுவார்களா?

பொதுத் தேர்தல் வரப்போகும் இச் சமயத்தில் கைத்தறிக்காரர்களை முற்றிலும் விரோதித்துக் கொள்வது ராஜ தந்திரம் ஆகாது!

சபாஷ், பம்பாய்!

அமிருதசரஸ் காங்கிரஸின் தீர்மானத்துக்கு ஏற்ப பம்பாய் ராஜ்யத்தைப் பற்றி முடிவு செய்தாகி விட்டது.

இன்று மகாராஷ்டிரமும் குஜராத்தும் இணைந்த ஒரு பேர் இராஜ்யம் ஏற்படுத்துவது என்று அகில இந்திய காங்கிரஸ் கட்சியும் பாரதப் பிரதம மந்திரியும் முடிவாகத் தீர்மானித்து விட்டார்கள். மக்கள் சபையினர் அனைவரும் இம்முடிவை ஏகமனதாக ஒப்புக் கொண்டு விட்டனர். இதைக் கண்டு நமது பிரதமர் நேரு, "பாரத தேசத்தின் சரித்திரத்திலே பதியத்தக்க நிகழ்ச்சி" என்று உள்ளம் மகிழ்ந்து கூறியிருக்கிறார்.

பம்பாய் இந்த மகோன்னத முடிவுக்கு வருமுன் பல கஷ்டங்களுக்கு ஆளாக நேர்ந்தது. எவ்வளவு கஷ்டங்களுக்கு உள்ளானாலும் பம்பாய் பேரிராஜ்யமாகி விட்டது. உத்தரப் பிரதேசத்துக்கு ஏறக்குறைய சமமாக மதிக்கத்தக்க பேரிராஜ்யமாகவே ஆகிவிட்டது. ஆகவே இனி பாரதத்தில் வடக்கே உத்தரப் பிரதேசமும் நடுவில் மத்தியப் பிரதேசமும் மேற்கே பம்பாய் பேரிராஜ்யமுமாக மூன்று பெரிய ராஜ்யங்கள் இருக்கும்.

தென்னாட்டின் கதி என்ன?

தமிழ் நாட்டிலே காங்கிரஸ்காரர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? தமிழ் நாட்டுக் காங்கிரஸ் அதிகார பீடத்திலிருப்பவர்கள் இன்னும் தங்கள் 'வாய்ப் பூட்டுத் தீர்மான'த்தையே ஒட்டி நடக்கப் போகிறார்களா? தென்னாட்டின் கதி என்றென்றும் சிதறித் துண்டு துண்டாகக் கிடப்பதேதானா? சற்று யோசிக்க வேண்டும்.

கேரள நாட்டுத் தலைவர்கள் "தமிழ் நாட்டுடன் நாங்கள் இணையத் தயார்" என்று ஆரம்பத்தில் சொன்னார்கள். "எங்களை விரட்டாதீர்கள்!" என்று மலையாள ஜில்லாக்காரர்களும் தென் கன்னட ஜில்லாக்காரர்களும் கேட்டுக் கொண்டார்கள்.

தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பிலிருப்பவர்கள் இவற்றிற்கெல்லாம் செவி சாய்க்கவில்லை. திராவிடக் கட்சிகளுடன் ஒத்து ஊதி வந்தார்கள். இந்த நிலையில் கேரளத் தலைவர்களும், 'எங்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள்!' என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியை ஏன் பணிந்து கேட்க வேண்டும் என்று தீர்மானித்துத் தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள ஆரம்பித்தார்கள். இவற்றின் காரணமாக இன்று தமிழ்நாடு சின்னஞ் சிறு ராஜ்யமாகப் போகிறது.

பாரதம் அடிமைப்பட்டிருந்த காலத்தில் திரு சங்கரன் நாயர், "சென்னை மாகாணத்துக்கு மட்டுமாவது சுதந்திரம் கொடுங்கள். உலகில் எந்த சுதந்திர நாட்டுடனும் ஒப்பிடத்தக்க முறையில் ஆண்டு காட்டுகிறோம்" என்று பெருமிதத்தோடு கேட்டார். தமிழ் நாட்டுக்கிருந்த அந்தப் பெருமை யெல்லாம் போய் இன்று சின்னஞ் சிறு ராஜ்யமாகி விட்டது. எனினும் தமிழ்நாட்டுக் காங்கிரஸின் சமீப காலத்திய துரதிருஷ்ட சரித்திரத்தை மறந்துவிட்டு, பம்பாய் காட்டிய வழியைப் பின்பற்றுவதற்கு வேண்டிய மனமாற்றம் காங்கிரஸ் பதவியிலிருப்பவர்களுக்கு ஏற்பட ஆண்டவன் அருள்வானாக!

— கிண்டியில் —

காந்தி மண்டபத்தில்

ஆகஸ்டு 12-ம் தேதி

ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு

பிரார்த்தனைக் கூட்டம்

வழக்கம்போல் நூற்பு யக்ஞம், நாதஸ்வரம், துதி கீதங்கள், கீதை பாராயணம், ராமநாம பஜனை யாவும் உண்டு.

பாரதத்தின் **ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்**, சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா, ராஜாஜி ஆகியவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

பொதுமக்கள் அனைவரும் வருக!

நெருக்கடி முற்றுகிறது

சூயஸ் கால்வாய் நெருக்கடி நாளுக்கு நாள் முறுக்கேறி வருகிறது. பிரிட்டன் ஒருபுறம் துருப்புகளைச் சேகரிக்க முற்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்களும் துருப்புகளும் சூயஸ் பிரதேசத்துக்கு விரைந்து சென்று வருகின்றன. மற்றொரு புறம் பல நாடுகள் அடங்கிய சமாதான மகாநாட்டைக் கூட்டப் போவதாகப் பிரிட்டிஷ் சர்க்கார் பறைசாற்றி வருகின்றனர். சூயஸில் தொடர்புள்ள இருபத்து நாலு நாடுகளுக்கு அழைப்பு அனுப்பியிருப்பதாயும் அவர்கள் கூறுகின்றனர்.

மகாநாடு கூட்டிச் சூயஸ் பிரச்னையைப் பரிசீலனை செய்வதாயின், துருப்புகளைச் சேகரிக்க வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது? ஒரு புறம் துருப்புகளைச் சேகரித்துக் கொண்டே, மற்றொரு புறம் அப்பிரச்னையைத் தீர்க்க மகாநாடு கூட்ட முற்படுவது அர்த்தமற்ற காரியம் அல்லவா?


மகாநாடு கூட்டி அந்தப் பிரச்னையைப் பரிசீலனை செய்வதாயின், அதற்குத் தகுந்த சூழ்நிலை ஏற்படும்படி செய்ய வேண்டியது பிரிட்டனின் கடமையாகும். துருப்புகளைச் சேகரித்துத் தடபுடல் செய்வதால், திருப்திகரமான சூழ்நிலை உண்டாகாது.

பிரிட்டனின் போர் முஸ்தீப்புகளைக் கண்டு எகிப்து, சிரியா முதலிய அரபு நாடுகளும் துருப்புக்களைச் சேகரிக்கத் தொடங்கி யிருக்கின்றன.

சூயஸ் கால்வாய்க் கம்பெனி நிர்வாகத்தில் பங்குகள் உள்ள பிரிட்டனும், பிரான்ஸும் ஆத்திரமும் பரபரப்பும் அடைந்து அவசரக் கோலமாகக் காரியங்களைச் செய்ய முற்பட்டுள்ள இந்தச் சமயத்தில், பிரிட்டனில் உள்ள சில பிரபல பத்திரிகைகள் கோபம் காரணமாக நிதான புத்தியை இழந்து விடாமல், இந்த நெருக்கடியான சமயத்தில் பிரிட்டிஷ் சர்க்காருக்குச் சிறந்த யோசனைகள் கூற முற்பட்டிருக்கின்றன.

''சர்வதேசக் கப்பல் போக்குவரத்துக்கு இடையூறாகச் சூயஸ் கால்வாயை எகிப்து சர்க்கார் மூடினாலன்றி, போருக்குப் புறப்படுவது நியாயமாகாது. அப்

அபாயத் தீ!



பிரிட்டனும் பிரான்சும் எடுத்து வரும் நடவடிக்கைகளால் சூயஸ் நெருக்கடி முற்றி, உலகப் போர் மூண்டு விடுமோ என்ற பீதி உண்டாகி யிருக்கிறது.

படிப் போரில் இறங்கினால் பிரிட்டனும், பிரான்ஸும்தான் ஆக்கிரமிப்புக் குற்றத்துக்கு ஆளாக நேரிடும். பிறகு இந்தியாவின் தொடர்பு அற்றுப் போகும். அவ்விதம் இந்தியாவின் தொடர்பைக் கத்திரித்துக் கொள்வது புத்திசாலித் தனமாகாது'' என்று ''மாஞ்செஸ்டர் கார்டியன்'' என்னும் பத்திரிகை எச்சரித்திருக்கிறது.

பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு தங்களுடைய உடைமையாக வேண்டிய சூஎஸ்கால்வாய்க் கம்பெனியை, எகிப்து சர்க்கார் இப்போதே தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டார்கள் என்பதைத் தவிர, அவர்கள் வேறு குற்றம் எதுவும் செய்து விடவில்லை. எனவே, அதற்காகப் பிரிட்டனோ, பிரான்சோ போர் முழக்கம் செய்ய முற்படுவது எவ்விதத்திலும் நியாயமாகாது. சூஎஸ் கால்வாய்ப் பிரச்னையை ஒட்டி பிரிட்டன் யுத்தத்தில் இறங்குமாயின், அதன் விளைவாக ஆசியாவெங்கும் கொதிப்பு ஏற்படும் என்பது நிச்சயம். அதனால் பிரிட்டனுக்கு எவ்வித லாபமும் ஏற்படாது. ஆசியாவின் பகையைச் சம்பாதித்துக் கொள்வதன் மூலம் பிரிட்டனுக்கு நஷ்டம்தான் உண்டு. ஆகையால், ஆய்ந்தோய்ந்து பாராமல் அத்தகைய விபரீதமான காரியத்தில் பிரிட்டன் இறங்கி விடாது என்று நம்புகிறோம்.

வகுப்புவாத வரவு செலவுத் திட்டம்

இலங்கை இந்தியர் பிரஜா உரிமை சம்பந்தமாகவும் தமிழ் மொழி பற்றியும் நேர்மையின்றி நடந்து கொண்டு வரும் இலங்கை சர்க்கார், மேற்கொண்டும் இலங்கைத் தமிழர்களுக்கு அநீதி இழைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. சில தினங்களுக்கு முன் சர்க்கார் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி இலங்கைப் பார்லிமெண்டில் விவாதம் நடந்தபோது, அதை வகுப்புவாத வரவு செலவுத் திட்டம் என்று ஒருதமிழ் அங்கத்தினர் வர்ணித்தார். கொழும்புத் துறைமுகத்தில் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடியைப்போக்க, தமிழ்ப் பிரதேசங்களில் இருக்கும் காங்கேசன்துறை, திரிகோணமலை முதலிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று நிபுணர்கள் குழு சிபார்சு செய்திருந்தது. இலங்கையின் பொது நன்மைக்காகக் கூறப்பட்ட யோசனையைக் கூட, இலங்கை சர்க்கார் நிராகரித்து விட்டார்கள்! வகுப்புவாதத்தில் ஊறிய மனத்தில் நியாயம் அநியாயம் உணரும் சக்தி எப்படி ஏற்பட முடியும்? காங்கேசன் துறை, திரிகோணமலை முதலிய துறைமுகப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதால் தமிழ் பேசும் மக்கள் மட்டும்தான் பலன் அடைவார்களா? இலங்கை முழுதும் அல்லவா அதனால் பயன் அடையும்? அதனால் இலங்கையின் பொருளாதாரம் மேலும் மேலும் உயரத்தானே செய்யும்? 'என் இரண்டு கண் போனாலும் அடுத்த வீட்டுக்காரன் ஒரு கண் போனால் சரிதான்' என்பது போல இலங்கை சர்க்கார் காரியங்களைச் செய்து வருகிறார்கள்.

தமிழ்ப் பிரதேசத் துறைமுக அபிவிருத்திக்குப் பணம் ஒதுக்காத சர்க்கார் சிங்களப் பகுதிகளிலிருக்கும் துறைமுகங்கள் அபிவிருத்திக்குத் தொகை ஒதுக்கி இருக்கிறார்கள். கல்வி இலாகாவில் பெரும்பாலும் தமிழ் ஆசிரியர்களைப் புறக்கணித்து விட்டு, ஆயிரக் கணக்கான சிங்கள ஆசிரியர்களை நியமிப்பதற்கு மான்யம் அளித்திருக்கிறார்கள். மற்றும் பெரும்பாலான ஆக்கத் திட்டங்களும் சிங்களப் பகுதிகளிலேயே கைக்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதை ஸ்ரீ ஏ. அமிர்தலிங்கம் பார்லிமெண்டில் சுட்டிக்காட்டினார். இந்நிலையில் அவர் இலங்கை சர்க்கார் வரவு செலவுத் திட்டத்தை வகுப்புவாதத்திட்டம் என்று வர்ணித்ததில் தவறு இல்லை அல்லவா? இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை சர்க்கார் இடம் கொடுத்து வருவது மிகவும் வருந்தத் தக்கதாகும்.

ஜூலை மாதச் சிறுகதைப் போட்டி

நூறு ரூபாய் பரிசு பெற்ற

அன்பளிப்பு

என்னும் கதை

அடுத்த இதழில் வெளியாகிறது

பரிசு பெற்றவர் விலாசம்:

திரு ஏ. கே. பட்டுசாமி
24, குப்பைய செட்டித் தெரு
மேற்கு மாம்பலம், சென்னை-17

60 SECONDS TO NEW BEAUTY

the simplest, easiest, quickest way is with

PAN-STIK

MAKE-UP *by*

MAX FACTOR

HOLLYWOOD

Pan-Stik, the ideal cream-base make-up, strokes on in seconds, lasts for hours. Rich in lanolin, it's a real beauty treatment for your skin. It covers every flaw, freckle or trace of fatigue shadows, yet never looks "masky." It's the favorite make-up of the Hollywood Stars, both on and off the screen. Try Pan-Stik Make-Up today.

CARRY PAN-STIK WITH YOU EVERYWHERE



JULIE ADAMS

SOLE AGENTS IN INDIA: ORIENT COSMETICS PRIVATE LTD., MADRAS, BOMBAY, CALCUTTA.

நெசவாளர் கோரிக்கை

இந்திய சர்க்கார் உதவி திட்ட மந்திரி ஸ்ரீ எஸ். என். மிஸ்ரா அவர்கள் 4-8-56ம் தேதி சனிக்கிழமை சேலத்துக்கு விஜயம் செய்தபோது, சேலம், குகை கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர் சங்கம், கைத்தறி ஜமுக்காள மாஸ்டர் வீவர்கள் சங்கம், சேலம், குகை கைத்தறி ஜமுக்காள உற்பத்தியாளர் சங்கம், சேலம் சாயத் தொழிற்சாலை சொந்தக்காரர்கள் சங்கம் போன்ற பல முக்கிய சங்கங்கள் அவரை வரவேற்று ஓர் உபசாரப் பத்திரம் வாசித்து வழங்கினர். அதன் விவரமாவது:

இந்தியா முழுதும் சுமார் 28 லக்ஷம் கைத்தறிகள் இருக்கின்றன. சென்னை ராஜ்யத்தில் உள்ள ஐந்தரை லக்ஷம் தறிகளில் சேலம் ஜில்லாவில் மட்டும் ஒரு லக்ஷத்து நாற்பதாயிரம் தறிகள் வேலை செய்கின்றன. சுமார் ஆறு லக்ஷம் ஜனங்கள் இந்தத் தொழிலை நம்பி இந்த ஜில்லாவில் வாழ்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தறித் தொழிலுக்கென கணிசமான தொகை ஒதுக்கப்பட்டிருப்பதைப் பாராட்டுகிறோம். ஆனால் ஐந்தாண்டுத் திட்டங்களில் கைத்தறித் தொழிலுக்கென ஒதுக்கப்பட்ட தொகை, மில் துணி மீது செஸ் வரி விதித்து வசூலிக்கப்பட்ட தொகை இரண்டையுமே கைத்தறிநெசவாளர்களுக்குச் சர்க்கார் பயன்படுத்தவில்லை யென்பதை மிக்க வருத்தத்துடன் எடுத்துக் காட்ட விரும்புகிறோம். கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுமே அத் தொகைகளிலிருந்து உதவிகள் அளிக்கப்படுகின்றன. அதனால் சுமார் ஐந்தில் ஒரு பங்கு நெசவாளிகள் பயன் அடைகிறார்கள். பெரும்பாலான மற்ற நெசவாளிகளுக்கு எவ்விதமான உதவியும் அளிக்கப்படவில்லை.

மேலும் சர்க்கார் தற்சமயம் கொண்டுள்ள ஜவுளிக் கொள்கை கைத்தறித் தொழிலோடு தொடர்பு கொண்டுள்ள லட்சக்கணக்கான மக்களின் மனத்தில் பீதியை உண்டாக்கியிருக்கிறது. அதாவது, கைத்தறியைக் கட்டாயமாக ரிஜிஸ்தர் செய்து கொள்ள வேண்டுமென்ற உத்தரவும் நாளாவட்டத்தில் கைத்தறிகளை அழித்து விடக்கூடிய வகையில் புகுத்தப்படும் விசைத்தறியும் ஆகும்.

(1) கைத்தறிகளைக் குறைக்கும் நோக்கம் சர்க்காருக்கு இல்லை என்பதைச் சர்க்கார் தெளிவாகக் கூறிவிட வேண்டுமென்று கோருகிறோம். அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுகிறோம்.

(2) கைத்தறிக்கான சர்க்காரின் பண உதவி பாரபட்சமில்லாமல் எல்லா நெசவாளிகளுக்கும் கிடைக்க வேண்டுகிறோம்.

(3) கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கைத்தறிகளுக்குப் பதிலாக விசைத் தறிகள் கொடுப்பது என்ற திட்டத்தைக் கண்டிக்கிறோம். விசைத்தறி புகுத்தும் திட்டத்தைக் கைவிடும்படி கோருகிறோம். அதற்குப் பதிலாக அதிகப்படி துணி தேவைக்குக் கைத்தறிகளையே அதிகரித்து அதன் மூலம் துணி உற்பத்தியைப் பெருக்கலாம்.

கைத்தறி அம்சங்களில் துணி உற்பத்தியைப் பெருக்க நூதன அமைப்புகள் கண்டுபிடித்துப் பொருத்தச் சர்க்கார் உதவி புரிய வேண்டும்.

(4) கைத்தறிகளைக் கட்டாயமாக ரிஜிஸ்தர் செய்து கொள்ள வேண்டுமென்ற உத்தரவை ரத்து செய்ய வேண்டும். தசாம்ச நாணயம் புகுத்துவதில் சர்க்கார் எவ்வளவு முன் அறிவிப்பும் அவகாசமும் எடுத்துக் கொண்டார்களோ அதேபோல் தறிகளைக் கட்டாய ரிஜிஸ்தர் செய்துகொள்ளும் திட்டத்துக்கும் முன்னறிவிப்புச் செய்து அவகாசம் கொடுத்திருக்க வேண்டும். ஏனெனில் பல லக்ஷக்கணக்கான நெசவாளிகள் அந்த உத்தரவின் நன்மை தீமைகளையும் சர்க்காரின் கருத்தையும் அறிந்து கொள்ள அவகாசம் அவசியம். எனவே இவ்வுத்தரவை அமுலாக்குவதை நிறுத்தி வைக்க வேண்டுகிறோம்.

(5) சுதந்திரமாகத் தொழில் செய்யும் ஜீவாதாரமான உரிமையில் சர்க்கார் தலையிடக் கூடாது. தறிகளுக்குக் கட்டாயப் பதிவு, கூட்டுறவில் சேர்ந்தால் மட்டுமே உதவி, கைத்தறிகளை அழித்துவிடக் கூடிய விசைத்தறியைப் புகுத்துவது போன்ற சர்க்காரின் ஜவுளிக் கொள்கை நடவடிக்கைகள் கைத்தறித் தொழிலோடு சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் பீதியை உண்டாக்கியிருக்கின்றன. அவற்றைச் சர்க்கார் உடனடியாகப் போக்க வேண்டுமென்று மன்றாடி வேண்டுகிறோம்.

(6) அகில இந்திய கைத்தறி போர்டிலும் அதைப் போன்ற நெசவுத் தொழில் ஸ்தாபனங்களிலும் உள்ள நெசவாளிகள், மாஸ்டர் வீவர்கள், வியாபாரிகள் ஆகியவர்களுக்குத் தக்க பிரதிநிதித்துவம் அளிக்கக் கோருகிறோம்.



ஆயிரத்தில் ஒருவன்

'சுகி'

கடிதத்தைப் பிரித்துப் படித்த செண்பகத்தம்மாள் கண்ணீர் உகுத்தாள். தன்னுடைய பிறந்த வீட்டையே அடியோடு மறந்துவிட்ட அவளுக்கு வீட்டுப் பொருள்கள், வீட்டின் அமைப்பு நினைவுக்கு வந்தன. ஜன்னல் ஓரத்து வாதாமரத்து அறையில் இருந்துதான் கமலம் எழுதியிருக்க வேண்டும். அவள் உள்ளத்தில் வைரத்தின் கடுமை இருந்தது. இன்று அங்கே அவள் இதயத்தை அறுக்கும் வேதனையாக மாறி விட்டது. படித்துக் கொண்டு வந்த போது அந்த வரிகள் நெஞ்சை உலுக்கின.

''....அன்புள்ள அத்தை! உன் முகம்கூட எனக்கு மறந்து போய் விட்டது. நீ எங்கள் கிராமத்துப் பக்கமே வரவில்லை. உனக்கு அப்பா செய்த பாவம், என் தலையில் விடியப் போகிறது. உன்னை இரண்டாந்தாரமாகக் கொடுத்தார்; நீ அழுது கெஞ்சியும் பலன் இல்லாமல் போய் விட்டது. இன்று என்னையும் அதே போலக் கொடுக்கும் விதி என் முன்னே நிற்கிறது. இரண்டாந்தாரமாகக் கட்டிக் கொண்டு வாழ்வதைவிட, உயிரோடு சாவது மேல் என்று எண்ணுகிறேன். உன்னுடைய தவிப்பு எப்படி இருந்திருக்கும் என்பது எனக்குத் தெரியும். என்னுடைய தவிப்பும் உனக்கு நன்றாகப் புரியும்.''

சண்பகத்தம்மாளால் கடிதத்தை மேலே படிக்க முடியவில்லை. துக்கம் தொண்டையை வந்து அடைத்தது.

செண்பகத்தம்மாள் நல்ல குணவதி. பெருந்தன்மையின் உருவம். தனக்கு நேரிட்ட வைதவ்ய நிலையை யெண்ணி எண்ணி வருந்தாமல், தனக்குக் கிடைத்த பணத்தையும் எடுத்துக் கொண்டு, உடனடியாகத் தன்னோடு வந்து விடும்படி சொன்ன தமையன் சொல்லைத் தட்டி நடந்தாள். பெற்ற மகனைப் போல விக்கி விக்கி அழுத மூத்தாள் மகன் பாலசுந்தரம் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டகாரணத்தால், அவள் அந்த வீட்டை விட்டுப் போவதில்லை என்று உறுதி கூறினாள். பத்து வருஷ காலமாகத் தாய்க்கு மனம் நோக ஒரு வார்த்தை கூடப் பாலசுந்தரம் பேச மாட்டான். அவளும், அவன் மனம் வருந்தும்படி நடக்க மாட்டாள். பெற்ற பிள்ளையிலும் மேலாகப் பணிந்து அவள் மனம் நோகா இருக்க நடந்ததைப் பலரும் பாராட்டுவார்கள்; அதே போல அவனும் தாய் அன்போடு நடந்து கொண்டான். அவள் மாற்றுந்தாய் என்ற எண்ணம் துளிக்கூட பாலசுந்தரம் மனசில் இன்று வரையில் பிறந்ததும் இல்லை. தன் மூத்தாள் பிள்ளை என்ற எண்ணமும் அவள் உள்ளத்தில் எழுந்ததுமில்லை.

செண்பகத்தம்மாள் கண்ணீர் வடிப்பதைப் பார்த்த பாலசுந்தரம் பதறிப் போனான்.

''அம்மா! நீங்கள் கண்ணீர் வடிப்பதைக் காண எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. கடிதத்தில் நீங்கள் துக்கப்படும்படி என்ன இருக்கிறது?'' என்று கேட்டான்.

''இந்தக் கடிதத்தில் எழுதியிருப்பது உனக்கு மனம் புண்படும். ஆகவே நான் எவ்வாறு உன்னிடம் சொல்வது?''

''நீங்கள் எப்படி நடக்கச் சொன்னாலும் அதுபடியே நடப்பேன். நீங்கள் அழுது வாடக் கூடாது. என் தகப்பனார் செய்த பாவத்திற்கு, என் கடமைகள் எவையுண்டோ அதிலிருந்து சிறிதும் வழுவாமல் நடந்து கொள்ள வேண்டும். அது விஷயத்தில் என் மனம் என்றைக்குமே வருந்தாது. சொல்லுங்கள்.''

கடிதம் கை மாறியது. இளம் பெண்ணின் உள்ளம் இரண்டாந்தாரமாக வாழ நேரிடும் போது என்ன மாதிரித் துடிக்கும் என்பதின் சலனங்கள் துடித்துக் கொண்டிருப்பதை ஒவ்வொரு வரியும் அழுது புலம்பிற்று. படிக்கப் படிக்க அவனுக்கு அன்பு பிறந்தது.

''அம்மா, நீங்கள் இதைக் கொடுத்துப் படிக்கச் செய்தீர்கள். ஆனால் நான் என்ன செய்யவேண்டும், அந்தப் பெண்ணின் நோக்கம் என்னவென்று தெரிய வில்லையே!''

''நாளைக்குச் சொல்லுகிறேன்.''

அருமைத் தாயாரின் வார்த்தைக்குத் தலை தாழ்த்துவது போன்று பாலசுந்தரம் ஆபீசுக்குப் புறப்பட்டான்.

அன்று, நற்செய்தி ஒன்று அவனுக்காகக் காத்திருந்தது.

மானேஜர் அறைக்குள் நடுங்கிக் கொண்டு போனவனுக்கு ஆனந்தமான செய்தியைச் சொன்னார்; வெகுகாலமாக அவன் எதிர் பார்த்துக் கைவிடப்பட்ட செய்தி அன்று ஊர் ஜிதமாயிற்று. அவனுக்குக் காஷியர் வேலைக் குச் சிபாரிசு செய்திருந்தார்கள், மேலிடத்தில். ''கொடுக்கவும்; ஆனால் இரண்டாயிரம் ஜாமீன் கட்டவேண்டும்'' என்றும் சொல்லப் பட்டது. சமீபத்தில் காஷியர் வேலை பார்த்த வர், பணத்தை எடுத்துக்கொண்டு கம்பி நீட் டியதால் இந்த ஜாமீன் தேவைப்பட்டது.

மானேஜருக்கு வளைந்து கொடுத்து வணக் கம் போட்டுவிட்டு முகத்தில் மகிழ்ச்சி பொங்க வெளியே வந்தான். அவன் சக—குமாஸ்தாக்கள் விவரம் கேட்டுத் தெரிந்து பூரித்துப் போனார்கள்.

வீட்டுக்கு வரும்போது, பெரிய பந்தாக மல்லிகைச் செண்டு வாங்கினான். பாலசுந்த ரத்தின் குஷி என்னவென்று வீட்டில் இருப்ப வர்களுக்குத் தெரியாது. அவன் 'அம்மா' அன்று முழுவதும் ஏதோ எண்ணிக் கொண் டிருந்தாள். சாப்பாடு கூட வேண்டாம் என்று மறுத்து விட்டாள். அவள் மனசிலே ஓடிக் கொண்டிருக்கும் வேதனையைக் கேட்கப் பயம்; அதனால் வற்புறுத்தி உண்ணச் சொன் னாள், மருமகள்.

''அம்மா, உனக்குச் சந்தோஷமான செய்தி ஒன்று வந்திருக்கிறது. அதைக் கேட்டால் நீ மகிழ்ச்சியடைவாய்'' என்றான் பாலசுந்தரம்.

மகனுடைய குதூகலம் அவள் நெஞ்சைத் தொட்டது. அடுத்தகணம் அவள் காலில் விழுந்து வணங்கினான். ''அம்மா! எனக்குக் காஷியர் உத்தியோகம் வந்திருக்கிறது. உன் ஆசீர்வாதம் தேவை'' என்று எழுந்து வாய் புதைத்து நின்றான். தாயார் திடுக்கிட்டாள். அவள் உடல் புல்லரித்தது. மருமகளும் வணங்கினாள். ஆனால் செண்பகத்தம்மாள் முகம் மட்டும் வாடியிருந்தது.

''ஏன் அம்மா, உனக்குச் சந்தோஷமாக இல்லையா? ஒரு விஷயம் சொல்லவே மறந்து விட்டேன். நம்முடைய பணம் இரண்டாயி ரம் ஜாமீன் கட்டவேண்டும். அதற்குப் பாங்கி வட்டி கிடைக்கும். உன் அனுமதி பெற்று, நானே எடுத்துக் கொடுத்துவிட்டால் உடனடி யாக நான் உத்தியோகம் பார்க்கலாம்'' என்றான் பாலசுந்தரம்.

''அதற்கென்ன; நாளைக் காலையில் எடுத் துக் கொள். அது உன்னுடைய பணந்தான். நீதான் அம்மா பேரில் இருக்க வேண்டும் என்று, என்பேரில் பாங்கியில் போட்டிருக் கிறாய். உன் அப்பா பணம் அத்தனையும் என் பேரில் இருந்தால் என்ன? உன் பேரில் இருந் தால் என்ன?'' என்றாள் செண்பகத்தம்மாள்.

''இல்லை அம்மா! நீ சொல்கிறபடி நடப்ப தில்தான் எனக்கு மகிழ்ச்சி. மற்றப்படி, உனக்கு யார் இந்த உலகத்தில் சொந்தம்? எனக்கும் வேறு யார் சொந்தம்?'' என்று கூறினான் பாலசுந்தரம்.

** ** **

அன்று காலை மானேஜர் அறைக்குள் நுழைந்த பாலசுந்தரம், சந்தோஷமாகப் போனது போல வெளியே வர முடியவில்லை. மானேஜர் வார்த்தைகள் அத்தனை கடுமை யாக இருந்தன.

''பாலசுந்தரம்! உன் பேச்சை நம்பி நான் கடிதம் எழுதி விட்டேன். இன்று நீ பணம் கட்டுவதாகச் சொன்னாய். கட்டவில்லை'' என்றார் மானேஜர்.


''அம்மா 'இன்னும் ஒரு வாரம் போகட் டும்' என்றார். அதுதான் யோசிக்கிறேன்'' என்றான் பாலசுந்தரம்.

''உன் அம்மா தாயன்போடு நடப்பது போல நடந்திருந்தால் இன்று நீ பணம் கட்டி யிருப்பாய். பெற்ற பிள்ளையாக இருந்தால் உனக்கு இன்று பணம் தராமல் இருப்பாளா? அம்மாவாம், அம்மா!''

பாலசுந்தரத்தின் முகம் கன்றி விட்டது.

''ஸார்! தயவு செய்து என் மனத்தைப் புண்படுத்த வேண்டாம். பணம் என் அம்மா என்றைக்குத் தருகிறாளோ அன்றைக்குக் கட்டுகிறேன். இல்லாது போனால் வேறு யாருக்காவது நீங்கள் காஷியர் வேலையைக் கொடுத்து விடுங்கள்.''

பதிலுக்குக் காத்திராமல் வெளியே வந்த வன் தனது இடத்தில் வந்து யோசித்தான். அம்மா எதற்காகத் தாமதம் செய்கிறாள்? இது நாள் வரை ஒரு காரியத்துக்கும் யோசிக் காதவள் இன்றைக்கு யோசிப்பானேன்? தன்னுடைய சம்பளம், அந்தஸ்து உயர்வதில் அவளுக்கு அன்பில்லையா? இவ்வாறு சிந்தனை கள் சூழ்ந்து அவன் உள்ளத்தைக் குழப்பின.



நாகப்பட்டினம் நாவல்டி ஸ்டோர்ஸ் புரொப்ரைட்டரும் கல்கி, தினமணி ஏஜண்டுமான ஸ்ரீ வெங்கட்ராமய்யர் குமாரத்தி சௌபாக்யவதி பவானிக்கும் சென்னை, கோடம்பாக்கம் ஸ்ரீ வெங்க டேசய்யர் குமாரனும் தென்பிராந்திய ரயில்வே, மதராஸ் சீப் ஆடிடர் ஆபீசைச் சேர்ந்த சிரஞ்சீவி பத்மநாபன், பி.காம் அவர்களுக்கும் 9-7-56 அன்று நாகப் பட்டினத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க, மணமக்கள்!

மறு நாளும் வந்தது. அவன் தாயார் இன்னும் இரண்டு தினங்கள் பொறுத்துக் கொள்ளச் சொன்னாள்.

பாலசுந்தரம் துறவியா? அவன் வாலிப உள்ளத்தில் புதிய உருவம் கிளைத்தது. பாவி மானேஜர் சொல்லிய வார்த்தைகள் அவனுக்கு முள்ளாக உறுத்தின.

"அம்மா! நான் பணம் கட்டுவதாக மானேஜரிடம் வாக்குக் கொடுத்து விட்டேன். இல்லா விட்டால் இன்று நான் ஆபீஸ் போகப் போவதில்லை."

ஒரு நாளும் எதிர்த்தும் இரைந்தும் பேசாத தன் மகன் பேசி விட்டது கண்டு அவளுக்கு நெஞ்சம் பகீர் என்றது.

"பாலசுந்தரம்! நான் பணத்தை வைத்துக் கொள்ள ஆசைப்படவில்லை. இன்று நீ பெரிய சோதனையில் மாட்டிக் கொண்டாய். அது போல நானும் ஒரு சோதனையில் மாட்டிக் கொண்டேன்."

தாயார் வருத்தம் அவனுக்குத் தெரிந்தது. ஆனால் கோபத்தால் அதை 'உம்' கொட்டிக் கேட்கக்கூட அவன் விரும்பாமல் 'உர்' என்று இருந்தான்.

ஆபீஸில் நடந்த அவமானம் ஆத்திரமாகப் பீறிட்டுக் கொண்டு வந்தது என்பதை அம்மா அறிந்து கொண்டாள். "நான் சொல்வதை நீ கேட்பாய் என்ற நம்பிக்கை உண்டு. இதோ பாங்கி பாஸ் புத்தகம். கொண்டு போ. எங்கே கையெழுத்துப் போட வேண்டுமோ சொல், போடுகிறேன்" என்று தாயார் சொன்னாள்.

"அம்மா! நீ புண்பட்டிருப்பதாகத் தெரிகிறது. என்ன காரணம் என்று சொல்."

"நான் கடிதம் ஒன்றை எதிர்பார்க்கிறேன். அக்கடிதம் வந்ததும் பணம்கொடுக்க எண்ணினேன். என் அண்ணாவின் மகள் கமலம் என்ன எழுதப்போகிறாளோ....?"

அந்தச்சமயம் தபால்காரன் வந்து, "செண்பகத்தம்மாள்" என்று குரல் கொடுத்தான். செண்பகத்தம்மாள் கடிதத்தை வாங்கிப் படித்துவிட்டு, பாலசுந்தரத்தினிடம் கொடுத்தாள். அவன் வாங்கிப் பார்த்தான். செண்பகத்தம்மாளின் தமையன் மகள் கமலம் தான் எழுதியிருந்தாள். பணம் இல்லாத காரணத்தினால்தான் அவள் இரண்டாந்தாரமாக ஒரு கிழவனுக்கு வாழ்க்கைப்படவேண்டியிருக்கிறது என்றும், பண உதவி கிடைத்தால் தான் தன் வாழ்வு மலர வழி இருக்கிறது என்றும் எழுதியிருந்தாள்.

"ஆம், அம்மா! பணம் இல்லாத குற்றத்துக்காக அவள் வாழ்வு கசங்க வேண்டாம். உன் பணத்தை நீ கொடுத்துக் காப்பாற்ற முடிந்தால், அதைச் செய். நிச்சயம் அம்மா. உன் மனச் சாந்திக்கு எதிராக உன் பிள்ளை நடக்க மாட்டான்" என்று பாலசுந்தரம் சொன்னதைக் கேட்ட போது செண்பகத்தம்மாளின் உடலும் உள்ளமும் குளிர்ந்தன.

"நீ தியாகி. உனக்கு வருகிற உத்தியோக உயர்வு தடைப்படுகிறதே என்று வருந்துகிறேன். ஆனால், பணத்தைவிட முக்கியம் வாழ்க்கை. பணத்தை எடுத்து வா. என் அண்ணன் வீட்டுக்குப் போய், அவர் மகள் விழ இருக்கும் படுகுழியிலிருந்து காப்பாற்ற வேண்டும். இதற்கு உன் தியாகந்தான் பெரிது!" என்று சொன்னாள்.

துளிக்கூட வருத்தமோ சோகமோ இல்லாமல் வீரனைப் போல நடந்து கொண்ட பாலசுந்தரம், அன்று பணம் எடுத்தான்; அதைக் கொண்டு வந்து தாயிடம் கொடுத்தான்.

"நான் வருவதற்கில்லை. உன் மாமாவிடம் போய்ச் சொல். இதுவரை நான் நம் வீட்டுச் சொத்தில் எதையும் என் குடும்பத்துக்குச் செலவு செய்யவில்லை. இதுதான் அம்மா செய்கிற உதவி. இந்தப் பணத்தை நன்றாகப் பயன் செய்து கொண்டு, என் மருமகள் கமலாவின் வாழ்வைப் பலியிடாமல் நன்றாக வாழ்க்கைப்படுத்தச் சொல்" என்று கடமையை அவன் தலையில் சுமத்தினாள்.

பாலசுந்தரம், தன் தாயின் கடமையைத் தலைமேல் கொண்டு பணத்தோடு ஆபீசுக்குச் சென்றான். மானேஜரிடம் நடந்ததைக் கூறி லீவு கேட்டான். அவர் திகைத்துப் போனார். பணம் கையிலிருக்கும்போது அதைக் கட்டி விடச் சொன்னார்.

"சார்! என் அம்மாவைச் சாவிலிருந்து மீட்பதற்கு வாக்குக் கொடுத்தேன். அவள் உயிருள்ளவரையில் நான் எந்தக் காரியத்தையும் அவள் விருப்பத்துக்கு மாறாகச் செய்ய மாட்டேன். நீங்கள் எனக்கு லீவு கொடுத்தே ஆக வேண்டும்" என்றான்.

பாறையைப் போன்ற அவனுடைய அசையாத தன்னம்பிக்கையில், தம்மை மறந்தார் மானேஜர். "ஆயிரத்தில் ஒருவன்" என்று அவர் வாய் முணுமுணுத்தது. பாலசுந்தரம் வெளியே போய்க் கொண்டிருந்தான்.

சூயெஸ் கால்வாயின் கதை

சாவி

பாரத நாட்டின் புண்ணிய நதியான கங்கை எகிப்து நாட்டின் ஜீவநாடியான நைல் நதியைக் கூவி அழைத்தது.

''என்ன விசேஷம்?'' என்று கேட்டது நைல் நதி.

''அஸ்வான் அணைக்கட்டு வேலை எந்த மட்டில் இருக்கிறது?'' என்று கேட்டது கங்கை நதி.

''ஓகோ! அதைக் கேட்கத்தான் கூப்பிட்டாயா? சொல்கிறேன் கேள்! பாரதப் பிரதமர் நேருவும், நாஸரும், டிட்டோவும் ப்ரியோனியில் கூடி வல்லரசுகளின் போக்கைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டார்கள் அல்லவா?''

''ஆமாம்.''

''எகிப்து நாடு அந்த நடுநிலைமை நாடுகளுடன் சேர்ந்து கொண்டிருப்பது அமெரிக்காவுக்குப் பிடிக்கவில்லை போல் இருக்கிறது!''

''ஆமாம்; அதற்கும் அஸ்வான் அணைக்கட்டு வேலைக்கும் என்ன சம்பந்தம்?''

''இருக்கிறது: அஸ்வான் அணைக்கட்டு வேலைக்கு அமெரிக்கா கோடிக் கணக்கில் டாலர் உதவி செய்வதாக ஏழு மாதங்களுக்கு முன் வாக்களித்தது. இப்போது எரிச்சல் காரணமாக மகானுபாவர் டல்லஸ் அந்த உதவியை மறுத்து விட்டார்.''

''அப்படியா?''

''ஆமாம்; அவரைப் பின்பற்றி பிரிட்டனும் உலக பாங்கியும் கூட உதவியை நிறுத்தி விட்டன. மூன்று மைல் நீளமுள்ள இந்த மாபெரும் அணைக்கட்டு கட்டி முடிக்க எகிப்துக்குக் கோடி கோடியாகப் பணம் தேவை.''

''அம்மம்மா! அவ்வளவு பெரிய அணைக்கட்டா அது?''

''ஆமாம், எகிப்து விவசாயிகளுக்கு இது ஒரு வரப் பிரசாதம் போன்றது. இந்தியாவைப் போல் எகிப்தும் விவசாய நாடுதான். விவசாயத்துக்கு ஜீவாதாரமானது தண்ணீர் தானே? இங்கே ஓடும் நைல் நதியில் அஸ்வான் பிரதேசத்துக்கு அருகில் உள்ள கலாப்ஷா என்னுமிடத்தில் ஒரு மாபெரும் அணைக்கட்டைக் கட்டித் தேக்கி விட்டால் எகிப்து தேசம் முழுதும் எப்போதும் தண்ணீருக்குப் பஞ்சம் இராது. பாசன வசதியைப் பெருக்கினுல் அன்றி எகிப்தின் நிலச் சீர்திருத்தமும் அதனுல் விவசாயிகள் அடையக் கூடிய பயனும் வியர்த்தமாகி விடும்!''



எஞ்ஜினியர் பர்டினண்ட் டி லெஸப்ஸ்

''அப்படியா? இந்த அணைக்கட்டினுல் எத்தனை ஏக்கர் நிலங்களை மேலும் சாகுபடி செய்யலாம்?''

''இப்போது அறுபது லட்சம் ஏக்கர்களைப் பயிர் செய்ய முடிகிறது. அஸ்வான் அணையைக் கட்டினுல் தொண்ணூற்றைந்து லட்சம் ஏக்கர்கள் பயிராகும்!''

''அமெரிக்காவின் உதவியின்றி இந்த அணைக்கட்டு வேலையை உங்களால் முடித்து விட முடியாதா?''

''பேஷாக முடியும் என்றுதான் எங்கள் தலைவர் நாஸர் நம்புகிருர். அமெரிக்க உதவியே அவசியமில்லை என்று கூறி சூயெஸ் கால்வாய்க் கம்பெனியை எகிப்தின் தேசியச் சொத்தாக்கி விட்டதாக அறிவித்திருக்கிருர். அதைக் கேட்டு இப்போது அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் முதலிய எல்லா நாடுகளும் அதிர்ச்சி அடைந்து கிடக்கின்றன.''

''அந்த நாடுகள் என்ன சொல்கின்றன?''

''அநியாயம்!'' என்கிறது பிரிட்டன்.

''அக்கிரமம்!'' என்று சொல்கிறது பிரான்ஸ்.


''அற்பத்தனம்!'' என்கிறது அமெரிக்கா.

''உங்கள் நாஸர் என்ன சொல்கிருர்?''

'''எல்லோருக்கும் பெப்பே! உங்களால் ஆனதைப் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று சொல்கிருர்.''

''ஆமாம்; சூயெஸ் கால்வாயைத் தேசியமயமாக்கினுல் அஸ்வான் அணைக்கட்டை எப்படிக் கட்ட முடியும்?''

''அப்படிக் கேள்; சூயெஸ் கால்வாய் மத்திய கிழக்குப் பிரதேசத்தில் ஒரு முக்கியமான இடத்தில் அமைந்திருக்கிறது. அது சர்வ தேசங்களுக்கும் கடல் மார்க்கமாக விளங்குகிறது. எல்லா மேலை நாட்டுக் கப்பல்களும் கீழ்த் திசைகளுக்குச் செல்ல சூயெஸ் கால்வாயின் வழியாகத்தான் போக வேண்டும். சூயெஸ் கால்வாய்க் கம்பெனியின் நிர்வாகத்தில் பல தேசங்களுக்குப் பங்குகள் இருக்கின்றன. கால்வாய்க் கம்பெனியை தேசிய உடைமையாக்கி விட்டதால் இப்போது எகிப்துக்கு வருஷம் ஒன்றுக்குப் பத்துக் கோடி டாலர் வருமானம் கிடைக்கும். அதாவது நாற்பத்தேழரைக் கோடி ரூபாய். இந்தப் பெரும் தொகையைக் கொண்டு அஸ்வான் அணைக்கட்டு வேலையை முடித்து விடலாம் என்பதுதான் நாஸரின் நம்பிக்கை!''



"அந்நிய நாடுகளுக்குப் பங்குகள் இருப்பதாகக் கூறினாயே. யார் யாருக்கு எவ்வளவு பங்குகள் இருக்கின்றன?"

"பிரிட்டனுக்குத்தான் அதிகமான பங்குகள் இருக்கின்றன! இந்தக் கம்பெனியின் மொத்தப் பங்குகள் எட்டு லட்சம். இதில் பிரிட்டிஷ் சர்க்காரிடம் 3,53,504 பங்குகள் இருக்கின்றன."

"இந்தக் கம்பெனியில் மொத்தம் எத்தனை டைரக்டர்கள்?"

"முப்பத்திரண்டு பேர்; இவர்களில் பதினாறு பிரஞ்சுக்காரர்கள், ஒன்பது பிரிட்டிஷ்காரர்கள், ஐந்து எகிப்தியர், ஒரு அமெரிக்கர், ஒரு டச்சுக்காரர்."

"இந்தக் கால்வாய்க் கம்பெனியில் பிரிட்டிஷாருக்கு மட்டும் எப்படி இத்தனை பங்குகள் கிடைத்தன?"

"அதுதான் இதில் வேடிக்கை. அந்த வேடிக்கையைச் சொல்ல வேண்டுமானால் சூயெஸ் கால்வாயின் கதை முழுவதையுமே உனக்குச் சொல்ல வேண்டும்."

"பேஷாகச் சொல்லு; கேட்கிறேன்."

"உலக நாடுகளை ஒன்றுபடுத்த இதுவரை மனிதன் சாதித்துள்ள சாதனைகளில் சூயெஸ் கால்வாயை வெட்டியதற்கு இணையான சாதனை வேறு ஒன்றுமே கிடையாது.

இந்த அரிய சாதனையை முதன் முதல் செய்யக் காரியத்தில் இறங்கியவர் ஒரு பிரஞ்சுக்காரர். மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் இணைக்கும் இந்தக் கால்வாயை வெட்ட வேண்டுமென்று எண்ணிய அந்தப் பிரஞ்சு எஞ்சினியர் பெயர் பர்டினண்ட் டி லெஸ்ஸெப்ஸ். இதன் நீளம் 103-மைல். அகலம் இருநூறு அடியிலிருந்து முந்நூறு அடி. ஆழம் 34 அடி. முதல் முயற்சியில் 26 அடி ஆழமே வெட்டப்பட்டது. பிறகு மேலும் இரு தடவைகள் மேற்படி கால்வாயில் பெரிய கப்பல்கள் போகும் அளவுக்கு அகலத்தையும் ஆழத்தையும் பெரிதாக்கினார்கள். 1886-ம் ஆண்டில் இந்தக் கால்வாயின் வழியாக ஒரு கப்பல் போவதற்கு முப்பத்தாறு மணி நேரம் பிடித்தது. இப்போது பதினொரு மணி நேரத்துக்குள்ளாகவே போய் விடுகிறது.

இந்தக் கால்வாய் வடக்கு தெற்கில் அமைந்திருக்கிறது. செங்கடலின் வடமேற்கு மூலையில் தொடங்கி மத்தியதரைக் கடலில் உள்ள (Port Said) சையட் துறைமுகத்தில் முடிகிறது. இந்தக் கால்வாய் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள பதினாயிரத்துக்கு மேற்பட்ட மைல் தூரத்தை ஏழாயிரம்; மைல்; தூரமாகக் குறுக்கி விடுகிறது. 48 தேசங்களின் கப்பல்கள் இக்கால்வாய் வழியை உபயோகப் படுத்துகின்றன. வருஷத்துக்குப் பத்துக் கோடியே இருபது லட்சம் டன் எடையுள்ள சாமான்கள் இதன் வழியாகச் செல்கின்றன. அதாவது பனாமா கால்வாயில் செல்லுவதைக் காட்டிலும் இரு மடங்கு அதிகம். இந்தக் கால்வாய் எகிப்தின்

சூயெஸ் கால்வாயையும் அதைச் சுற்றியுள்ள நாடுகளையும் படத்தில் காணலாம். அம்புக்குறி சூயெஸ் கால்வாயைக் காட்டுகிறது.



பாலைவனப் பிரதேசத்தில் இருப்பதால் இதில் எப்போதும் பாலைவன மணல் விழுந்து கால்வாயைத் தூர்த்த படியே இருக்கிறது. ஆகவே கால்வாயில்விழும் இந்த மணலைத் துப்புரவாக்க வருஷம் முழுதும் யந்திரக் கப்பல்கள் வேலை செய்த வண்ணமாக இருக்கின்றன.

முதல் முதலாக சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தக் கால்வாயை வெட்ட வேண்டுமென்று பாக்தாத் கலீப் எண்ணினார். பிறகு 1779-ல் நெப்போலியன் எகிப்துக்கு விஜயம் செய்தபோது செங்கடலையும் மத்திய தரைக் கடலையும் இணைப்பதால் ஏற்படக் கூடிய பயனை எண்ணிப் பார்த்தார். ஆனால் கடைசியில் பிரஞ்சு எஞ்சினியர் லெஸ்ஸெப்ஸ் தான் இந்தப் பெரு முயற்சியில் ஈடுபட்டார்.

1854-ம் ஆண்டில் எகிப்தின் வைஸராயிடம் கால்வாய் வெட்டுவதற்குச் சம்மதம் பெற்றார். லெஸ்ஸெப்ஸின் முயற்சிக்குப் பல சோதனைகளும் இடையூறுகளும் ஏற்பட்டன. அவற்றையெல்லாம் தாண்டி வெற்றி கண்ட பிறகு கால்வாய் வெட்டுவதற்குப் போதிய மூலதனம் கிடைக்கவில்லை. எனவே 1885-ல் ஒரு கம்பெனியைத் தொடங்கித் திட்டங்கள் போட்டுப் பங்குகள் சேகரித்தார்.

நாலுகோடி டாலர் மூலதனத்தில் தொடங்கப்பட்ட மேற்படி கம்பெனியின் பங்குகளில் பாதிக்குமேல் பிரஞ்சுக்காரர்கள் வாங்கினார்கள். நாலில் ஒரு பாகம் பங்கைத் துருக்கியும், இன்னும் சில தேசங்கள் சில பங்குகளும், மிகுந்த பங்குகளை எகிப்து வைஸராயும் வாங்கினார்கள்.

1859-ம் ஆண்டு ஏப்ரல் 25-ந்தேதி ஆரம்பமான கால்வாய் வெட்டும் வேலை 1869 நவம்பர் 9-ந்தேதி முடிவு பெற்றது. அந்த வருஷமே சூயெஸ் கால்வாயில் கப்பல்கள் போக்குவரத்தும் ஆரம்பமாயிற்று.

இன்று சூயெஸ் கால்வாயை மற்றெல்லாத் தேசங்களைக் காட்டிலும் பிரிட்டனே அதிகமாக உபயோகப்படுத்துகின்றது. மேற்படி கால்வாயின் வழியாகச் செல்லும் கப்பல்களில் மூன்றில் ஒரு பங்கு பிரிட்டனுடையதாகவே இருக்கின்றன. அதுமட்டுமல்ல. மேற்படி கால்வாயின் பாதுகாப்புப் பொறுப்பும் சமீப காலம் வரையில் பிரிட்டிஷ் துருப்புகளிடமே இருந்து வந்தது.

பல்லாயிரக்கணக்கான எகிப்து நாட்டு மக்களின் உழைப்பால் உருவான சூயெஸ் கால்வாயின் இருகரையிலும் சமீப காலம் வரை பிரிட்டிஷ் துருப்புகளே இரவும் பகலும் காத்து வந்தன. ஆயினும் இந்தக் கால்வாய் வெட்டும் மாபெரும் பணியில் பிரிட்டன் ஒரு கல்லைக்கூட எடுத்துப் போட்டு உதவவில்லை. பணம் கொடுத்தும் உதவியதில்லை!''

'' அப்படியிருந்தும் பின் எவ்வாறு பிரிட்டிஷாருக்கு சூயெஸ்கால்வாயில் இத்தனைஉரிமையும் பொறுப்பும் அதிகாரமும் ஏற்பட்டன?''

'' அதுதான் வேடிக்கை! அப்போதைய எகிப்து மன்னர் வீண் செலவு செய்யும் ஊதாரியாக இருந்தார். அதன் பயனாக எகிப்து மக்கள் வறுமையிலும் துன்பத்திலும் உழல நேர்ந்ததால் சூயெஸ் கால்வாய் அடிமைப்பட நேர்ந்தது.''

'' அது எப்படி!''

''சூயெஸ் கால்வாயை வெட்டி முடித்து ஆறு வருஷங்கள் ஆயின. மேற்படி கால்வாய்க் கம்பெனியின் நிர்வாகம் ஒரு சர்வதேசக் கம்பெனியிடம் இருந்தது. அந்தக் கம்பெனி 1968-ம் வருஷம் வரை கால்வாயின் அனுபவ சலுகையைப் பெற்றிருந்தது. சூயெஸ் கால்வாயை வெட்ட முயற்சி எடுத்துக் கொண்ட சமயம் பிரிட்டன் அதை விரும்பவில்லை. கால்வாய் வெட்டுவதற்கு ஆட்சேபனை செய்தது. இதற்குக் காரணம் மேற்படி கால்வாயினால் தன்னுடைய கடல் ஆதிக்கம் மங்கிவிடும் என்று பிரிட்டன் பயந்ததுதான். ஆயினும் அப்போது பிரிட்டனின் பிரதம மந்திரியாயிருந்த டிஸ்ரேலி அம்மாதிரி எண்ணவில்லை. அந்த அபிப்பிராயம் தவறு என்றே எண்ணினார். அப்போது, 1875-ம் ஆண்டில் எகிப்து மக்கள் உண்ண உணவும் உடுக்க உடையுமின்றித் தவிக்க நேர்ந்தது. உடனே மன்னர் தமக்குச் சொந்தமான சூயெஸ் கால்வாய்க் கம்பெனிப் பங்குகளைப் பிரிட்டனிடம் விலை கூறினார். உடனே டிஸ்ரேலி விக்டோரியா மகாராணிக்குப் பின்வருமாறு ஒரு ரகசியக் கடிதம் எழுதினார்:

'எகிப்து அரசர் பண நெருக்கடியில் தவித்துக்கொண்டிருக்கிறார். ஆகவே, சூயெஸ் கால்வாய்க் கம்பெனியில் அவருக்குள்ள பங்குகளை விற்றுவிடத் தயாராயிருக்கிறார். அவருக்கு இம்மாதம் 30ந் தேதிக்குள் நாற்பது லட்சம் பவுன் மிக மிக அவசியமாகத் தேவை என்று சொல்கிறார்......மூச்சு விடுவதற்குக்

கூட அவகாசம் இல்லை. ஆகையால் இதை நாம் செய்தே ஆக வேண்டும்.'

விக்டோரியா மகாராணி இதற்கு ஒப்புக் கொண்டார். உடனே பார்லிமெண்டைக் கூடக் கலந்து கொள்ளாமல் கடனுகப் பணம் வாங்கி எகிப்து மன்னரின் பங்குகளைக் குறைந்த விலைக்குப் பேரம் பேசி வாங்கி விட்டார். இதற்குப் பிறகு பிரஞ்சுக்காரர்கள் தங்கள் பங்குகளையும் பிரிட்டனுக்கு விற்று விட்டார்கள். இதனுல் பிரிட்டிஷார் வசம் பெரும்பகுதிப் பங்குகள் வந்துவிட்டன. அதை வைத்துக் கொண்டு பிரிட்டஷார் மேலும் சூழ்ச்சி செய்து சூயெஸ் கால்வாயின் பாதுகாப்புப் பொறுப்பையும் தங்களுடையதாக்கிக் கொண்டார்கள். அதுமுதல் நீண்டகாலமாக சூயெஸ் கால்வாயின் பாதுகாப்புப் பொறுப்பு பிரிட்டனிடமே இருந்து வந்தது.

ஆயினும் மேற்படி கால்வாயின் பாதுகாப்புப் பொறுப்பு எகிப்துக்கே உரியதென்றும், பிரிட்டிஷ் துருப்புகள் சூயெஸ் கால்வாயிலிருந்து வாபஸாகிவிட வேண்டியதுதான் என்றும் ஒரே தீர்மானமாகக் கூறிக் கிளர்ச்சி செய்தது எகிப்து. ஆனுல் பிரிட்டன் தன் துருப்புகள் பூராவையும் வாபஸ் வாங்குவதற்குத் தயங்கித் தயங்கி மீனமேஷம் பார்த்தது. இல்லாத பொல்லாத காரணங்களையெல்லாம் சொல்லிக் காலம் கழித்தது. பிறகு 'எல்லாத் துருப்புகளையும் வாபஸ் வாங்கிக் கொள்கிறேம். நாலாயிரம் இராணுவத் தொழில் நிபுணர்கள் மட்டும் இன்னும் கொஞ்ச காலத்துக்கு சூயெஸில் இருக்கட்டும்' என்று கூறியது.

''கூடவே கூடாது'' என்று ஒரேயடியாக மறுதளித்து விட்டது எகிப்து.

இப்படி ஒருவரை ஒருவர் நம்பாமல் பயந்து காலம் தள்ளிக் கொண்டிருந்த சமயத்தில் 1953-ம் ஆண்டில் அமெரிக்க ராஜாங்கக் காரியதரிசி டல்லெஸ் எகிப்துக்கு விஜயம் செய்தார். அப்போது எகிப்தின் வெளிநாட்டு மந்திரியாயிருந்த மகம்மது பவ்ஸி அவரிடம் சூயெஸ் விஷயமாகப் பிரஸ்தாபித்து 'நாங்கள் பிரிட்டனை நம்பாமல் பயப்படுகிறேம். பிரிட்டன் எங்களை நம்பாமல் பயப்படுகிறது. இது எனக்கு ஒரு பாரசீகக் கதையை ஞாபகமூட்டுகிறது' என்ருர்.

'அது என்ன கதை?' என்று கேட்டார் அமெரிக்க ராஜாங்கக் காரியதரிசி டல்லெஸ்.

'' 'கோஹி என்ெருருவர் தம்முடைய வீட்டை மற்ெருருவருக்கு ஒரு நிபந்தனையுடன் விற்று விட்டார். தாம் எப்போது விரும்பினுலும் அந்த வீட்டுக்கு வந்து சுவரிலுள்ள ஒரு குறிப்பிட்ட ஆணியைப் பார்த்து விட்டுப் போகும் உரிமை தமக்கு வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. மறுநாள் காலையில் நிபந்தனைப்படி அவர் அங்கே போய் ஆணியைப் பார்வை யிட்டார். காலை வேளையானதால் அவருக்கு வீட்டுக்காரர் மரியாதைக்காகக் காலை ஆகாரம் கொடுத்து அனுப்பினுர். பிறகு வீட்டை விற்றவர் போஜன சமயத்திலும் வந்தார். பகல் போஜனம் அருந்தி விட்டு ஆணியையும் பார்த்து விட்டுப் போனுர்! மீண்டும் இராச் சாப்பாட்டு நேரத்திலும் வந்து சாப்பிட்டு விட்டு ஆணியைப் பார்த்துவிட்டுப் போனுர். பிறகு எல்லா நேரங்களிலும் எப்போது நினைத்தாலும் அவர் ஆணி பார்க்க வருவதும் சாப்பிட்டு விட்டுப் போவதும் வழக்கமாயிற்று. ஒரு சமயம் வீடு வாங்கிய பேர்வழிக்குப் பயித்தியம் பிடித்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனுர்கள்.

இதுதான் சமயம் என்று கோஹி என்பவர் அந்த வீட்டிலேயே நிரந்தரமாகத் தங்கி அதைத் தம் சொந்த வீடாக்கிக் கொண்டார்!

அதைப்போல் பிரிட்டிஷ் சர்க்காரும் எகிப்து நாட்டைச் சேர்ந்த சூயெஸ் கால்வாயில் நிரந்தரமாகச் சொந்தம் கொண்டாட ஆரம்பித்து விடக் கூடாது என்றுதான் சொல்கிறேன். சூயெஸ்ஸிலிருந்து அவர்கள் பூரணமாக வாபஸாகி விடுவதுதான் நியாயம். கோஹியைப் போல் இங்கே அவர்களும் எதையாவது விட்டு விட்டுப் போய்ப் பிறகு சொந்தம் கொண்டாடக் கூடாது என்றுதான் சொல்கிறேம்' என்ருர் பவ்ஸி.

கடைசியாகச் சமீபத்தில் சூயெஸ் கால்வாய்ப் பிரதேசத்திலிருந்து பிரிட்டிஷ் படை அடியோடு வாபஸ் வாங்கிய விவரம்தான் உனக்குத் தெரியுமே?'' என்றது நைல்.

''ஆமாம், ஆமாம். நாஸரின் நிரம் நீடூழி வாழட்டும்'' என்றது கங்கா நதி.

''அது சரி; சூயெஸ் கால்வாயை எகிப்தின் தேச உடைமையாக்கியதைப் பற்றி பாரத நாட்டுத் தலைவர்கள் என்ன அபிப்பிராயப் படுகிறர்கள்?'' என்று கேட்டது நைல்.

''நாஸர் செய்தது ரொம்பவும் சரியான காரியம் என்பதே எங்கள் ராஜாஜி முதலிய தலைவர்களின் அபிப்பிராயம். இந்திய மக்களின் அபிப்பிராயமும் அதுவே.''

''ரொம்ப சந்தோஷம்; சூயெஸ் கால்வாய் சர்வதேசக் கடல் மார்க்கமாகையால் எந்த தேசத்துக் கப்பல்களின் போக்குவரத்தையும் நாங்கள் தடை செய்யவில்லை. எப்போதும் போல் அவை தங்கு தடை இல்லாமல் போய்க் கொண்டுதான் இருக்கின்றன. சென்ற நூற்றுண்டில் கால்வாய்க் கம்பெனி தோன்றியபோது ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தப்படி கால்வாய் வருமானத்தில் 99 வருஷகாலம் கம்பெனிப் பங்குதாரர்களுக்கு உரிமை இருந்தது. இப்போது 87 ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டன. சட்டப்படி இன்னும் 12 ஆண்டுகளில் கால்வாய்க் கம்பெனியின் முழு உரிமையும் எகிப்துக்குச் சொந்தமாகி விடுகிறது. அந்த உரிமையை இப்போதே நாஸர் எடுத்துக் கொண்டு விட்டதாக அறிவித்து விட்டார். அவ்வளவுதான்! கணக்குப் பார்த்து அவரவர்கள் பங்குப் பணத்தைத் திருப்பித் தந்து விடுவதாகவும் கூறி விட்டார். இதில் அநியாயமோ, அக்கிரமமோ அபத்தமோ என்ன இருக்கிறது?'' என்று கேட்டது நைல்.

பிறகு ''சரி, போகட்டும்; உனக்கு இந்த மாதிரி சங்கடங்களெல்லாம் ஒன்றும் கிடையாது. நீ பாட்டுக்கு நிம்மதியாகவும் அமைதியாகவும் ஓடிக்கொண்டிருக்கிறய்!'' என்றது.

''ஆமாம்; எங்கள் பாரத நாடு புண்ணிய நாடு. அது நான் செய்த பாக்கியம்'' என்று கூறி முடித்தது கங்கை நதி.

அபலை அஞ்சுகம்


6. யார் அந்த நிர்மலா ?

இரவெல்லாம் மேகராஜபுரத்திலிருந்து அச்சத்தோடும் குழப்பத்தோடும் வழி நடந்து வந்த அஞ்சுகம் விடியற்காலையில் தேவிப்பட்டினத்தை அடைந்தாள். மரங்கள் அடர்ந்து இருண்டு மனித சஞ்சாரமற்றிருந்த அந்தப் பாதையில் அவள் நடந்து வந்த போது தனக்கு எந்த வினாடியில் எவ்வித ஆபத்து நேருமோ என்றுதான் அவள் உள்ளம் நடுங்கிக் கொண்டிருந்தது.

எப்படியோ அவள் தேவிப் பட்டினத்துக்கு வந்து விட்டாள். அப்பொழுது அவள்மனத்தில் சிறிது தைரியம் ஏற்பட்டது. இருப்பினும் அவள் உள்ளத்தில் பூர்ணமான நிம்மதி ஏற்படவில்லை. மறுபடியும் தன் தலைவிதி தகாத மனிதர்கள் வசிக்கும் இடத்தில் போய்ச் சேர்ந்து வாழும்படி வைத்ததே என்ற துக்கம்தான் அவளால் தாங்கக் கூடாததாக இருந்தது. அவள் அங்காடிப் பேட்டையில் கால் வைத்ததுமே முதன் முதலாக அவள் கண்ணில் பட்டவன் சொக்கன்தான். அவனை அந்த வேளையில் கண்டதும் அவளுக்கே சிறிது திகைப்பாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. சில வினாடிகளில் அவன் ஆனந்த பரவசனாகி, ''அஞ்சுகம்! கொஞ்ச நேரத்துக்கு முன்னால்தான் நான் உன்னை நினைத்தேன். மறுபடியும் உன்னை எப்பொழுது சந்திக்கப்போகிறேனோ என்று தவித்தேன். இத்தனை நாள் நான் கடவுள் இல்லை என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தேன். இப்பொழுது இருக்கிறார் என்று நிச்சயமாகத் தெரிந்து விட்டது. அந்தக் கடவுள் எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லையே தவிர நிச்சயமாக அப்படி ஒருவர் இருக்காருன்னுதான்படுது. நான்தான் அப்பொழுதே சொன்னேனே, அதெல்லாம் உனக்குத் தோதுப்படாதுன்னு.... நீ எங்களோடு இருப்பதுதான் எப்பொழுதுமே நல்லது. அதில்தான் வாழ்க்கையும் காதலும் வளம் பொருந்தியதாக இருக்கும். அன்பும் பாசமும் அழகாக மலரும்'' என்றான் ஆர்வத்தோடு.

''உங்களோடு நான் வந்து வாழ்வது நல்லதோ கெட்டதோ அது கடவுளுக்குத்தான் தெரியும். ஆனால் எனக்கு உலகத்தில் வேறு வழியே இல்லையே, இதைத் தவிர'' என்றாள் சிறிது வெறுப்பும் ஆயாசமும் அடைந்தவள் போல.


அவள் முகத்தை அவன் உற்றுப் பார்த்தான். அந்த அழகிய முகத்தில் எல்லையற்ற துயரமும், பீதியும் தோய்ந்திருப்பதை ஒரு கணத்தில் அவன் உணர்ந்து கொண்டான். அவள் வேலைக்கு இருந்த இடத்தில் ஏதோ தகராறு நடந்திருக்க வேண்டும் என்பதைச் சுலபமாக அவனால் ஊகிக்க முடிந்தது. எப்படியோ தன்னுடைய ஆசை நிறைவேறுவதற்குரிய அதிர்ஷ்டம் நெருங்கி விட்டதாகத்தான் அவன் நினைத்தான். இருதயத்தில் பொங்கி வழியும் அளவற்ற காதல் அவன் கண்களில் பிரதிபலித்தது. அந்தப் பெண்ணின் மனத்தைத் தன் வசமாக்கிக் கொண்டு வர அதுதான் சரியான சந்தர்ப்பமாக அவனுக்குப் பட்டது. ஆர்வமும் அனுதாபமும் மிகுந்த குரலில், ''அங்கு ஏதேனும் தகராறு நடந்ததா, அஞ்



கி.ரா.கோபாலன்


சுகம்? நீ அங்கு நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறாய் என்றல்லவா நான் நினைத்துக் கொண்டிருந்தேன்? அது போனால் போகட்டும். இனிமேல் எங்கே சுகம் — எங்கே இன்பம் — எங்கே காதல் — வாழ்க்கை, பாசம், உணர்ச்சி, உறவு இவையெல்லாம் இருக்கின்றன என்று பார்ப்போம்'' என்றான்.

இதைக் கேட்டதும் அஞ்சுகத்துக்கு வேதனையாகவும் 'வெட்கமாகவும்தான் இருந்தது. ''இவையெல்லாம் உலகத்தில் எங்கே இருக்கின்றன என்று தேடிக் கண்டு பிடிக்க வேண்டும். ஆனால் இங்கே பொய், சூது, வஞ்சனை, திருட்டு குடி, கொலை இவையெல்லாம் நிறைய இருக்கின்றன. எனக்கு உலகத்தில் சாதாரணமாக எல்லாருக்கும் கிடைக்கக் கூடிய மதிப்போடு வேலை கிடைத்ததாகத்தான் முதலில் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் பின்னால் தான் சிறை சென்று வந்த ஒருத்திக்கு எல்லாரையும் போல் மதிப்பு கிடைக்காது என்பதைத் உணர்ந்து கொண்டேன். நான் அவமானம் அடைந்தேன். அவர்கள் என்னை ஒரு திருடியாகத் தான் மதித்தார்கள். அங்கு ஏதோ பணம் கெட்டுப் போயிற்றாம். அதோடு மட்டுமல்ல; எஜமானியம்மாளின் நீலக் கல் மோதிரமும் காணாமல் போயிற்றாம். அது என்னுடைய துணி மூட்டையில்தான் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது என்று பழி சொன்னார்கள். நான் எதையும் அறியேன். இது என்ன சூதோ......? நான் நிரபராதி......'' என்றாள், கண்களில் நீர் தளும்ப.



சொக்கனுக்கு அவனுடைய துயரம் அப்பொழுது பெரிதாகப்படவில்லை. அவள் உண்மையில் குற்றவாளியா இல்லையா என்பதைப் பற்றியும் அப்பொழுது அறிந்து கொள்ள அவன் ஆசைப்படவில்லை. அவனுடைய எண்ணங்களெல்லாம் அந்த அழகியைத் தான் எப்படி அடையலாம் என்பதிலேயே இருந்தன. அவன் அவளோடு ரஸ்தாவிலிருந்து பேச விருப்பப்படாமல், ''அது கிடக்குது விடு. அப்படித்தான் இந்த ஜனங்களே இருப்பார்கள்! இப்பொழுதுதான் நீ கண் விழித்துக் கொண்டிருக்கிறாய்—இனிமேல்தான் உன் வாழ்க்கை என்னும் அழகான தடாகத்தில் இன்பமென்னும் தாமரை மலர்ந்து மணம் வீசிக் கமழப் போகிறது. சரி, வா போவோம்'' என்று சொல்லி அவளை அழைத்துக் கொண்டு வெற்றிலைப் பாக்குக் கடை குப்பம்மாவின் வீட்டை நோக்கி நடந்தான். குப்பம்மாள் அப்பொழுதுதான் கடையைத் திறந்து ஏதோ வியாபாரத்தில் மூழ்ந்து கொண்டிருந்தாள். அவள் அஞ்சுகத்தைக் கண்டதும், அன்பையும் பாசத்தையும் எப்படியோ வரவழைத்துக் கொண்டு, ''ஐயோ! என் கண்ணுட்டியா? வா! உள்ளே போ. நான் வியாபாரத்தைக் கவனிச்சுட்டுவரேன்'' என்று கூறினாள்.

அஞ்சுகம் வீட்டுக்குள் சென்றதும் சொக்கன் குப்பம்மாவைப் பார்த்து, ''அத்தை, பார்த்தாயா? எனக்குத் தெரியும், ஒரு நாள் இவள் இங்கு வந்துதான் ஆவணும்னு. ஆயிரம்தான் உண்மையாக நடந்து கொண்டாலும் உலகத்திலே நம்ம வகையறா நல்ல பெயர் எடுக்கறது கஷ்டம்னு சொல்லுவோமே, அது அஞ்சுகம் விஷயத்திலும் பொருத்தமாப் போச்சு. அவள் என்ன கண்டாள்? அனுபவம் அறியாத கிளிக் குஞ்சு அவள். திசை தெரியாமல் பறந்து மறுபடியும் இந்தத் தோப்பிலேதான் வந்து விழுந்திருக்கிறது. அது நம்ம சரக்கு. அது நம்மை விட்டுப் போயிடுமா.....? எங்கு சுற்றினாலும் புறா இந்தக் கூண்டிலேதான் வந்து அடையணும்னு எனக்குத்தெரியும். அது நாம் வளர்த்த புறா. இந்தத் தைரியமும் நம்பிக்கையும் எனக்கு எப்பொழுதுமே உண்டு. இந்தச் சொக்கனுக்குச் சம்சாரமாகணும்னுதான் அஞ்சுகம் பிறந்திருக்கிறாள். அவளுக்குப் புருசன் ஆகணும்னுதான் நானும் வளர்ந்திருக்கிறேன். அத்தை! காதலைப் பற்றி ஒரு ரகசியம் — உண்மைக் காதல் உயிரோடுதான் சாகும். அவளை நீ பத்திரமாகப் பார்த்துக்கோ. நான் ஊரிலே ஏதேனும் கிடைக்குதான்னு ஒரு ரவுண்டு போயிட்டுச் சாயந்திரம் வரேன்'' என்று சொல்லிவிட்டு வேகமாகச் சென்றான்.



வெளியே வியாபாரத்திலே இருந்த குப்பம்மா தொடர்ந்து தனது வியாபாரம்

நடந்து கொண்டிருந்ததால் வீட்டுக்குள் செல்லாமல் அங்கிருந்த வண்ணமே அஞ்சுகத்துக்குச் சமையல் செய்யும்படி உத்தரவு கொடுத்து விட்டு வியாபாரத்தைக் கவனிக்கலானாள். வெளியே சென்றிருந்த சொக்கன் 'சாயந்திரம் வருகிறேன்' என்று கூறியதற்கு மாறாகச் சிலமணி நேரத்துக்குள்ளேயே திரும்பி விட்டான். அவன் வரும் போதே ஏதோ பதைபதைப்போடுதான் வ ந் த ா ன். அவன் வரும் வேகத்தை அறிந்த குப்பம்மா ஏதோ விசேஷம் இருக்க வேண்டும் என்று அறிந்து கொண்டவளாக,

'' என்ன தம்பி, அதுக்குள்ளே திரும்பிட்டே? நீ வந்தவேகத்தைப் பார்த்தா, ஏதோ முக்கிய விசேஷம் இருக்குறப் போலேன்னு தெரியுது! காலையிலேயே பெரிய பையா வைச்சுக்கிட்டு யாரேனும் தூங்கிக்கிட் டிருந்தானே ?'' என்றாள் சிறிது ஆச்சரியத்தோடு.

'' அப்படி ஒரு புத்திசாலியும் இல்லே. இன்னொரு முக்கிய விசேஷம் அத்தை—'' என்று அவளுக்குச் சமீபமாக நெருங்கிக் காதோடு ஏதோ சொன்னான். அதைக் கேட்டதும் குப்பம்மா ஆச்சரியம் அடைந்தவளாக, ''அப்படியா சமா

சாரம்! கைக்காரி! இந்தக் குப்பம்மா வளர்த்தபொண்ணு ஒண்ணும் வீணாகப் போறதில்லே. அதனாலேதானே ஒரு தடவையாவது அவள் ஜெயிலுக்குப் போய் வந்தால் உருப்பட்டு வருவாள்னு விட்டேன் தம்பி! இதுக்காகத்தான் அந்த இடத்துக்கு வேலைக்குப் போகட்டும்னு நான் அனுமதி கொடுத்தேன்'' என்றாள் அளவற்ற பெருமையோடும் கர்வத்தோடும்.

சொக்கன் மறுபடியும் அவள் காதோடு ஏதோ ரகசியம் சொல்லி விட்டு உள்ளே சென்றான். அஞ்சுகம் அறையில் தனியாக உட்கார்ந்து ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள். உள்ளே வந்த சொக்கன் கதவைச் சாத்தி விட்டு அவளிடம் நெருங்கி வந்து, ''என்ன யோசனை செய்து கொண்டிருக்கிறாய்? யோசிக்க வேண்டிய சமயம் சந்தர்ப்பம் எல்லாம் வந்துடுத்து, இல்லையா? பார்வதியம்மாள் வீட்டில் நீ எடுத்த நகைகளை எப்படிப் பதுக்குவது, பணமாக்குவது என்று யோசிக்கிறாயா? அடாடா! நீ வந்தவுடனேயே என்னிடம் சொல்லியிருக்கக் கூடாதா? இதெல்லாம் நமக்குச் சகஜம்தானே?

அன்பும் பாசமும் எங்கே விளைந்து விளையாடுகிறதோ அங்கே உண்மையைச் சொல்ல வேண்டியதுதானே? எல்லாவற்றுக்கும் ஒரு நல்ல ஏற்பாடு செய்யலாம். பயப்படாதே....'' என்றான் கேலியாகச் சிரித்துக் கொண்டே.

அஞ்சுகம் இதைக் கேட்டதும் திகைப் படைந்து நின்று விட்டாள். ''நீங்க சொல்லுவது எனக்கு ஒன்றுமே புரியவில்லையே?'' என்றாள் பரபரப்போடு விழித்துக் கொண்டே.

சொக்கன் தன் கேலிச் சிரிப்பு மாறாமலேயே, ''புரியவில்லையா? நடிப்புக் கலையில் நீ தேர்ச்சி பெற வேண்டுமென்றுதானே கண்ணால் பார்க்காத கடவுளிடமெல்லாம் முறையிட்டுக் கொண்டிருக்கிறேன்? அழகு இருக்கணும். அதோடு நடிப்பும் இருக்கணும். அப்படிப்பட்ட நக்ஷத்திரங்களுக்குத் தான் சினிமா உலகத்தில் நல்ல மதிப்பு. நீயும் நன்றாகத்தான் நடிக்கத் தெரிஞ்



சுக்கிட்டிருக்கே. ஆறு மாசம் நீ ஜெயிலிலே இருந்தால் போதும்போலிருக்கே. அறுபது வருசம் ஜெயிலிலே வாழ்ந்த அனுபவம் ஏற்பட்டுவிட்டாற் போல நம்ம தொழில் விஷயத்திலும் அனுபவம் ஏற்பட்டிருக்கிறதே. இந்தத் தொழிலுக்கு இதெல்லாம் வேண்டியது தான். ஆனால் அதை யெல்லாம் காட்டுகிற இடத்தில் தான் காட்டணும். எனக்கு எல்லாம் தெரியும். ஊரில் ஒரு இடத்தில் கொள்ளை போனால் தெரியாமல் போய் விடுமா? போலீஸ்காரங்க எங்களைப் பற்றி உளவு விசாரிப்பது போல, நாங்களும் போலீசுக்கு என்னென்ன தகவல் வந்திருக்குது என்பதைக் கூடுமான வரையில் உளவு விசாரிக்காமல் இருக்க மாட்டோம். அப்போத்தானே அவர்கள் கையில் சிக்காமல் தப்ப முடியும். மேகராஜபுரம் பார்வதியம்மாள் வீட்டில் நேற்று ராத்திரி நகைகள் களவு போன தகவல் இன்று காலே போலீஸுக்கு வந்துடுத்து. நீ ராவோடு ராவாக இங்கு புறப்பட்டு வந்ததில் ஆச்சரியம் ஏதும் இல்லை. நீ இதை எனக்குத் தெரியாமல் மறைக்கப் பார்க்கிறாய் அல்லவா? அதுதான் எனக்குப் பெரிய ஆச்சரியமாக இருக்குது. நீ எடுத்த நகைகள் சாதாரண நகைகளா? ஆயிரக்கணக்கான ரூபாய்கள் பெறும் என்று எல்லாரும் சொல்லிக்கிறாங்க. ஒன்றும் தெரியாத அப்பாவி போல் இருந்தாலும் நீ பெரிய தந்திரசாலி-கெட்டிக்காரி! உன்னிடம் இருக்கும் நகைகள் எத்தனை ரூபாய் பெறும் என்று தெரிந்தால் எத்தனை தமிழ்ப் படம் எடுக்கச் சௌகரியப் படும் என்று ஒரு திட்டம் போடச் சௌகரியமாய் இருக்கும்'' என்றான் அவளை ஒரு விதமாகப் பார்த்துச் சிரித்துக் கொண்டே.

அவனுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அஞ்சுகத்துக்குத் திகிலை அளிப்பதாகத்தான் இருந்தன. அவன் அமைதியோடு பேசிக் கொண்டிருந்தாலும் அவள் நடுங்கிக் கொண்டு தான் இருந்தாள். அப்பொழுது அவளால் ஒன்றுமே பேச முடியவில்லை.

''போகட்டும்! அதிகமாய் நடிக்காதே. அந்த நகைகளை யெல்லாம் எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்? அவைகளெல்லாம் உன் மூட்டையில் இருக்கின்றனவா? அவற்றை யெல்லாம் என்னிடம் கொடுத்து விடு. அதுதான் நல்லது. அவைகளை யெல்லாம் எங்கே கொடுத்தால் பணம் ஆகும் என்று எனக்குத்தான் தெரியும்..'' என்றான் ஆர்வத்தோடும் துடிப்போடும்.

அஞ்சுகம் நடுக்கத்தோடும் தடுமாற்றத்தோடும், ''எனக்கு அதெல்லாம் தெரியாது. நீங்கள் சொல்வது ஆச்சரியமாகத்தான் இருக்குது. உண்மையாகவே பார்வதியம்மாள் வீட்டில் திருட்டுப் போய் விட்டதா?'' என்றாள்.

சொக்கன் கேலியாக நகைத்துக் கொண்டே ''ஆமாம். நேற்று ராத்திரிக்குள்ளே இதெல்லாம் நடந்திருக்கிறது. நகைகள் வைத்திருந்த இரும்புப் பெட்டி திறந்து கிடக்குதாம். அதில் இருந்த விலையுயர்ந்த நகைகள் ஒன்று கூடக் காண வில்லையாம். பார்வதியம்மாளின் படுக்கைக்கடியில் இருந்த சாவியைத் தான் யாரோ எடுத்து அந்த நகைகளைத் திருடி இருக்க வேண்டும் என்று சொல்லுகிறாங்க. அங்குவேலைக்கு இருந்து நேற்று ராத்திரி ஓடி வந்து விட்ட உன்மீதுதான் சந்தேகம் விழுந்

திருக்கிறது. உன்னைத் தேடிக் கைது செய்யப் போலீஸில் வாரண்டு கிளம்பியிருக்கிறது. அதைப் பற்றி நீ பயப்படாதே. நகைகளை என்னிடம் கொடுத்து விடு. நான் உன்னைப் போலீஸ்காரங்க கண்ணில் படாத வண்ணம் பதுக்கி வைக்க ஏற்பாடு செய்கிறேன்'' என்றான்.

இதைக் கேட்டதும் கண நேரத்தில் அஞ்சுகத்தின் உடலே கல கலத்துச் சரிந்து விழுந்து விட்டதுபோல் இருந்தது. அவள்பயந்து நடுங்கிக்கொண்டே, ''அப்படியென்றால் போலீஸ்காரர்கள் என்னைத் தேடுகிறார்களா? அவர்கள் ஒன்றும் கஷ்டப்பட வேண்டாம். நானே அவர்களிடம் போய் நிரபராதி என்று சொல்லி விடுகிறேன்'' என்றாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் சரம் சரமாகப் பெருகி வழிந்தது.

சொக்கன் அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். இவ்வளவு நேரமும் உண்மையறியாமல் விளையாட்டுப் போலவும் வெகுளித்தனமாகவும் பேசி வந்தவன், அப்போது அவள் நிரபராதியாகத்தான் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்தான். அவன் அவளுடைய தோளை மெதுவாகத் தொட்டு, ''பதட்டப்படாதே, இப்படி உட்கார். அமைதியாக என்னிடம் எல்லாவற்றையும் சொல்லிவிடு. நீ நிரபராதி என்று சொல்லி விட்டால் போலீஸ்காரர்கள் நம்பி விடுவார்களா? நீ ஏதோ தொழில் நுணுக்கம் தெரிந்தவளாகி விட்டாய் என்று நினைத்துச் சந்தோஷப்பட்டேன். இன்னும் நீ பேதைதான். நீயாகப் போய்ப் போலீஸாரிடம் சிக்கிக் கொள்வது நல்லதல்ல. உன்மீதுள்ள குற்றம் மிகத் தெளிவானது. நீ தப்பிக்க முடியாது. இந்தத் தடவை உனக்கு ஆறுமாதமும் கிடைக்கலாம்; ஆறு வருடமும் கிடைக்கலாம்'' என்றான்.

அஞ்சுகம் பயித்தியம் பிடித்தவள் போல், ''இல்லை-இல்லை! நான் குற்றவாளி இல்லை! நான் மறுபடியும் ஜெயிலுக்குப் போகமாட்டேன். இது வெட்கக்கேடு-அவமானம்'' என்று கதறினாள்.

''எல்லாம் சரிதான். ஆனால் நீ கதறுவதால் புண்ணியம் இல்லை, அஞ்சுகம். உன்னைத் தண்டிக்கக்கூடிய அளவுக்கு எல்லாம் பொருந்தி இருக்கின்றன. அந்தத் திருட்டு வீட்டுக்குள்ளேயே ஒருவர் செய்ததுதான் என்பதற்குத் தகுந்த ஆதாரம் இருக்கிறது. வீட்டுக் கதவோ-ஜன்னலோ ஒன்றும் பழுதடையவில்லை. அவைகளை உடைத்து வேறு ஒருவர் உள்ளே புகுந்திருக்கலாம் என்பதற்கு எவ்வித அடையாளமும் இல்லை. இரும்புப் பெட்டியின் சாவி வீட்டு எஜமானியின் படுக்கைக்கு அடியில்தான் இருக்கிறது என்று அங்கு கொஞ்ச நாட்களாவது பழகி இருப்பவர்களுக்குத்தானே தெரியும்? அந்த வீட்டில் இன்னும் வேறுயாரேனும் இருந்தால், அவர்கள் சாமர்த்தியமாகத் திருடிவிட்டு உன்மீது பழி ஏற்படும்படி செய்திருக்கலாம்....'' என்றான்.

''அந்த வீட்டில் வேறு ஒருவரும் இல்லை. வீட்டு எஜமானி, நான், நிர்மலா அம்மாள், இந்த மூன்று பேரும் தான் இருந்தோம்'' என்றாள் அஞ்சுகம்.

சொக்கன் திகைப்போடு, ''நிர்மலா அம்மாவா? அது யார்?'' என்றான்.

''அந்த வீட்டுக் காரியங்களை யெல்லாம் அந்த அம்மாள்தான் பார்க்கிறாங்க, ரொம்பத் தங்கமான குணம்!'' என்றாள் அஞ்சுகம்.

''ஓகோ! 'அப்படியா . . . .? அவள் எப்படி இருப்பாள்?''

''நிர்மலா அம்மாள் இப்படியெல்லாம் செய்யக்கூடியவங்களில்லே. நன்ருய்ப் படிச்சவங்க! என்னைவிட நல்லவங்க. அவர்கள் பேரில் சந்தேகப்பட நியாயமே இல்லே. அவங்களுக்கு வயது இருபது இருக்கும். நல்ல அழகாகவும் இருப்பாங்க. அவுங்க பேசுவதே இனிமையாக இருக்கும். இப்படிப்பட்டவங்களா செய்வாங்க? அதுவும் என்னிடம் அவங்களுக்கு அலாதிப் பிரியம். அந்த நீலக்கல் மோதிரத்தைக் கூட நான் எடுத்திருப்பேன் என்று நிர்மலா அம்மாள் சந்தேகப்படவில்லே. எஜமானியம்மாதான் என்மேல் சந்தேகப்பட்டுப் போலீஸிலே பிடித்துக் கொடுக்க நினைத்தாங்க. இதை யறிந்த நிர்மலா அம்மாதான் இரவோடு இரவாக அங்கிருந்து போய்விடு என்று என்னைச் சொன்ஞங்க. அவ்வளவு நல்லவங்க'' என்ருள். சொக்கன் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருந்தான்.

சிறிது நேரம் கழித்து ஏதோ தீர்மானத்துக்கு வந்து விட்டவள் போல், ''நான் இப்பொழுதே நிர்மலா அம்மாவைப் போய்ப் பார்க்கிறேன். அவங்க எங்கு வேண்டுமானலும் வந்து சொல்லுவாங்க, நான் குற்றமற்றவன்னு'' என்ருள் அஞ்சுகம் துடிப்போடு.

சொக்கன் கேலியாகச் சிரித்து விட்டு, ''நீ ஒரு அசடு. உனக்கு வெளுத்ததெல்லாம் பால். படிச்சவங்கன்ஞ இந்த மாதிரி செய்ய மாட்டாங்கன்னு நினைக்கிறே? நம்மைப் போல ஏழை எளியவங்க சின்னச் சின்ன திருட்டெல்லாம் செய்து விட்டுச் சீரழியரோம். உலகத்திலே நாகரிகமானவங்க என்றும், படிச்சவங்க என்றும் சொல்லிக்கிறவங்களே சில பேர் கோடிக் கணக்கா கொள்ளையடிச்சுட்டு, நலுங்காமல் வாழுருங்க! உனக்கு இன்னும் உலகம் புரியல்லே. இது பைத்தியக்காரத்தனம். நீ அங்கு போஞல் போலீஸ்காரர்களிடம் சிக்கிக் கொள்ள வேண்டியதுதான். உண்மை கண்டு பிடிக்கப்பட்டு இந்த விஷயம் அடங்கும் வரையில் நீ வெளியே தலை நீட்டுவதே பிசகு. நீ இங்கே கொஞ்ச நாட்கள் ஒளிந்து கொண்டிருப்பதுதான் நல்லது . . . .'' என்ருன்.



''சரிதான். நான் மறுபடியும் ஜெயிலுக்குப் போவதை விட உயிரை விட்டு விடுவதுதான் நல்லது. ஆனல் உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்காத வரையில் நான் என்ன செய்வது? உண்மையான குற்றவாளி யாரென்று நாம் கண்டோம்?'' என்ருள்.

''அதைப்பற்றி உனக்கென்ன கவலே? எனக்கு அந்த நிர்மலா அம்மாவைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். நீ சொல்வது போல் எனக்கு அவள் பேரில் நம்பிக்கை இல்லே. அவளைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டுமானல் நான்தான் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். நீ மாத்திரம் இந்த வீட்டை விட்டு வெளிக் கிளம்பாதே. நான் எல்லாவற்றையும் குப்பம்மா அத்தையிடம் சொல்லி விட்டுப் போகிறேன். ஜாக்கிரதை! போலீஸ்காரர்கள் உளவு பார்ப்பதற்கு இந்தப் பேட்டைக்குத்தான் முதலில் வருவார்கள். நீ அவர்களிடம் சிக்கிக்கொள்ளக் கூடாது. நீ உன்னுடைய உருவத்தையும் பெயரையும் மாற்றிக் கொள்ள வேண்டும். உன்னை எப்படி வேஷம் போட்டு வைப்பது என்று குப்பம்மா அத்தைக்குத்தான தெரியும். இனிமேல் அஞ்சுகம் மறைந்து விட்டவளாகவே ஆகிவிட வேண்டும். நீ போலீஸாரிடம் அகப்பட்டாயாஞல் பெரிய தண்டனையில் இருந்து தப்பவே முடியாது. ஜாக்கிரதை!'' என்று சொல்லி விட்டு வெளியே வந்து குப்பம்மாவிடம் ஏதோ ரகசியம் சொல்லிவிட்டு வேகமாக நடந்தான் சொக்கன்.

அப்பொழுது அவன் மனத்தில் ஒரு துடிப்பும் ஆத்திரமும்தான் எழுந்தன. அவன் அஞ்சுகத்தின் மேல் வைத்திருந்த எல்லேயற்ற காதலும் ஆசையும்தான் இதற்குக் காரணம்.

'இந்தத் துணிகரமான காரியத்தை நிர்மலா என்ற பெண்தான் செய்திருக்க வேண்டும். அவளை எப்படியாவது பார்த்து விட்டால் உண்மை தெரிந்து விடும். எப்படியாவது நான் உண்மையைக் கண்டுபிடித்து விடுவேன். அஞ்சுகத்தின் மேலுள்ள பழியும் நீங்கும்' என்று மனத்தில் எண்ணியவஞக மேகராஜபுரத்தை நோக்கி விரைவாகச் சென்ருன் சொக்கன். (தொடரும்.

'அபலே அஞ்சுகத்' தொடர்கதையில் வரும் பரபரப்பூட்டும் ஓர் நிகழ்ச்சியே இவ்வார அட்டையை அலங்கரிக்கிறது.

வெள்ளித் திரை

மர்ம வீரன்



காந்தன்

"மிஸ்டர் காந்தன்! ஒரு நல்ல தமிழ்ப் படம் பார்க்க மிகவும் ஆவலாயிருக்கிறது. எந்தப் படத்துக்குப் போகலாம், சொல்லுங்கள்!" என்று என் நண்பர் தர்மசங்கடமான கேள்வியைப் போட்டார்.

அந்தக் கேள்விக்கு உடனே என்னால் பதில் சொல்ல முடியவில்லை. தலையைச் சுற்றித் தான் பதில் சொல்ல முடிந்தது.

ஓடிக் கொண்டிருக்கும் படங்களிலிருந்து நல்ல படம் ஒன்றைப் பொறுக்குவதை விட, ஏற்கனவே ஓடிப் போன படங்களிலிருந்து ஒரு நல்ல படத்தைப் பொறுக்கி எடுப்பது சுலபமான காரியம். இது எப்படி என்று கேட்கிறீர்களா? இதோ சொல்லுகிறேன்.

ஒருவருக்கு ஆறு பெண்கள். மூத்த பெண்ணுக்குச் சிரமப்பட்டு வரன் தேடிக் கல்யாணம் செய்தார். அந்த மாப்பிள்ளையின் அட்டகாசம் சகிக்கக் கூடியதாயில்லை. ஆயினும் அவர் பொறுத்துக் கொண்டு போனார். அடுத்த பெண்ணுக்கு இரண்டொரு வருஷங்களுக்கெல்லாம் விவாகம் செய்தார். அந்த மாப்பிள்ளை மூத்த மாப்பிள்ளையை நல்லவனாக்கி விட்டான்! அதற்கு அடுத்த பெண்ணுக்கு மணம் முடிந்து மாப்பிள்ளை வந்ததும் வராததுமாக இரண்டாவது மாப்பிள்ளைக்குத் தானாகவே புகழுரைகள் வந்து குவிந்தன.

இதிலிருந்து நாம் தமிழ்ப் படங்களைப் பற்றி ஒரு தீர்மானமான முடிவுக்கு வரலாம்.

"அடாடா! முன்பு வெளியான அந்தப் படத்தைத் திட்டினோமே! இந்தப் படத்தைப் பார்க்கும்போது அது எவ்வளவு நல்ல படம் என்று தெரிகிறது!—" என்று படம் பார்க்கும் போது நம் மனம் ஓடிப் போன படத்தைப் பற்றி அநுதாபப்படத் தொடங்கும். அத் தருணம்தான் நல்ல படத்தை நிர்ணயம் செய்ய நல்ல தருணம்!

ஜூபிலி பிலிம்ஸாரின் தயாரிப்பான "மர்ம வீரன்" படத்தைப் பார்த்தபோது மேற்கூறிய வண்ணம் என் மனம் ஓடிப்போன படங்கள் ஒவ்வொன்றாக நினைத்து அநுதாபப் படத் தொடங்கியது.

"மர்ம வீரன்" கதை மறைந்தொழிந்து போன மன்னர்களின் ஆதிக்க வெறியின் காரணமாகவும், அவர்கள் கொண்ட பெண்ணாசையின் காரணமாகவும் நிகழும் சதிச் செயல்களையும் துராக்கிருத எண்ணங்களையும், ஸ்திரீ சாகசங்களையும் பின்னணியாகக் கொண்டு புனையப்பட்டது.

இந்தப் படத்தின் மூல நட்சத்திரமாக விளங்குபவர் பிரபல நட்சத்திரமான வைஜயந்திமாலா. அவர் சில வருஷங்களாக வடநாட்டுச் சினிமாவானில் மின்னும் நட்சத்திரமாக இருந்து வந்தார். வெகு காலத்துக்குப் பிறகு அவர் தமிழ்ப் படத்தில் நடித்திருப்பது அனேகருக்கு உற்சாகத்தை அளித்தது. "பெண்" படத்திலும் "வாழ்க்கை" படத்திலும் வைஜயந்திமாலா தோன்றி, தமிழ்ப் பட ரஸிகர்களின் உள்ளங்களில் நிரந்தர ஸ்தானத்தைப் பெற்று விட்டார்.

ஆனால் துரதிர்ஷ்ட வசமாக "மர்மவீரன்" படத்தில் அவர் சோபிக்க முடியாமற் போனதற்கு அவர் மட்டும் பொறுப்பல்ல. அவரது திறமை முழுவதும் பிரகாசிக்கும் வண்ணம் திரைக் கதையைத் தயாரித்திருந்தால் இந்தக் குறையைச் சுலபமாகத் தவிர்த்திருக்கலாம்.

வழக்கம்போல் நாகையா இந்தப் படத்திலும், அரண்மனை வாழ்வைத் துறந்து, அருமை மகளைப்பிரிந்து, சிறையில் வாடுகிறார்.



"மர்ம வீரன்" திரைக் கதை என்ன? அதுதான் இந்தப் படத்தில் ஒரு பெரிய மர்மம். திரைக் கதையில் அழுத்தமான கதைப் பகுதி எதுவும் இல்லை.

மன்னன் குலசேகரனின் மகள் விஜயா. முறைப்படி அவளை அடைய வேண்டியவன் அவள் அத்தை மகன் மகேந்திரன். ஆனால் இடையில் சதி செய்து அவளை யடையத் திட்டமிட்டவன் பவள நாட்டு மன்னன் பராக்கிரம பாகு. அவனுக்கு உடந்தையா யிருந்தவன் தளபதி சிம்மநாதன். இருவரும் சூழ்ச்சி செய்து மன்னன் குலசேகரனைச் சிறைப்படுத்துகின்றனர். மணி பல்லவத் தீவிலிருக்கும் மன்னனின் மருமகன் 'மகேந்திரனுக்கு இந்தச் செய்தி மெய்காப்பாளன் மூலம் எட்டுகிறது. துணைவனுடன் தாய் நாட்டுக்கு வந்து புத்தி சுவாதீனம் இல்லாதவன் மாதிரி காரியப் பைத்தியமாக மாறி மர்ம வீரனாகவும் நடிக்கிறான்.

பழைய 'ஸ்டண்ட்' படங்களைப் பார்த்தவர்களுக்கும், மர்மக் கதைகளைப் படித்தவர்களுக்கும் மேலே கதையைச் சொல்ல வேண்டியதில்லை. எவ்வளவு பெரிய ஆபத்தான கட்டங்களிலும் வெற்றி மர்ம வீரனுக்குத் தான். அவனுடைய முகத் திரையை யாரும் கிழித்தெறியாததைப் பற்றி அதிசயப்படுவதில் பயனில்லை. அப்படி யாராவது கிழித்தெறிந்திருந்தால் திரைக் கதையையும் கூடவே கிழித்தெறிய வேண்டியதுதான்!

மர்ம வீரனாகவும் மகேந்திரனாகவும் நடிக்கும் ஸ்ரீராம் பைத்தியமாக நடிக்கும்போது தத்ரூபமாக நடித்திருக்கிறார். அவருக்குத் துணைவனாக நடிக்கும் தங்கவேலு எப்பொழுதும் போல் தங்கமாக நடித்திருக்கிறார்.

இப்படத்தில் பாராட்ட வேண்டிய நடிகையர்களுக்குள் எம். என். ராஜத்துக்குத்தான் முதல் இடம் அளிக்க வேண்டும்.

திரைக்கதையில் விஜயாவுக்கு உறுதுணையாக விளங்கி அவளுக்கு உற்ற இடுக்கண்களையெல்லாம் களைந்து, சிறையில் இருந்த மன்னன் குலசேகரனின் சோகம் தவிர்த்து, தன்னுடைய சாமர்த்தியச் சாகசங்களினால் திரைக்கதை முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்ட முக்கிய பாத்திரம் பொன்னி. அந்தப் பொன்னியின் பாத்திரத்தை ஏற்று எம். என். ராஜம் எல்லாக் கட்டங்களிலும் பொன்னாக நடித்திருக்கிறார்.


மற்றப்படி படம் நல்ல முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. வாள் போர் இந்தப் படத்தில் பிரதான அங்கம் வகிக்கிறது. 'டண் டணார்' என்ற வாள் வீச்சின் ஒலியும், வாளொடு வாள் மோதும் போது பளிச்சிட்ட ஒளியும் கண்ணையும் காதையும் பறிக்கின்றன.

வில்லன் பராக்கிரமபாகுவாக நடிக்கும் டி. எஸ். பாலையா தமக்கு வழக்கமாகிவிட்ட எகத்தாளச் சிரிப்பை ஏராளமாக அள்ளி விட்டிருக்கிறார்.

மர்ம வீரனில் பாராட்டும் வண்ணம் நடித்திருப்பவர்களில் சந்திரபாபு அநாயாசமாகப் பெயரைத் தட்டிக் கொண்டு போகிறார். அவரது நடிப்பும் நொடிப்பும் சிரிப்பும் படத்துக்குக் களையூட்டுகின்றன.

திரைக்கதை வசனம் நன்றாயிருக்கிறது.

மர்மங்களை எதிர்பார்த்துப் படம் பார்க்கப் போனவர்கள் ஏமாற்றம் அடைந்தால் அதற்கு நான் ஒன்றும் செய்வதற்கில்லை. ஆனால் எதிர்பார்த்த வண்ணம் இல்லாமல் இருப்பதே ஒரு புதுமையான அம்சம் என்பதை யாரும் மறுக்க முடியாதல்லவா?


பல ஆண்டுகளாக
தரத்தில்
மிகச் சிறந்ததென்று
நிரூபிக்கப்பட்டது
மர்ஸிரைஸ்டு ஷர்ட்டிங்குகள்
வேஷ்டிகள், புடவைகள்
பிரிண்டட் வாயில்கள்
மற்றும் லான்கள்
ரெய்ப்பூர் மில்ஸ் லிட்.
அஹமதாபாத்

வட்ட மேஜை

சூஎஸ் கப்பல் கால்வாய்

பூர்வ காலத்தில் எகிப்தியர், சுமார் 2600 வருஷங்களுக்கு முன் தங்கள் பூமியில் வடக்கே யிருக்கும் மத்திய தரைக் கடலுக்கும் கிழக்கே யிருக்கும் செங்கடலுக்கும், தோணிகள் போக்குவரத்துக்காக ஒரு நீர்ப் பாதை வெட்டினார்கள். அது சுமார் 1400 வருஷங்களாக உபயோகப்பட்டு வந்தது. பிறகு அதைக் கவனிப்பார் இல்லை.

பிரஞ்சு சக்கரவர்த்தி நெப்போலியன், இதைப் புதுப்பிக்க எண்ணி 'லெபேரி' என்ற ஒரு எஞ்சினியரைக் கொண்டு ஒரு விருத்தாந்தம் எழுதுவித்தான். அதன்படி ஒன்றும் நடக்க வில்லை. 'லெஸ்ஸப்ஸ்' என்றவர் இதைப் புதுப்பித்தார். அதனால் ஐரோப்பாவிலிருந்து ஆசியா நாடுகளுக்கு வந்து கொண்டிருந்த கப்பல்களுக்கு நாலாயிரத்துக்கும் அதிகமான மைல் சமுத்திர யாத்திரை சுருக்கமாயிற்று. முன்பு ஆப்பிரிக்காவைச் சுற்றி வர வேண்டியிருந்தது. உதாரணமாக, பம்பாய் வந்து சேர 11,379 மைலாக இருந்த தூரம் 7628 மைலாகக் குறைந்தது.

இன்னொரு விசேஷம்; இரண்டு கடல்களிலும் நீர் மட்டம் சமமா யிருந்ததால், அணைகள், கதவுகள், நீர் மட்டத்தை உயர்த்தவும் தாழ்த்தவும் வேண்டிய ,பம்பு'கள் தேவைப்படவில்லை. சமுத்திரம் பொங்குவது, அலை மோதுவது முதலிய கஷ்டங்களுமில்லை.

ஆதியில் ஆங்கிலேய நிபுணர்கள் மூவர் ஏற்படுத்திய வழியை வெளியார் தடுத்து விட்டார்கள். அந்த வழிகள் ஆவன: 1. நீர் வழியின் அடித்தரை சமுத்திரத்தின் உயர் நீர் மட்டத்தைவிட 25 அடி உயரமாக இருக்க வேண்டும். 2. இரு முகப்பிலும் கதவுகளும், அணைகளும் கப்பல்களை நீர் மட்டப்படி உயர்த்துவதற்கும், தாழ்த்துவதற்கும் வசதி செய்ய வேண்டும். 3. இந்த உயர் மட்டக் கால்வாய்க்கு நீர் 'நீல' (நைல்) நதியிலிருந்து ஒரு வாய்க்கால் மூலம் கொண்டு வரவேண்டும்.

வெளிநாட்டார் சொன்னதாவது: 1. கால்வாய் அடிமட்டம், சமுத்திர நீர் மேல் மட்டத்தைவிட 27 அடி தாழ்ந்திருப்பதால் நீர் சகஜமாக ஓடும். 2. இரு முகப்பிலும் துறைமுகங்கள்.

1854-ல் முகம்மத் சையத் பாஷா இராஜப் பிரதிநிதியாக வந்தார். அவர் லெஸ்ஸப்ஸ் என்பவரை நியமித்தார். 1854 நவம்பர் 30-ல் லெஸ்ஸப்ஸுக்கு அதிகாரப் பத்திரம் வழங்கினார். "அகில சூஎஸ் கால்வாய்க் கம்பெனி" என்று ஒன்று ஏற்படுத்தும் படி அதிகாரம் அவருக்கு வழங்கப்பட்டது. 1855-ல் லெஸ்ஸப்ஸ் நிபுணர்கள் சபை ஒன்றைக் கூட்டினார். அதன் முடிவுதான் மேலே கண்டபடி. 1856 ஜூன் மாதத்தில் பாரீஸ் நகரில் அங்கீகரிக்கப்பட்டது. வேலை துவங்க 1859 வருஷம் வரை தாமதமாயிற்று. சரி பாதி செலவுத் தொகை ராஜப் பிரதிநிதி கொடுத்தார். பாக்கி ஐரோப்பா கண்டத்தில் சேகரிக்கப்பட்டது. அதில் பெரும் பாகம் பிரஞ்சுக்காரர் கொடுத்தது. ராஜப் பிரதிநிதி வேலையாட்களைக் கட்டாய வேலைக்குச் சேகரிக்க ஒப்புக் கொண்டார். அந்த ஒப்பந்தப்படி சுமார் 30,000 ஆட்கள் வேலை செய்தார்கள். அத்துடன் வேலை செய்கிறவர்களுக்குக் குடி தண்ணீருக்கு ஒரு கால்வாயும், அந்தத் தண்ணீரைக் கொண்டு பக்கத்து பூமிகளைப் பயிரிடவும், அந்த பூமிகள், கம்பெனியின் சொந்தமாகக் கருதப்படுமென்றும், ஒப்பந்தத்தில் கண்டிருந்தன. சையத் பாஷா இறந்தபின் அவர் தம்பி இஸ்மாயில் பாஷா ராஜப்பிரதிநிதியானார். அவர் பூமி விஷயமாகவும் ஆட்கள் விஷயமாகவும் உள்ள நிபந்தனைகளுக்கு ஆட்சேபிக்கவே, மத்தியஸ்தம் ஏற்பட்டது. அவர் கம்பெனிக்கு 3,800,000 பவுன் நஷ்டஈடு கொடுத்து, அந்த நிபந்தனைகளை ரத்து செய்து கொண்டார். இந்த மூலதனத்தை வேலைச் செலவுக்கு உபயோகித்து, வேலை பூர்த்தி செய்யப் பட்டது. 1869-ம் வருஷம் பிப்ரவரியில் மத்தியதரைக் கடலிலிருந்தும், ஜூலையில் செங்கடலிலிருந்தும் தண்ணீர் கால்வாயில் வரத் தொடங்கியது. கால்வாயின் நீளம் 66 மைல். நடுவில் சில பழைய ஏரிகள் இருக்கின்றன. ஆனால் உப்புத் தண்ணீர் முகப்பிலிருந்து முடிவுவரை 88 மைல். மொத்தச் செலவு 20,000,000 பவுன் ஆயிற்று. 1875ல் பிரிட்டிஷ் சர்க்கார் ராஜப் பிரதிநிதியிடமிருந்து 176,602 பங்குகளை 3,976,582 பவுன் விலை கொடுத்து வாங்கினார்கள்.

ஆதியில் ஆழம் 26 அடியும், அடியில் அகலம் 72 அடியும் நீர்மேல் மட்டத்தில் சில தூரம் 327 அடி அகலமாகவும், சில தூரம் 196 அடி அகலமாகவும் வெட்டப்பட்டது. கம்பெனி 99 வருஷ காலம் குத்தகைக்கு எடுத்தது.

ஒரு தனியார் கம்பெனியில் ஒரு சிறு பங்குகளை விலைக்கு வாங்கிய பிரிட்டிஷ் சர்க்காருக்கு, சாதாரண பங்குக்காரர்களுக்குள்ள பாத்தியம்தான் உண்டு. வேலை துவங்கும் காலத்தில் இது வீண் என்று விலகி நின்றார்கள் ஆங்கிலேயர். எகிப்து மன்னரும், மற்ற ஐரோப்பியரும் துணிந்து வேலையைப் பூர்த்தி செய்த பிறகு, சில வருஷங்கள் வரை ஆங்கிலேயர் வேடிக்கை பார்த்து வந்தார்கள். இந்தியாவில் அவர்கள் வியாபாரம் பெருகவும், நாலாயிரத்துக்கு அதிகம் மைல் வழிச் செலவு லாபமாக இருப்பதற்கும் எகிப்து அரசனுடைய பங்கில் ஒரு பாகம் வாங்கினார்கள். எகிப்து ராஜ்யத்துக்கு ஒரு நிபந்தனையுமின்றி 1968-ல் கம்பெனியை ஒப்புவிக்க வேண்டியது. ஆகவே சூஎஸ் கால்வாய் எகிப்து ராஜ்யத்தின் சொத்து என்பதில் சந்தேகமே யில்லை. ஆனால் சில வருஷங்களுக்கு முன்னதாகவே குத்தகையை ரத்து செய்வதால், நஷ்டஈடு கொடுக்கப்பட வேண்டியது அவசியம். அதை எகிப்து அரசாங்கம் கொடுக்கத் தயாரா யிருக்கிறது. ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கத்தார், படை பலம் மூலம் பயம் காட்டுவது பலிக்காத வீண் மிரட்டலாய்த்தான் முடியும்.

கோயமுத்தூர்
1—8—1956

ஆர். என். சங்கரன்

படித்துப் பாருங்கள்

சுடர் (புத்த ஜயந்தி மலர்)

கவிதை, நாடகம், கதைகள் முதலிய எல்லா அம்சங்களையும் சிறப்பாகத் தாங்கிக் கொண்டு தனிச் சுடருடன் "சுடர்" பத்திரிகை டில்லித் தமிழ்ச் சங்கத்தின் அரு முயற்சி காரணமாக வெளி வந்திருக்கிறது. ஆண்டு தோறும் புத்தாண்டு மலராக வெளி வரும் "சுடர்" இந்த ஆண்டு புத்த ஜயந்தி மலராக வெளியாகியிருக்கிறது.

"புத்த விஜயம்" என்னும் கவிதையும் "ராமபிரான் செய்த முடிவு" என்னும் ரயில்வே உதவி மந்திரி ஓ. வி. அளகேசன் அவர்களின் கட்டுரையும், "ஒவியத்தில் ஒளி" என்ற "கிருத்திகா"வின் கட்டுரையும், பூர்ணம் விசுவநாதன் அவர்களின் "குடை புராணம்" என்னும் சுவை ததும்பும் கட்டுரையும் நன்றாயிருக்கின்றன. நல்ல தாளில் அழகாக அச்சிடப்பட்டிருக்கும் இந்த இலக்கிய மலரின் அட்டையில் சாந்தம் தவழும் முகத்துடன் கௌதம புத்தரின் திருவுருவம் விளங்குகிறது. சுடரின் இலக்கிய மணத்துக்குச் சான்றாகப் புத்தக விமரிசனப் பகுதியும் சேர்க்கப் பட்டிருக்கிறது. இந்த மலர் சாவதானமாக வைத்துக் கொண்டு ஆழ்ந்து படிக்கக் கூடிய விஷயச் செறிவைக் கொண்டது. கட்டுரைகள் ஆராய்ச்சித் திறனும் இலக்கிய வளமும் கொண்டவை. கட்டுரைகளையும் கதைகளையும் நன்கு தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள் டில்லி தமிழ்ச் சங்கத்தார்.

பிரசுரம்: டில்லித் தமிழ்ச் சங்கம், புது டில்லி. விலை: ரூ. 1—0—0.

நந்தா விளக்கு

விஜயாவுக்குக் கண்ணப்பா, பாலு இருவரும் அத்தை பிள்ளைகள்; கண்ணப்பாவுக்கு விஜயாவினிடம் கட்டுக்கடங்காக் காதல்; ஆனால் விஜயாவின் உள்ளம் பாலுவையே நாடியது. அவள் விருப்பப்படி அவள் தந்தை பாலுவுக்கே அவளை மணம் முடித்து வைத்தார். ஆனால் ஏமாற்றம் அடைந்த கண்ணப்பா விஜயாவை வெறுக்கவில்லை. அதற்கு நேர்மாறாக, விஜயாவின் இல்லற வாழ்க்கையில் எதிர்பாராத விதமாக வீசிய புயலையும் மழையையும், இடியையும் கண்ணப்பா தன் அன்பு உள்ளத்தினால் தாங்கியது மல்லாமல் அவளுக்குப் பல விதத்திலும் உதவியாயிருந்து அவள் வாழ்வில் மீண்டும் ஒளி வீசச் செய்கிறான். அப்பப்பா! அதற்காக அவன் தாங்க நேர்ந்த அல்லல்கள், அவதூறுகள் தாங்கொணாதவை. கதை மிகவும் துரித கதியில், சோகச் சாயையில் செல்லுகிறது. இதயக் குமுறலும், பெண் உள்ளத்தின் சஞ்சலமும், பாசமும், பரிவும் கொந்தளித்துக் குமிழி யிடுகின்றன இக் கதையில். குடும்ப வாழ்வின் சிக்கலையும், காதல் பாதையின் கடுமையையும் ஆசிரியர் தமக்கே உரிய 'பாணி'யில் நன்கு விளக்குகிறார். விஜயாவை அவர் நம் கண்முன் நிறுத்தும் விதத்தைப் பார்த்தால் அவரது எழுதும் திறனைப் புரிந்து கொள்ளலாம்.

"உங்களால் முடியுமானால் நான் அன்று அளித்த தோற்றத்தைக் கற்பனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள். பளிச்சென்று சிவப்புக் கரை வைத்த வெண்பட்டுச் சேலை. சிவப்புப்பட்டை விளிம்பு வைத்த வெண்பட்டு ரவிக்கை. தலையிலே கனகாம்பரச் செண்டு. முதுகின் எல்லை தாண்டித் தொங்கிய பின்னலில் சிவப்புப் பட்டு நாடா. கால்களில் செந்நிறக் கடிவாளங்கள் வைத்த செருப்புகள், கைகளில் இரண்டிரண்டு வளையல்கள். கழுத்தில் ஒரு ஒற்றை வடம் சங்கிலி. நடுவில் சிவப்புக் கல் வைத்துச் சுற்றி முத்து வைத்துப் பொன் அரும்பு கட்டிய தோடுகள் செவிகளில். இவ்வளவுதான் என் ஆடை அலங்காரங்கள்."

நல்ல கதையை நன்றாய் எழுதியிருக்கிறார் இந்நூல் ஆசிரியர் என்று சொல்வது மிகவும் பொருத்தமானது.

ஆசிரியர்: பி. எஸ். ராமையா; பிரசுரம்: அமுத நிலையம் லிமிடெட், தேனாம்பேட்டை, சென்னை—18, விலை: ரூ. 4—0—0.


யார் செய்த குற்றம்?

கௌசல்யா குமரேசனைக் காதலித்தாள்; குமரேசன் கௌசல்யாவைக் காதலித்தான். எல்லாத் தந்தையர்களையும் போல் கௌசல்யாவின் தந்தை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஈசுவரன் அவர்களது காதலுக்குக் குறுக்கே நிற்கவில்லை. அப்படியானால் அவர்கள் கல்யாணம் ஜாம் ஜாம் என்று நடந்தது என்று நினைக்கிறீர்கள், இல்லையா? அது தான் இல்லை. அப்படி சுலபமாகக் காதலர்கள் ஒன்று சேர்ந்து விட்டால், துப்பறியும் சோணியின் திறமைக்கு இந்தக் கதையில் அவசியமே இல்லாமல் அல்லவா போயிருக்கும்! நயவஞ்சகன் மார்க்கசகாயமும் போலீஸில் சிக்கியிருக்க மாட்டானே!

இந்த நூலாசிரியர் சாமர்த்தியமாகச் சிக்கல்களைப் புனைந்து, பிறகு துப்பறியும் சோணியின் மூலம் அத்தனை சிக்கல்களையும் பிரமாதமாக அவிழ்த்து விடுகிறார். கதையின் ஓட்டத்துக்கு நூலின் எளிய நடை ரொம்ப உதவியா யிருக்கிறது. கதாபாத்திரங்களை நல்லுருவங்களுடன் சிருஷ்டிசெய்து, கதையை ரஸமாக ஆரம்பித்துச் சுவாரஸ்யமாக முடித்து வைக்கிறார் ஆசிரியர். எழுதியவர்: ஆர். சண்முகம்; பிரசுரம்: வானதி பதிப்பகம், சென்னை - 17. விலை: ரூ. 1—8—0.

குருநாதன் படம்

முப்புரம் எரித்த முழுமுதற் கடவுளுக்கு உபதேசம் செய்த குருநாதனின் ஆறு படைவீடுகளின் தோற்றங்களையும் கொண்டு பக்தர்களின் வழிபாட்டுக்கு ஏற்ற முறையில் திகழ்கிறது, இம் மூவர்ணப் படம். பிரசுரம்: யுனைடெட் கன்சர்ன், தஞ்சன்கூடு ஆபீஸ், 54, பந்தர்தெரு, சென்னை-1. விலை: ரூ. 1-4-0



தொழில் நிபுணர்கள்

அந்தப் பிள்ளைகளைப் பார்த்தவுடனேயே அவர்கள் பெரிய தொழில் நிபுணர்களாகத் தோற்றமளித்தார்கள். அவர்களுடைய சுறு சுறுப்பான முகங்களும் துருதுரு வென்றிருக்கும் கைகளும் இன்னும் என் மனக் கண் முன் நிற்கின்றன. அடடா! அந்த முகங்களில்தான் எத்தகைய அநுபவம் பிரதிபலித்தது! வருங்காலத்தில் என்னென்ன சாதனைகளை வேண்டுமென்றாலும் செய்யலாம் என்ற நம்பிக்கை அளிக்கக்கூடிய முகங்கள் அல்லவா அவை! அந்த இனிய முகங்களை எப்படி மறக்க முடியும்?

'' உனக்கு என்ன தெரியும்?''

'' நான தையல் வேலை செய்வேன்.''

'' அதோ நிற்கிறானே அவனும் தையல் வேலைதான் செய்வானா?''

'' இல்லை; தச்சு வேலை செய்வான்.''

'' அதோ அந்தப் பையன்?''

'' பிரம்பு வேலை செய்வான்.''

'' இதோ நிற்கிறானே, இவன்?''

'' இரும்பைக் காய்ச்சி உருக்கி அதில் என்ன வேணுமானாலும் செய்வான். கொல்லு வேலை நுட்பங்கள் அத்தனையும் அறிந்தவன்.''

இந்தப் பிள்ளைகள் எல்லாம் தங்கள் வாழ்க்கையின் எதிர்காலத்தைப் பற்றிச் சிறிதும் கவலையில்லாமல் தைரியத்துடன் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் பதிலில் இருந்தே தெரிந்து கொள்ள முடிந்தது. சாதாரண ஏட்டுக்கல்வி பயிலும் மாணவன் சொல்லும் பதிலைப் போலச் 'சப்புச்சவுக்' கென்று இல்லை. அவர்கள் கூறிய பதிலில் தயக்கமும் குழப்பமும் இல்லை. அதில் நல்ல தெளிவும் உற்சாகமும் இருந்தன.

'' அதிசயமான இந்தப் பிள்ளைகளை எங்கே பார்க்க முடிந்தது?''

சென்னை தியாகராய நகரில் உள்ள 'தக்கர் பாபா வித்தியாலயம்' என்னும் ஸ்தாபனத்தில் பார்த்தேன். அவர்கள் எல்லாம் இந்த ஸ்தாபனத்துக்கு வந்தபொழுது ஒன்றும் தெரியாதவர்களாகத்தான் வந்தார்கள். இந்த உலகில் நாம் எப்படிப் பிழைக்கப் போகிறோம் என்ற ஏக்கத்துடன்தான் வந்தார்கள். ஆனால் இந்த வித்தியாலயத்துக்கு வந்த சில ஆண்டுகளிலேயே அவர்கள் அடியோடு மாறி விட்டார்கள். மிகச் சிறந்த தொழில் நிபுணர்களாக வளர்ந்து விட்டார்கள்.

வித்தியாலயத்துப் பிள்ளைகளைப் பார்த்தவுடனேயே அவர்கள் முகங்களும் கண்களும் இந்தக் கதைகளை எல்லாம் சொல்லி விடுகின்றன. அவர்கள் எத்தனையோ காலமாக இந்தச் சமூகத்தில் தாழ்த்தப்பட்டு, நசுக்கப்பட்டு வந்தவர்கள் என்பதை அந்த வாலிபர்களின் களங்கமற்ற கண்களும் முகங்களும் காண்பித்து விடுகின்றன.

இந்தப் பிள்ளைகளில் மிகப் பெரும்பாலோர் ஹரிஜனப் பிள்ளைகள். ஒரு சிலர் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். எல்லாருமாகச் சேர்ந்து மொத்தம் நூற்றுஅறுபத்தாறு பிள்ளைகள் 'தக்கர்பாபா வித்தியாலயத்தில்' அன்னமிட்டு வளர்க்கப்படுகிறார்கள்; கல்வி கற்பிக்கப் படுகிறார்கள். சாதாரண ஏட்டுச் சுரைக்காய் கல்வி அல்ல; இந்தத் தேசத்தின் எதிர்காலத்தை மாற்றி அமைக்கும் வலிமை பொருந்திய தொழிற் கல்வி. வித்தியாலயத்தை விட்டு வெளியில் வந்தவுடன் வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படாமல் இருப்பதற்கு வேண்டிய, அன்றாட வாழ்க்கையில் மிக மிக அவசியமான தொழிற் கல்வி அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

** ** **

கிண்டியில் உள்ள பிரசித்திபெற்ற இன்ஜினியரிங் கல்லூரியை உங்களில் சிலர் பார்த்திருப்பீர்கள்; அல்லது கேள்விப்பட்டாவது இருப்பீர்கள். பல லட்சம் ரூபாய்கள் செலவில் கட்டப்பட்ட கட்டடங்கள்; விசாலமான ஹால்கள்; குறுக்கும் நெடுக்கும் அழகழகான சாலைகள்; சாலைகளுக்கு இரு புறங்களிலும் மலர் குலுங்கும் செடிகள்; வழவழவென்று தளவரிசை போட்ட விளையாடு மிடங்கள்— இம்மாதிரி நாகரிக ஆடம்பரங்களுடன் கிண்டி இன்ஜினியரிங் காலேஜ் விளங்குகிறது. இந்த ஸ்தாபனத்துக்குச் சர்க்கார் பல லட்சம் ரூபாய்கள் நன்கொடை அளித்திருக்கிறார்கள்; இன்னும் நன்கொடை தந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் கல்லூரியில் சேருவதற்கு

* வித்தியாலயத்தின் பிரதான கட்டடத்தையும், வித்தியாலயச் சிறுவன் தான் நூற்ற நூலைச் சிட்டத்தில் சுற்றுவதையும், இரும்புத் தொழில் பகுதியில் வேலை நடப்பதையும் மேலே உள்ள படங்களில் காணலாம். —போட்டோ: கே. விசுவநாதன்



வளருகின்றனர்

பகீரதன்

குறைந்த பட்சம் இண்டர்மீடியட் வகுப்பாவது படித்துத் தேறி யிருக்க வேண்டும். ஏராளமான சிபாரிசுகள் வேண்டும். பெரும் பணச் செலவு செய்தாக வேண்டும். இதன் பயனாக வருஷந்தோறும் நூற்றுக் கணக்கான தொழில் நிபுணர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். இப்படி வெளியேற்றப் படுவோரில் பெரும்பாலோர் தங்கள் படிப்புக்குச் சம்பந்தமில்லாத துறையில் ஈடுபட்டு வேலை தேடவேண்டி யிருக்கிறது.

தியாகராய நகரிலிருந்து கிண்டி இன்ஜினியரிங் கல்லூரிக்குப் போகும் சாலையோரமாகத் ''தக்கர்பாபா வித்தியாலய''த்தின் கட்டடம் இருக்கிறது. சிறிய இடத்தில் இயற்கைக் காட்சிகளுக்கிடையே அமைந்திருக்கும் பல்வேறு கட்டடங்கள். பிரதானக் கட்டடம், தொழில் வகுப்புகள் நடக்கும் கட்டடம், மாணவர்கள் விடுதி, பிரார்த்தனைக் கூடம், நூல் நிலையம் எல்லாம் இருக்கின்றன. இவற்றில்தான் நூற்றுஅறுபத்தாறு பிள்ளைகள் தொழில் கல்வி பயில்கிறார்கள்.

கிண்டியில் உள்ள மாபெரும் இன்ஜினியரிங் கல்லூரியைக் காட்டிலும் இந்தச் சின்னஞ் சிறு தக்கர்பாபா வித்தியாலயத்தையே நான் முக்கியமான ஸ்தாபனமாகக் கருதுகிறேன்.

ஏனெனில், இன்ஜினியரிங் கல்லூரியில் ஏழை எளிய மாணவர்கள் கலபமாகச் சேர்ந்து படிக்க முடியாது அல்லவா?

தக்கர் பாபா வித்தியாலயத்திலோ ஏழை எளிய மாணவர்களான ஹரிஜனச் சிறுவர்களும், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களும் சுலபமாகச் சேர்ந்து தொழில் நிபுணர்களாகலாம். இந்தத் தொழிற் கல்விச் சாலையில் சேருவதற்கு எட்டுக் கல்வி ஓரளவு தெரிந்திருந்தால் மட்டும் போதும். அதாவது, ஆறாம் வகுப்புவரை படித்திருந்தால் போதும்.

ஆகையால் கட்டடங்கள் சுமாராக இருந்த போதிலும், பிள்ளைகளின் தொகை சொற்பமாயிருந்த பிருந்தபோதிலும், செலவுக்குப் பணம் போதாமல் கஷ்டப்பட்ட போதிலும், தக்கர்பாபா வித்தியாலயம் இந்த நாட்டுக்குச் செய்து வரும் தொண்டு மகத்தானது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

காந்தி மகாத்மா தம் வாழ்நாளில் பல இயக்கங்களை ஆரம்பித்தார்; பல அரிய நிர்மாணத் திட்டங்களை வகுத்தார். ஹரிஜன மக்களின் உயர்வுக்காகப்பாடுபட்டார். எல்லாம் நம் பாரத நாட்டின், பாரத மக்களின் உண்மையான க்ஷேமத்தை முன்னிட்டே செய்தார்.

இந்திய சமூகமுன்னேற்றத்துக்காகக் காந்தி மகாத்மா வகுத்த திட்டங்களில் ஒன்று ஆதாரக் கல்வித் திட்டம். ஏறக்குறைய அந்தத் திட்டத்தின் அடிப்படையில் நவீன வசதிகளுடன் தொழிற் கல்வி அளிக்கப்பட்டு வரும்ஸ்தாபனம் தக்கர்பாபா வித்தியாலயம்.

1934-ம் ஆண்டு காந்தி மகாத்மா தென்னாட்டில் ஹரிஜன யாத்திரை செய்தார் அல்லவா? அப்பொழுது அந்த யாத்திரையின் ஞாபகார்த்தமாகக் கோடம்பாக்கத்தில் ஒரு சின்னஞ் சிறு வாடகைக் கட்டடத்தில் தக்கர் பாபா வித்தியாலயம் தொடங்கப்பட்டது. தம் வாழ்நாளையே ஹரிஜனங்களின் சேவைக்காக அர்ப்பணித்த ஸ்ரீ தக்கர் பாபாவின் திரு

தக்கர்பாபாவும் காந்தி மகாத்மாவும்





நாமத்தை இந்த ஸ்தாபனத்துக்குச் சூட்டினார்கள். பொது வாழ்வில் மாசு மறுவின்றித் தொண்டாற்றிய அந்த உத்தமரின் பெயரைத் தாங்கி நிற்கும் இந்த ஸ்தாபனத்தின் மீது காந்தி மகானுக்கு அளவற்ற நம்பிக்கை ஏற்பட்டது. அவர் இருந்தவரையில் அடிக்கடி இதற்கு வேண்டிய உதவிகளை அளித்து வந்தார். அருமையான ஆலோசனைகள் கூறி ஸ்தாபனத்தை வளர்த்து வந்தார்.

மூன்று ஆண்டுகளுக்குப் பின் 1937-ம் ஆண்டில் இந்த ஸ்தாபனம் தமிழ் நாட்டு ஹரிஜன சேவா சங்கத்தின் மேற்பார்வையில் நடக்க ஆரம்பித்தது. ஒரு வருஷத்துக்குப் பிறகு 1938-ம் ஆண்டில் மத்திய ஹரிஜன சேவா சங்கத்தார் இந்த ஸ்தாபனத்தை நல்ல முறையில் நடத்துவதற்கு முயன்றார்கள். ஸ்தாபனத்தைக் கவனிப்பதற்காக ஒரு தனிக் குழு நியமித்து அதன் மூலம் தக்கர்பாபா வித்தியாலயம் திறம்பட நடப்பதற்கு வேண்டிய வழி வகுத்தார்கள்.

1946-ம் ஆண்டில் தக்கர் பாபா வித்தியாலயத்தின் சிறப்பு மேலும் உயர்ந்தது. காந்தி மகாத்மா சென்னை நகரில் தங்கியிருந்தபோது அவரே தமது பொற் கரங்களால் தக்கர்பாபா வித்தியாலயத்தின் சொந்தக் கட்டடத்துக்கு அடிப்படைக் கல் நாட்டினார்.

காந்தி மகான் அடிப்படைக் கல் நாட்டிய இடத்திலேதான் இன்று தக்கர் பாபா வித்தியாலயத்தின் பிரார்த்தனை மண்டபம் இருக்கிறது. மண்டபத்தில் காந்தி மகானின் திரு உருவச் சிலையை அமைத்திருக்கிறார்கள். அந்த உருவச் சிலைக்கு அருகில் நின்றால் மனத்தில் சேவா உணர்ச்சியே உண்டாகிறது. அந்தச் சிந்தனையுடன் காந்திஜியின் திருவுருவத்தைப் பார்த்தால் தாம் ஆரம்பித்த காரியம் நன்றாக நடக்கிறதா என்று காந்தி மகான் இந்த ஸ்தாபனத்தின் மத்தியில் அமர்ந்து பார்ப்பது போல் தோற்றமளிக்கிறது.

இந்த மண்டபத்தை யொட்டி அமைத்துள்ள நூல் நிலையத்தில் காந்திமகான் கொள்கையை வலியுறுத்தும் நூல்களும், அவர் உபயோகப்படுத்திய சில சாமான்களும் இருக்கின்றன. சென்னையில் அவர் தங்கி யிருந்தபோது உபயோகித்த கட்டிலை இங்கு வைத்திருக்கிறார்கள். சற்று நேரம் அந்தக் கட்டிலைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும். காந்தி மகானே அதில் படுத்துக் கொண்டிருப்பது போன்ற பிரமை ஏற்படுகிறது.

மகாத்மா காந்தி அடிப்படைக் கல் நாட்டிய தக்கர் பாபா வித்தியாலயக் கட்டடத்தை 1935-ம் ஆண்டு நமது சுதந்திரக் குடியரசின் தலைவர் பாபு

1. இரும்புத் தொழில் பகுதியில் பெரிய இரும்புக் கதவைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றனர். 2. மாணவர்கள் உணவு விடுதியில் அமைதியாக உணவு அருந்துகின்றனர். 3. மாணவர்கள் செய்த பல தரப்பட்ட மரச் சாமான்கள் விற்பனைக்

ராஜேந்திர பிரசாத் திறந்து வைத்து நல்வாழ்த்து கூறினார்.

சமூகத்தின் அடித்தட்டில் கிடந்துழன்ற ஹரிஜன மக்களுக்குத் தொழிற்கல்வியளித்து அவர்கள் எல்லா மக்களுடனும் சரிநிகர்சமானமாக வாழ வேண்டும் என்பதற்காகக் காந்தி மகான் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்ட தக்கர்பாபா வித்தியாலயத்தில் ஆரம்பத்தில் இருபது மாணவர்கள்தான் இருந்தார்கள். இன்று அது நூற்று அறுபத்து ஆறு மாணவர்களுடன் தமக்கே சொந்தமாக உள்ள ஒரு கட்டடத்தில் பல தொழில்களைப் பயிற்றுவிக்கும் தொழில்ஸ்தாபனமாகத் திகழ்கிறது.

வித்தியாலயத்தில் உள்ள ஹரிஜனப் பிள்ளைகள், பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் உணவும் உடையும் பெற்று அங்கேயே வசித்து வருகிறார்கள். இவர்களைக் கண்ணும் கருத்துமாகக் கண்காணித்துத் தொழிற் கல்வி பயிற்றுவிப்பதற்கு இருபது தொழில் நுட்ப ஆசிரியர்கள் வித்யாலயத்திலேயே இருக்கிறார்கள்.


இவர்கள் பிள்ளைகளுக்கு அளிக்கும் தொழிற்கல்வி வெறும் போலிப் பேச்சல்ல என்பதை நேரிலேயே கண்டேன். பிள்ளைகள் பிரம்பு நார்களாலும், பிரம்பைக் கொண்டும் செய்த பலவிதமான சாமான்களைப் பார்த்தேன். இவைகள் எல்லாம் அந்த மாணவர்கள் செய்ததுதானா என்று சந்தேகப்படும்படி அவ்வளவு ஒழுங்காகவும், உறுதியாகவும், தொழில், கலை நுணுக்கத்துடனும் பளீர் என்று ஒளி வீசிக் கொண்டிருந்தன.

தையல் தொழில் கற்றுக் கொடுக்கும் இடத்துக்குச் சென்றால் ஒருகணம் பிரமை ஏற்படுகிறது. அங்கு தைத்து வைத்திருக்கும் உடுப்புகளையும் அதைத் தைத்த ஹரிஜன மாணவர்களையும் மாறி மாறிப் பார்த்து வியக்க வேண்டியிருக்கிறது.

போலீஸ் உடுப்புகளில் இருந்து இன்னும் பலமாதிரியான உடுப்புகளையும் தைக்கிறார்கள். அவைகளுக்கு வேண்டிய துணியைத் தாங்களே வெட்டி, சுத்தமாகத் தைத்து மடித்து வைக்கும் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

தச்சுத் தொழிற் பகுதியில் மர வேலைகள் அத்தனையும் அற்புதமாக நடைபெறுகின்றன. மரத்தை அளவாக அறுக்கிறார்கள். இழைப்புளி கொண்டு இழைக்கிறார்கள். என்னென்ன சாமான்கள் செய்ய வேண்டுமோ அந்தச் சாமான்களின் மாதிரிகளை வைத்துக் கொண்டு வேலைசெய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட சாமான் செய்வதற்கு எவ்வளவு மரம் வேண்டும், என்ன மாதிரி மரம் வேண்டும் என்பதையெல்லாம் தாங்களே புரிந்துகொண்டு செய்












குத் தயாராக இருக்கின்றன. 4. பிரம்பு வேலை நடக்கிறது. 5. தோட்ட வேலை நடைபெறுகிறது. 6. உணவுத் தட்டுகள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. 7. மாலைப் பிரார்த்தனை நடைபெறுகிறது. 8. தையல் வேலை நடக்கிறது.



Godrej ரிஜிஸ்டர்டு

கோத்ரெஜ்

டம்ளர்

பாட்லாக்

ஆணியால் இறுக்கப்படாத தயாரிப்பு

கலவை உலோகங்களால் தயாரிக்கப் பட்டது. அதன் எஃகினாலான பூட்டு வளையத்திற்கு துருவை எதிர்ப்பதற்காக "காட்மியம் - பிளேடிங்" கொடுக்கப்பட்டிருக்கிறது.


ரூ. 3-4 மாத்திரம் (வரிகள் தனி)

கோத்ரெஜ் அண்டு பாய்ஸ் மானுபாக்சரிங் கம்பெனி லிட்.
ஸ்தாபிதம் : 1897

பாதுகாப்புச் சாதனங்கள், வீடு ஆபீஸ், ஆஸ்பத்திரி, காண்டீன், வாசகசாலைக்கான...எஃகு பர்னிச்சர், எஃகு ஜன்னல்கள், டைப்ரைட்டர்

வெளிவந்துவிட்டது!
நவநாகரிக கவர்ச்சியுள்ள அழகிய மாடல்

G.E.C.



6 வால்வ் ரேடியோ
B.C 5543 AC - B.C 6542 AC/DC
நிகர விலை ரூ. 495/-
12 மாத உத்தரவாதத்துடன்

வயர்லெஸ் சேல்ஸ் & சர்வீஸ் கம்பெனி
1/11-A, மவுண்ட் ரோடு, சென்னை-2
போன் : 86506 - தந்தி : "RADSALES"

கிளைகள்

பெஸன்ட் ரோடு, காந்திநகர், விஜயவாடா ✱ 28, கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி ரோடு, வேலூர் ✱ செர்ரி ரோடு, சேலம்

தீய ஆஸ்த்மா பிராங்கைட்டிஸ் சளி
நீங்கள் தூங்கும்போது இளகுகிறது

ஆஸ்த்மா, பிராங்கைட்டிஸ், ஜலதோஷத்தால் மூச்சுத்திணறல், இருமல், தும்மல், மூச்சடைப்பு உபாதைகளால் அவதிப்படும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இப்போது மெண்டாகோ (Mendaco) அருந்தி அற்புத நிவாரணம் அடைகிறார்கள். இந்த நவீன, விஞ்ஞான, அமெரிக்க மருந்து இரத்தத்தின் வழியே சுவாசப் பைகள், சுவாசக் குழாய்கள், மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடர்ந்துள்ள சளியை இளக்கிக்கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் தும்மலின்றி சுலபமாக சுவாசித்து குழந்தைபோல் தூங்கலாம். கெமிஸ்டிடம் மெண்டாகோ (Mendaco) வாங்குக. திருப்தி இன்றேல் பணம் வாபஸ்.

கிறார்கள். மேஜை, நாற்காலி, பீரோ இன்னும் பலப்பல விதமான மரச் சாமான்களை எல்லாம் கன கச்சிதமாகச் செய்கிறார்கள். அவர்கள் செய்து வைத்திருக்கும் சாமான்களைப் பார்த்தபோது, ''அடாடா! பிள்ளைகளுக்கு மட்டும் நல்ல முறையில் தொழில் கற்றுக் கொடுத்தால் அவர்களால் சாதிக்க முடியாத காரியமே இருக்காது என்பதற்கு இந்தப் பொருள்களே அத்தாட்சி'' என்று எண்ணி வியக்கத் தோன்றுகிறது.

இரும்புத் தொழிற்பகுதியில் சென்றால் இன்னும் வியப்பாக இருக்கிறது. இரும்பைக் காய்ச்சி உருக்கி இயந்திரங்கள் செய்யும் விந்தையைப் பார்ப்பதற்குப் பதினாயிரம் கண்கள் வேண்டும். மிகப் பெரிய தொழிற்சாலைக் கூரைகள் போடுவதற்கு வேண்டிய முக்கோண இரும்பு உத்தரங்கள் செய்கிறார்கள். பெரிய பெரிய தொழிற்கூடங்கள், பங்களாக்கள் வாசலில் வைத்திருக்கும் மடக்கித் திறக்கும் வசதி படைத்த இரும்புக் கதவுகள், சாதாரண இரும்புக் கதவுகள், சித்திர விசித்திரமான வேலைப்பாடுகள் நிறைந்த இரும்புக் கதவுகள், இப்படி இரும்புக் கதவுகளிலேயே பல விதமான கதவுகளைச் செய்கிறார்கள். இயந்திரங்களைச் செப்பனிடுகிறார்கள். இரும்பு மரையும், மரை ஆணியும் செய்து குவிக்கிறார்கள். பிரதி எடுக்கும் இயந்திரம் 'டூப்ளிகேட்டர் மிஷின்' தயாரிக்கிறார்கள்.

இந்தச் சாமான்களை எல்லாம் வித்தியாலய மாணவர்களே தயாரிக்கிறார்கள். நல்ல தொழில் நிலையத்தில் செய்வது போலவே சிறந்த முறையில் குற்றம் குறையில்லாமல் உருவாக்குகிறார்கள்.

இன்னும் மோட்டார்கள் சம்பந்தமான இயந்திர நுட்பங்களையும் பயில்கிறார்கள்.



வித்தியாலயக் காரியதரிசி
ஸ்ரீ எல்.என். கோபாலசாமி

''இந்தப் படிப்புக்கெல்லாம் எத்தனை ஆண்டுகள் ஆகின்றன?''

''தையல் தொழிலும், பிரம்புத் தொழிலும் மட்டும் அவர்கள் கற்றுக் கொள்வதற்கு மூன்று ஆண்டுகள் ஆகின்றன.''

''மற்ற இரண்டு தொழில்களுக்கு?''

''தச்சுத் தொழிலையும், கொல்லுத் தொழிலையும்தானே கேட்கிறீர்கள்?''

''ஆமாம்.''

''தச்சு வேலையும், இரும்பு வேலையும் கற்றுக் கொள்வதற்கு ஐந்து வருஷங்கள் ஆகின்றன.''

''படிப்பு முடிந்து வெளியில் சென்ற மாணவர்கள் இப்பொழுது என்ன செய்கிறார்கள் என்று ஏதாவது தெரியுமா?''

''தக்கர்பாபா வித்தியாலய மாணவர்களுக்குடனே வேலை கிடைக்கிறது. காரணம் அவர்கள் தொழில் படிப்பு மட்டும் பெற்றுத் தொழில் நிபுணர்களாகச் செல்வது அல்ல. ஒழுக்கமும், கட்டுப்பாடும், உலக அறிவும், தேசபக்தியும், பொறுப்புணர்ச்சியும் நிறைந்த உத்தம மாணவர்களாகச் செல்லுகிறார்கள். அதனால் அவர்களை எல்லாத் தொழில் நிலையங்களும் இரு கைகளையும் நீட்டி வரவேற்று உத்தியோகத்தில் அமர்த்திக்கொள்கின்றன.''

இவைகள் அத்தனையும் உண்மை என்பதைத் தக்கர்பாபா வித்தியாலய மாணவர்களையும், அவர்கள் செய்யும் வேலையையும் பார்த்த உடனேயே புரிந்து கொள்ள முடிகிறது.

மரச் சாமான்கள், இரும்புச் சாமான்கள், பிரம்புச் சாமான்கள், தையல் வேலைகள் எல்லாவற்றுக்குமே தக்கர்பாபா வித்தியாலயத்தை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். கூலி குறைவாக இருப்பது மட்டுமல்ல, உறுதியாகவும் வேலை சுத்தமாகவும் இருக்கின்றன. அத்துடன் நூற்றுக்கணக்கான ஹரிஜனங்களுக்குத் தொழிற் கல்வி அளித்த புண்ணியத்தையும் பெற்று மகிழலாம்.

வித்தியாலயத்துக்குத் தேவையான காய்கறிகள் எல்லாம் அங்கேயே பயிராகின்றன. உளியும், சம்மட்டியும், கத்திரிக்கோலும், பிரம்பு நார்களையும் பிடித்துத் தொழில் செய்யும் கைகளே பயிர்களுக்குத் தண்ணீர் ஊற்றி வளர்க்கின்றன. மற்றும் நூற்றல், நெசவு முதலிய தொழில்களும் பயில்கிறார்கள். இது மட்டுமா? பொது அறிவுப் பாடங்களும், இந்தியும், சங்கீதமும் அவர்களுக்குப் போதிக்கப் படுகின்றன. இந்தப் புண்ணிய பாரதநாட்டை வருங்காலத்தில் ஆளப் போகும் தொழில் நிபுணர்களாக வளர்க்கப்படுகிறார்கள்.

******

காந்தி மகான் வகுத்த இந்த அற்புதத் திட்டத்தை யார் வேண்டுமானாலும் நடத்தி வைத்துவிட முடியுமா? உயிரையும் உள்ளத்தையும் அறிவையும் ஆன்மாவையும் சிறைப்படுத்தியிருக்கும் மெக்காலே கல்வித் திட்டத்தில் ஊறி வளர்ந்தவர்கள் காந்தி மகாத்மாவின் திட்டத்தை அறிந்து கொள்ளுதல் அவ்வளவு எளிய காரியமன்று: அறிந்து கொண்டாலும் நடத்தி வைத்தல் மிகவும் கடினமான காரியம்.

காந்திமகானிடம் பரிபூரண நம்பிக்கை கொண்டு, அவர் பணித்த தொண்டுகளுக்கே தம்மை அர்ப்பணம் செய்ய முன் வந்தவர்களால்தான் அவர் வகுத்த திட்டத்தை அறிந்து நடத்திவைக்க முடியும்.

அத்தகைய மகாத்மாவின் சீடர்களில் ஒருவரும், நீண்ட நெடுங்காலமாக ஹரிஜன சேவை செய்து வருபவருமான ஸ்ரீ எல். என். கோபாலசாமி இப்பொழுது ''தக்கர்பாபா வித்தியாலய''த்தின் பொறுப்பை ஏற்று நடத்தி வருகிறார். வித்தியாலயம் சீர்குலைந்து அதை மூடிவிட வேண்டியிருக்குமோ என்று சந்தேகப்படும் நிலையில் இருந்த போது வித்தியாலயத்தைத் தைரியமாக ஏற்று நடத்துவதற்கு முன் வந்தார். வித்தியாலயத்தில் இருந்த ஊழல்களையும், குறைகளையும் போக்குவதற்கு அரும் பாடுபட்டு அதில் வெற்றியும் பெற்றார். காந்தி மகாத்மா,

தக்கர் பாபா, ஆகிய இரண்டு உத்தமத் தலைவர்களின் தொடர்பு கொண்ட வித்தியாலயம் நல்ல முறையில் வளர வேண்டும் என்று அதன் பணியைப் பரிபூரண சிரத்தையுடன் நடத்தி வருகிறார். தக்கர் பாபா வித்தியாலயத்தையும் மற்றும் ஹரிஜன முன்னேற்றத் தொண்டுகளையும் தவிர ஸ்ரீ எல்.என். கோபாலசாமிக்கு வேறு நினைவே கிடையாது.

** ** **

தக்கர்பாபா வித்தியாலயத்துக்கு ஒருநாள் நானும் சில நண்பர்களும் போயிருந்தோம். வித்தியாலயத்துக்குள் பிரவேசிக்கும் போதே ஒரு புதிய புனிதமான உலகத்தில் பிரவேசிக்கிறோம் என்னும் உணர்ச்சி உண்டாயிற்று. வித்தியாலயத்தின் தோற்றம் சோழ நாட்டின் இயற்கை வளத்தை நினைவூட்டுகிறது. தென்னை, வாழை, கறிகாய்கள், மலர் குலுங்கும் செடிகள் முதலியவை பரவலாகக் காணப் படுகின்றன. வித்தியாலயத்துக்குத் தகுந்த சூழ்நிலை இதைவிட என்ன வேண்டும்?

வித்தியாலயத்தின் பொதுத் தோற்றத்தைப் பார்த்தவுடன் மகிழ்ந்து போனோம். அங்கு பிள்ளைகள் தொழில் கல்வி பெறுவதைக் கண்ணாரக் கண்டு மனமார வாழ்த்தினோம். அவர்கள் தோட்ட வேலை செய்வதும், விளையாடுவதும் மகிழ்ச்சிதரும் அரிய காட்சிகள். ஆசிரியர்களையும் நிர்வாகிகளையும் பார்ப்பதற்குப் பெருமையாக இருந்தது. அவர்கள் செய்து வரும் தொண்டைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிடத் தோன்றியது. மாணவர் விடுதி அமைந்திருக்கும் முறையைப் பார்த்துப் பார்த்து வியக்கவேண்டியிருந்தது. அங்கு வரிசை வரிசையாகக் கட்டில்கள்போட்டிருப்பதும், மாணவர்கள் தங்கள் பெட்டி, படுக்கை, ராட்டினம் முதலியவைகளை அழகாக அடுக்கி வைத்திருக்கும் ஒழுங்கும் அவர்கள் சுத்தத்துக்கு ஒரு உதாரணமாக விளங்கின. அவர்கள் ஒருவர்பின் ஒருவராக உணவு விடுதிக்குப் போவதும், சாப்பிட்டபின் சற்று நேரம் அமைதியாக ஓய்வு எடுப்பதும் நல்ல பண்புக்கு எடுத்துக் காட்டாகக் காட்சியளித்தது. மாலை நேரத்தில் பிள்ளைகள் காந்திஜி சிலையின் முன்னால் அமைந்துள்ள அழகான திறந்த வெளி மண்டபத்தில் வட்டமாக அமர்ந்து மனம் குவிந்து பிரார்த்தனையும் பஜனையும் செய்த அற்புதக் காட்சி மனத்துக்கு நிம்மதி அளித்தது.

ஆனால் வித்தியாலயத்தின் நிலையைப் பற்றி அதன் காரியதரிசி கூறிய விஷயங்கள் கேட்பதற்கு மிகவும் வருத்தமாயிருந்தது. சுருக்கமாகச் சொன்னால் தக்கர்பாபா வித்தியாலயம் ஆதரவற்ற ஒரு அகதி ஸ்தாபனமாக இருப்பதாகவே தோன்றியது.

ஏன் இப்படி இருக்க வேண்டும்? சர்க்காரின் ஆதரவில் தொழில் கல்வி வளர்ச்சிக்காகப் பல உருப்படாத ஸ்தாபனங்கள் பல கோடி ரூபாய்களை விழுங்கிக் கொண்டு வருகிறதே: தொழிலை வளர்க்கிறோம், தொழில் நிபுணர்களைத் தயாரிக்கிறோம் என்று லட்சக்கணக்கான ரூபாய்களை வாரி வாரி இறைத்து வருகிறார்களே: இதைப் போன்ற அருமையான தொழில் ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு உதவுவதற்கு மட்டும் சர்க்காரிடம் பணம் இல்லாமலா போயிற்று?

பண உதவி ஒருபுறம் இருக்கட்டும். மராமத்து இலாகா போன்ற தங்கள் இலாகாவுக்கு வேண்டிய வேலையைக் கண்டிராக்டர்களிடம் கொடுத்துத் தரக் குறைவான சாமான்களைப் பெறுவதைவிடத் தங்கள் தேவைக்கு வேண்டிய சாமான்களைச் செய்து கொடுக்கும்படி தக்கர்பாபாவித்தியாலயத்தைக் கேட்கலாமே! அப்படி வேலைகொடுப்பதே வித்தியாலயத்துக்குப் பெரிய உதவியாயிற்றே! தொழிற் கல்வி பயிலும் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு வேலையும் தொழில் கல்வியும் பெற வசதி செய்து கொடுத்ததாகுமே! இம்மாதிரி செய்வதே வித்தியாலயத்துக்கு உதவியும், ஊக்கமும் அளிப்பதாகுமே!

சர்க்கார் கிடக்கட்டும்: சென்னை நகரில் காந்தி மகான் ஆரம்பித்த இந்த அருமையான ஸ்தாபனத்தைப் போற்றி வளர்க்க வேண்டாமா? இந்த உத்தமக் காரியத்துக்குப் பொருள் உதவி செய்யக்கூடிய புண்ணியவான்கள் சென்னையிலும், தமிழ் நாட்டிலும் இல்லாமலா போய் விட்டார்கள்?

அவர்கள் எல்லாரும் மனம் வைத்தால் தக்கர்பாபா வித்தியாலயத்தில் இப்பொழுதுள்ள நூற்று அறுபத்தாறு மாணவர்களுடன் இன்னும் நூற்று நாற்பது ஹரிஜன மாணவர்கள் சேர்ந்து தொழிற் கல்வி பயிலுவதற்கு வசதி செய்யலாம். தொழில் வளம் பெருக வேண்டிய இந்த நாட்டில் தொழில் நிபுணர்கள் போதுமான அளவு இல்லை என்ற குறையை இல்லாமல் போக்கலாம்.

39

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

கிறிஸ்தவ பிரசாரகர்களுக்கு காந்தியடிகள் சொன்னது :

" நீங்கள் இந்தியாவில் பிரசாரம் செய்ய வருகிறீர்கள். கடவுளைப் பற்றி ஒன்றும் தெரியாத மக்கள் கூட்டம் கல்லையும் பொம்மையையும் பூஜை செய்யும் அஞ்ஞானிகள் என்று இந்திய மக்களைக் கருதி அவர்களுக்கு அறிவூட்ட வருகிறீர்கள். ஒரு கிறிஸ்தவ ஞானி மானிட உலகத்தைப் பற்றி எழுதியிருக்கிற பாட்டில் ஒரு வரி என்னை எப்போதும் உறுத்துகிறது. **'கடவுள் படைத்த நாடு அழகாக இருக்கிறது. ஆனால் மானிடனே நீசனாக இருக்கிறான்.'**

பிஷப் ஹேபர் இப்படி எழுதாமல் இருந்திருக்கலாம். இந்தியா முழுதும் நான் சஞ்சாரம் செய்திருக்கிறேன். என்னுடைய அனுபவத்தில் இது உண்மையல்ல. இந்த விசால தேசத்தில் உள்ளதை உள்ளபடி காண வேண்டுமென்று எங்கும் அலைந்திருக்கிறேன். முந்தியே ஒரு முடிவை மனத்தில் வைத்துக் கொண்டு நான் போய் ஆராய்ச்சி செய்தவனல்ல. பாரத தேசத்தில் நான் கண்ட மானிடன் நீசன் அல்ல. கங்கை, யமுனை, பிரம்மபுத்திரா முதலிய ஆறுகளின் வெள்ளத்துக் கிடையில் வாழும் மக்கள் பொய்யர்கள், கயவர்கள் அல்ல. என்னைப் போலவும், உங்களைப் போலவுமே அவர்கள் சத்தியத்தை நாடுகிறவர்கள். ஏன், நம்மைவிட மேம்பட்டவர்கள் என்றே சொல்லலாம். எனக்கு ஒரு பிரெஞ்சு நண்பர் சொன்ன கதை நினைவுக்கு வருகிறது.

ஞான விளக்கம் தேடிக் கொண்டு ஒரு படை வெளியேறியதாம். அதில் ஒரு கூட்டம் இந்தியாவில் இறங்கிற்றும். இறங்கி, சேரியில் ஒரு சிறு குடிசையில் கடவுளையும் சத்தியத்தையும் கண்டார்களாம்.

ஹரிஜனங்களுடைய பல குடிசைகளில் நீங்கள் தெய்வம் இருப்பதைக் காண்பீர்கள். உங்களுக்கு நான் உறுதியாகச் சொல்லுகிறேன். அவர்கள் வாதம் செய்ய மாட்டார்கள். ஆனால் அவர்களின் கடவுள் பக்தியை அசைக்க முடியாது. அவர்களுடைய தினசரி வாழ்க்கைக்கு அவர்கள் கடவுளையே நம்பியிருக்கிறார்கள். ஆண்டவனுடைய அருளைப் பெற்றும் வருகிறார்கள். சேரியில் வசிக்கும் ஹரிஜனங்களைப் பற்றிப் பல ஞானக் கதைகள் உண்டு. அவர்களில் பலர் அஞ்ஞானிகள் தான். கெட்டவர்களும்தான். ஆனால் அவர்களில் ஞானிகளும் உண்டு, மிகப் பெரிய ஆத்மாக்களும் உண்டு. நான் இப்படிக் கண்டது சேரிகளில் மட்டுமல்ல. பல பிராம்மணர்களிலும் இப்படியே கண்டிருக்கிறேன். பிராம்மணர்கள் அல்லாத பல ஜாதியினர்களிலும் இதைக் கண்டிருக்கிறேன். உலகத்தில் எந்தப் பகுதியில் நீங்கள் கண்டெடுத்துக் காட்டக் கூடிய பக்தியும் ஞானமும் இந்தியாவிலும் எந்த ஜாதியிலும் காணலாம்.


பிராம்மணர்களாகப் பிறந்தவர்கள் பல பேர் இருக்கிறார்கள். தியாகம், தெய்வபக்தி, அடக்கம் இந்தக் குணங்களை உருக் கொண்டாற் போன்றவர்கள். உடல், ஆவி இரண்டையும் தீண்டாதவர்களுக்காகக் கொடுத்துச் சேவை செய்பவர்கள், எந்த பிரதியுபகாரமும் எதிர்பார்க்காதவர்கள் — இருந்துவருகிறார்கள். வைதீகர்களுடைய விரோதத்தையும் சாபங்களையும் அடைந்து சகித்து வருகிறார்கள். தீண்டாதவர்களுக்குச் சேவை செய்வது தெய்வப் பணி என்று கருதி எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு வருகிறார்கள். இதற்கெல்லாம் என் அனுபவமே சாட்சி. இந்தத் தேசத்துக்கு நன்மை செய்வதற்காக நீங்கள் வந்திருக்கிறீர்கள். ஆனபடியால் இந்த தேசத்தை நன்றாக நீங்கள் அறிய வேண்டும். அதனாலேதான் இதையெல்லாம் உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்தியாவில் வாழும் மக்களின் கஷ்டமும் குறையும் என்ன என்பதை விசாரித்து அவற்றை நீக்க நீங்கள் வந்திருக்கிறீர்கள். இந்தியாவிலிருந்து நீங்களும் ஓரளவு நன்மையும் அறிவும் பெறலாம். வேண்டாம் என்று காதையும் கண்ணையும் மூடிக் கொள்ளாதீர்கள். இந்த நாட்டில் நீங்கள் பெறக்கூடிய நல்ல விஷயம் ஏதுமே இல்லை என்று நெஞ்சைக் கல்லாக்கிக் கொள்ளாதீர்கள் ! தெய்வபக்தி இந்த நாட்டில் நன்றாக இருக்கிறது. உங்களுக்கு நான் உறுதியாகச் சொல்லுகிறேன். பைபிள் புஸ்தகத்திலிருந்து மந்திரம் எடுத்து உச்சரித்தால் மனிதன் கிறிஸ்தவனாகி விடுகிறான்

என்று எண்ணுகிறீர்கள். ஏசு கிறிஸ்துவின் பெயரையே அறியாதவர்கள் பலர் இருக்கிறார்கள். கிறிஸ்தவ மதத்தை உங்களுடைய வியாக்யானத்தின்படி ஒப்புக் கொள்ளாதவர்கள் பலர் இருக்கிறார்கள். இன்று ஏசுநாதரே இங்கே என்று நம்மிடையில் வந்து தோன்றினால் இவர்களை அவர் ஒப்புக் கொள்வார். உங்களையும் என்னையும் ஒப்புக் கொள்ளாமலும் இருப்பார். மனத்தை விசாலப் படுத்திக் கொண்டு அடக்கத்துடன் உங்கள் கடமை இன்னதென்று யோசித்துச் செய்யுங்கள்.

டார்ஜிலிங்கில் ஒரு மிஷன் பள்ளிக் கூடத்தில் ஒரு நிகழ்ச்சியைச் சொன்னேன். அது இப்போது என் நினைவுக்கு வருகிறது. சில கிறிஸ்து மதப் பிரசாரகர்கள் ஸாலிஸ்பரி பிரபுவிடம் சென்றார்கள். 'நாங்கள் சீன தேசத்தில் வேலை செய்ய வேண்டும், எங்களுக்குக் காப்பு வேண்டும்' என்று கேட்டார்கள். அதற்கு ஸாலிஸ்பரி பிரபு பதில் சொன்னார்: "கனவான்களே! நீங்கள் சீனாவுக்குச் சென்று ஏசுநாதருடைய உபதேசத்தைப் பிரசாரம் செய்ய விரும்பினீர்களானால் நீங்கள் அரசாங்கத்தின் உதவியைத் தேடாதீர்கள். ஆபத்துகளுக்குத் தயாராக நீங்கள் செல்ல வேண்டும். உங்கள் உயிரையும் இழந்து விடத் தயாராக இருக்க வேண்டும். சீன தேசத்தார் உங்களைக் கொன்று விட்டால் ஆண்டவன் பணியில் உயிரை இழந்ததாக நீங்கள் எண்ண வேண்டும்.' இவ்வாறு அவர் சொன்னதாக எனக்கு ஞாபகம். இந்தியாவில் வேலை செய்யும் கிறிஸ்தவப் பாதிரிமார் சர்க்காருடைய உதவியோடு வேலை செய்கிறார்கள். அந்த உதவி உதவியல்ல. தடையே யாகும். பிரசாரம் பயனடையாமல் செய்கிறது. பெற்றோரை இழந்த அனேக குழந்தைகளைக் கிறிஸ்தவ பாதிரிமார்கள் எடுத்துக் காப்பாற்றி வளர்த்திருக்கிறார்கள். இந்தச் சேவையைப் பற்றிச் சந்தேகமில்லை. நானும் அந்த விஷயத்தை மறுக்கவில்லை. ஆனால் பாதிரிமார்களுடைய கடமை இதுவா என்பது என்னுடைய சந்தேகம். திக்கற்ற குழந்தைகளை வளர்ப்பதை விட உங்களுக்குப் பெரும் கடமை இருந்து வருகிறது. பாதிரிமார்களுக்கு நான் நண்பன். விரோதியல்ல. வெள்ளைக்காரர்களுக்கும் நான் உண்மையான நண்பன். அந்த உரிமையைப் பாராட்டி என் உள்ளத்தில் கண்டதை உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்திய மக்களுடன் நீங்கள் ஒன்றுபட்டுச் சேரவில்லை. அதற்கு உங்கள் மனம் இசையவில்லை. அதற்கு வேண்டிய அடக்கத்தை உங்களிடம் நான் காணவில்லை. அவர்களிடமுள்ள நற்குணங்களைக் கண்டு அதன் பயனை நீங்களும் அடைய வேண்டும். அதை நான் காணவில்லை. மறைக்காமல், ஒளிக்காமல் பேசினேன். உங்கள் உள்ளத்தில் என்னுடைய கருத்துக்கள் இடம் பெறுவதாக.

[யங் இந்தியா 6-8-25]

உத்தரவு யாருக்கு?




வஸந்தத்தின்
புத்துணர்ச்சி
உங்களுக்கு
இன்றும்....என்றும்!
காஷ்மீர்பொக்கே டால்கம் பௌடர் சுத்த மனோரம்மியமே! மிக்க மிருதுவாக உங்கள் உடலில் வஸந்தநாள் காலையின் புத்துணர்ச்சியை அள்ளித் தெளிக்கிறது- உடலை ரம்மியமணத்துடனும் குளிர்ச்சியுடனும் மணிக்கணக்காக வைத்திருக்கிறது. அதிகப்படி ஈரத்தை உறிஞ்சுகிறது ... அரிப்பையும் எரிச்சலையும் தவிர்க்கிறது ... உங்கள் வசீகரத்தையும் மென்மையையும் பன்மடங் காக்குகிறது.
Cashmere Bouquet
TALCUM POWDER
காஷ்மீர்
பொக்கே
டால்கம் பௌடர்
ஆண்கள் விரும்பும் நறுமணத்துடன்
ஒரு கால்கேட்—பாமாலிவ் தயாரிப்பு
கால்கேட் 1806 முதல் தரத்துக்குப் பெயர் போனது

கடல் கண்ட கனவு

சோமு

ஏழாம் அத்தியாயம்

எதிர்க் கட்சி

நந்திவர்ம பல்லவன் பட்டத்துக்கு வந்தபோது அவனுக்கு எதிராகச் சித்திரமாயன் என்ற வாலிபன் தானேதான் பட்டத்துக்கு உரியவன் என்று கிளர்ச்சி செய்ததும், அந்தக் கிளர்ச்சிக்கு மாறாகவே உதயசந்திரன் என்ற ராஜதந்திரி நந்திவர்மனைப் பல்லவ சிம்மாசனத்தில் ஏற்றினார் என்பதும் நமக்குத் தெரியும். இப்பொழுது மாமல்லபுரம் விடுதித் தலைவனான வீர விக்கிரமன் என்ற சதிகாரன் சித்திரமாயனுக்குப் பக்கபலமாகச் சேர்ந்த பிறகோ என்றால், சித்திரமாயனுடைய கட்சி மிகவும் வலிமையடைய ஆரம்பித்தது. எத்தனையோ சாமர்த்தியத்தோடும், தீர்க்கமான ஆலோசனையோடும், உதயசந்திரன் பல்லவ அரசைக் காப்பாற்ற முனைந்து நின்றபோதிலும், அவருடைய முயற்சி ஒவ்வொன்றுக்கும் பலமான எதிர்ப்பும் போட்டியும் வலிமையடைய ஆரம்பித்தன. விடுதித் தலைவன் வீரவிக்கிரமனுடைய நடமாட்டங்களையும், அவனுடைய இரகசிய சதியாலோசனைகளையும் கவனமாக ஆராய்வதிலும், அவனுடைய நடவடிக்கைகளைத் தெரிந்து உடனுக்குடன் எதிர் நடவடிக்கைகள் எடுப்பதிலும், உதயசந்திரன் தம்முடைய திறமை முழுவதையும் செலவிட வேண்டியிருந்தது.

கொடும்பாளூர்க் கானகத்தில் நடந்த வீரவிக்கிரமனின் இரகசியக் கூட்டத்தை உளவறிந்து கண்டு, மிகுந்த முன்னேற்பாட்டுடன் உதயசந்திரன் தாமே குதிரைப் படையோடு சென்று அந்தக் கூட்டத்தை முறியடித்தபோது, முதலில் மகிழ்ச்சி அடைந்தார். வல்லத்தரசரை அந்தச் சதிகாரர்களுடைய பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு வந்ததில் இவருக்கு உண்மையிலேயே ஆனந்தம் உண்டாயிற்று. பிறகு தஞ்சையிலே கூடிய ஆலோசனைக் கூட்டத்தில் வல்லத்தரசரும் அவருடைய தாயாதியான முத்தரையரும், நந்தி வர்மனுக்கு உதவியாகப் படை பலம் திரட்டுவதற்கும் வலம் புரித் தீவிலே இரகசியப் பயிற்சி நடத்துவதற்கும் சம்மதித்து. இதற்கு வேண்டிய யோச






ளைகளைச் சொன்னதும் உதயசந்திரனுடைய மகிழ்ச்சி பன்மடங்கு பெருகிற்று. வலம்புரி அரச குமாரனை சித்திராங்க பூபதிக்கு முத்தரையர்களின் அரச குமாரியை மணம் முடிப்பதாக முத்தரைய மன்னரே யோசனை சொன்னதும், உதயசந்திரன் தம்முடைய திட்டம் அனைத்தும் மகத்தான அளவில் வெற்றியடைந்து விட்டதாக மனங்களித்தார். ஆனால் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் அவருடைய உள்ளத்தை வேதனைப் படுத்தின!

உதயசந்திரனுக்கு உடந்தையாக முத்தரையர்கள் வலம்புரித் தீவுக்குத் தூது அனுப்பியிருக்கிறார்கள் என்ற செய்தியை எப்படியோ அறிந்து கொண்டு, வீர விக்கிரமன் செய்த வேலைகள் உதயசந்திரனையே மனங் கலங்கச் செய்து விட்டன! சித்திரமாயனை மதுரைக்கு அனுப்பிப் பாண்டிய மன்னர்களின் ஒத்தாசையைச் சம்பாதித்து விட்டான் அல்லவா? இந்தச் செய்தியை அறிந்ததும் உதய சந்திரன் இரவு முழுதும் உறங்கவில்லை. திட்டத்துக்கு மேல் திட்டமாக யோசனை செய்தார். அந்த யோசனைகளின் பயனாக ஓர் ஆழ்ந்த முடிவுக்கு வரப்போகிற தருணத்தில், இடி விழுந்தது போல் மற்றொரு செய்தி அவருக்கு எட்டியது. வீர விக்கிரமன் கொடும்பாளூர் வேளிர்களைத் தன் கட்சிக்கு வளைத்து விட்டான் என்றும், மீனக்கொடி தாங்கிய மரக்கலங்கள் வலம்புரித் தீவை நோக்கிக் கடல் மார்க்கமாகச் சென்றிருக்கின்றன என்றும் உதயசந்திரன் அறிந்தார். அப்பொழுது அவருடைய திடமான உள்ளமுங் கூடக் கொஞ்சம் ஆடியது.

நந்தி வர்மனுக்குத் துணையாகத் தன்னுடன் இனி யாரெல்லாம் ஒன்று கூடியிருக்கிறார்கள் என்பதை யோசித்துப் பார்த்தார் உதய சந்திரன்! முத்தரையர்களும் வல்லத்தரசரும் துணை செய்கிறார்கள். அவர்களிடமும் அவர்களைச் சார்ந்த தெற்கு மண்டலத்துத் தலைவர்களிடமும் உள்ள படை பலம் நந்திவர்மனுக்காகப் போர் செய்ய முன்வரும். சந்தேகமில்லை. ஆனால் சித்திரமாயன் கட்சியிலோ? அந்தப் பொல்லாத வீர விக்கிரமனுக்குத் துணையாக மதுரைப் பாண்டியர்கள் ஒன்று சேர்ந்து விட்டார்களே! இப்பொழுது அத்தோடு நிற்கவில்லையே! கொடும்பாளூர் வேளிர் தலைவர்களும் ஒன்று சேர்ந்து விட்டால், இனி என்ன ஆகும்? வேளிர் தலைவர்களுக்குத் தென்னாட்டில் நல்ல செல்வாக்கு உண்டு. இதுவரை பல்லவர்களுக்கு அடங்கிக் குறுநில மன்னர்களைப்போல ஒதுங்கி வாழ்ந்து வருகிற சோழர்களையுங்கூட வேளிர்கள் தங்களுக்குத் துணையாகச் சேர்த்துக்கொண்டு விடக்கூடும். அப்படி நேர்ந்து விட்டால் எதிர்க் கட்சியின் பலம் சமாளிக்க முடியாத அளவுக்கு வலிமை பெற்று விடுமே! இப்படி நினைத்ததும் உதயசந்திரனுக்கு ஒன்றும் ஓடவில்லை. உண்மையில் வேளிர்களின் மனமாற்றம் அவருக்குக் கவலையைத் தந்ததோடு அளவு கடந்த வியப்பையும் ஊட்டியது.

ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய வீரத் தமிழ் நாட்டிலே வேளிர்களின் படைபலம் அத்தனை மகோன்னதமான நிலையில் இருந்தது. தமிழ் நாட்டின் சரித்திரக் கல்வெட்டுக்களில் விக்கிரமகேசரி என்ற வேளிர் மன்னனைப் பற்றியும், அவனுடைய முன்னோர்களான பரதுர்க்கமர்த்தனன், பராக்கிரம மர்த்தனன் முதலிய வேளிர் தலைவர்களைப் பற்றியும் படிக்கும்போது, யுத்த முறைகள் மிகவும் விரிவடைந்துள்ள இந்த இருபதாவது நூற்றாண்டிலுங்கூட அவர்களுடைய வீரமும் படை பலமும் நம்மை வியப்புக்



கடலிலே ஆழ்த்தும்படியாக இருக்கின்றன. வாதாபி வென்ற பரமேசுவர வர்மனுக்குப் படைத் தலைவனாகச் சென்ற வேளிர் தலைவனைப் பற்றி ஆராய்ச்சி நிபுணர்கள் அதிசயத்தோடு பேசுகிறார்கள். விக்கிரம கேசரி என்ற வேளிர் தலைவனின் யுத்தங்களைப் பற்றி, மூவர் கோயில் என்ற இடத்தில் காணப்படும் சாசனத்திலே இன்றும் ஆச்சரியகரமான சரித்திரச் செய்திகளைக் காணுகிறோம். இப்படிப்பட்ட வீர பரம்பரை தனக்கு எதிராக நின்றது என்றால், உதயசந்திரன் அத்தனை தூரம் மனம் கலங்கி விட்டதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

உதயசந்திரன் மனம் கலங்கியதோடு அத்தனை தூரம் வியப்பு அடைய வேண்டிய அவசியமும் அதில் என்ன இருந்தது என்று நாம் நினைக்கக் கூடும். உண்மையில் உதயசந்திரன் முதலில் நம்பவே முடியாத அளவுக்கு அத்தனை தூரம் ஆச்சரியப்படும்படியாக ஒரு முக்கிய காரணம் இருந்தது. நந்திவர்ம பல்லவன் பட்டத்துக்கு வருகிறவரை வேளிர்கள் என்றால் அவர்கள் பல்லவர்களின் துணைவர்கள்

தூரம் மனம் கலங்கி விட்டதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

உதயசந்திரன் மனம் கலங்கியதோடு அத்தனை தூரம் வியப்பு அடைய வேண்டிய அவசியமும் அதில் என்ன இருந்தது என்று நாம் நினைக்கக் கூடும். உண்மையில் உதயசந்திரன் முதலில் நம்பவே முடியாத அளவுக்கு அத்தனை தூரம் ஆச்சரியப்படும்படியாக ஒரு முக்கிய காரணம் இருந்தது. நந்திவர்ம பல்லவன் பட்டத்துக்கு வருகிறவரை வேளிர்கள் என்றால் அவர்கள் பல்லவர்களின் துணைவர்கள்

என்று பிரசித்தி பெற்றவர்கள். பரதுர்க்கமர்த்தனன் என்ற வேளிர் தலைவன் பல்லவர்களின் படைத் தலைவனாகவே விளங்கியவன். அவனுடைய முன்னோர்கள் அனைவரும் பல்லவர்களுக்காக எத்தனையோ பல தியாகங்கள் செய்தவர்கள். அப்படிப்பட்ட வேளிர்கள் இப்பொழுது சித்திரமாயனுக்குத் துணை செய்ய எப்படி ஒப்புக் கொண்டார்கள்? பூர்வமான பல்லவ அரசாட்சிக்கு நந்திவர்மனை விடச் சித்திரமாயன்தான் நெருங்கிய உரிமை கொண்டவன் என்று நினைத்தார்களா? அல்லது விடுதித் தலைவன் அவர்களிடமும் ஏதாவது சூழ்ச்சி செய்து அவர்களை ஏமாற்றி விட்டானா?

இப்படியெல்லாம் எண்ணிப் பார்த்தார் உதயசந்திரன். இதன் பயனாகத்தான் அவர் ஆதிரையனைப் பற்றியும் அவனுடைய நடமாட்டங்களைப் பற்றியும் சிந்திக்கலானார். இந்தச் சிந்தனையின் பயனாகத்தான் உதயசந்திரனுக்குப் பல உபயோகமான விவரங்கள் தெரிய வந்தன. உண்மையில் சித்திராங்க

பூபதி குங்கும மாளிகையிலிருந்து வெளியேறிய சம்பவத்துக்கும் உதயசந்திரனின் சிந்தனைகளுக்கும் எத்தனை நெருங்கிய சம்பந்தம் இருந்தது என்பது பூபதிக்கே நெடுநாள் வரை தெரியாமல் இருந்தது. அவனுடைய ஓட்ட சாட்டங்கள், குங்கும மாளிகையிலிருந்து அவன் கிளம்பிய பிறகு நேர்ந்த சம்பவங்கள் எல்லாம் ஒரு வகையாகத் தெளிவடைய ஆரம்பித்த பிறகுதான், பூபதி அந்த அதிசயமான விவரத்தைத் தெரிந்து கொண்டான். அதுவரை அவனுமே உதயசந்திரனைத் தனக்குச் சம்பந்தம் இல்லாத ஒரு அன்னிய மனிதர் என்றுதான் நினைத்திருந்தான்! உண்மையில் அவன் குங்கும மாளிகையிலிருந்து புறப்பட்டபோது, யாழ் நங்கையின் யோசனைப்படி அங்கிருந்து வெளியேறுகிறோம் என்ற ஒரு திருப்திமட்டுமேதான் அவனுக்கு இருந்தது. மற்றப்படி தமிழ் நாட்டின் அன்றைய அரசியல் நிலைமைக்கும் அவன் குங்கும மாளிகையிலிருந்து புறப்பட்டுச் செல்வதற்கும் அத்தனை நெருங்கிய சம்பந்தம் இருப்பதாகப் பூபதி கற்பனை

னுமே உதயசந்திரனைத் தனக்குச் சம்பந்தம் இல்லாத ஒரு அன்னிய மனிதர் என்றுதான் நினைத்திருந்தான்! உண்மையில் அவன் குங்கும மாளிகையிலிருந்து புறப்பட்டபோது, யாழ் நங்கையின் யோசனைப்படி அங்கிருந்து வெளியேறுகிறோம் என்ற ஒரு திருப்திமட்டுமேதான் அவனுக்கு இருந்தது. மற்றப்படி தமிழ் நாட்டின் அன்றைய அரசியல் நிலைமைக்கும் அவன் குங்கும மாளிகையிலிருந்து புறப்பட்டுச் செல்வதற்கும் அத்தனை நெருங்கிய சம்பந்தம் இருப்பதாகப் பூபதி கற்பனை

செய்துகூடப் பார்க்கவில்லை!

எட்டாம் அத்தியாயம்

குகை ஓவியங்கள்

சாத்தன் என்ற பணியாளன் சொன்ன சமிக்ஞை அடையாளத்துக்கு ஏற்ப, பூபதி சிறிய அறையிலே நுழைந்ததும் சாத்தன் வெளியேயிருந்து கதவை அடைத்துக் கொண்டான் அல்லவா? இப்பொழுது பூபதி அந்தத் துணி மூட்டையை உலைத்துப் பார்த்தான். அந்த மூட்டைக்குள் ஒரு துறவியின் காவி உடையும், கமண்டலமும், ஒட்டுமீசை, தாடி முதலிய வேடப் பொருள்களும் இருந்தன. இத்தனையோடு ஒரு சிறு ஓலைச் சுருளும் இருந்தது. அந்தச் சுருளில் பூபதி இனி என்ன செய்ய வேண்டும் என்பதற்கு வேண்டிய குறிப்புக்களும் இருந்தன.

ஓலைச் சுருளில் கண்ட குறிப்புக்களைப் படித்ததும் பூபதியின் முகத்தில் மின்னல்கள் துவண்டன. ஏதேதோ மனப் போராட்டங்



களின் குறிகள் முகத்திலே பளிச்சிட்டன. ஆனால் அதிகநேரம் அவன் தன்னுடைய மனத்தோடு போராடிக்கொண்டிருக்க முடியவில்லை. காரணம், சற்று நேரத்தில் அறையின் கதவுகளைத் திறந்துகொண்டு சாத்தன் உள்ளே வந்து பூபதியை அவசரப்படுத்தினான். சம்பவங்கள் துரிதமாக ஓட ஆரம்பித்தன.

ஆமாம்; அன்றிரவு பூபதி குங்கும மாளிகையில் இல்லை. பல்லவ ராஜ்யத்தின் தெற்கு எல்லைக்கும், பாண்டி நாட்டின் வடக்கு எல்லைக்கும் மத்தியிலே யிருந்த முத்தரையர் நாட்டிலே, நடுநாயகமாக நின்ற ஒரு பெரிய மலையை நோக்கிச் செல்லும் காட்டுப் பாதையிலே சென்று கொண்டிருந்தான் பூபதி. கால் நடையாக இல்லை. சிவிகையிலே சென்று கொண்டிருந்தான். 'நர வாகனம்' என்று சித்தர் குறிப்பிட்டார் அல்லவா? அந்த நர வாகனத்திலே சென்று கொண்டிருந்தான். வலம்புரித் தீவின் இளவரசக் கோலத்திலே இல்லை! இந்த உலகத்தையே துறந்தவனைப் போல ஒரு துறவியின்வேடத்திலே சிவிகையில் சென்றுகொண்டிருந்தான் சித்திராங்க பூபதி.

என்ன மாறுதல்! எத்தனை எதிர்பாராத சம்பவங்கள்! பேரியாழோடு வலம்புரித் தீவுக்கு வெற்றி வீரனாகத் திரும்பிச் செல்ல வேண்டிய இளவரசன் துறவியின் கோலத்திலே காட்டுப் பாதையிலே சென்றான்.

'சித்தன்ன வாசல்' என்றும் 'சித்தன் வாழ் மலை' என்றும் 'சிற்றண்ண வாசல்' என்றும் பல பெயர்களில் அழைக்கப்படும் குகைக் கோவிலிலே, நாலைந்து சமணத் துறவிகள் சிவிகையின் வரவுக்காகக் காத்திருந்தார்கள் என்று தோன்றியது. ஏனென்றால் அந்தச் சிவிகையானது குகைவாசலை நெருங்கும்போது இரண்டு துறவிகள் எதிர் வந்து அழைத்துச் சென்றார்கள். சித்திராங்க பூபதிக்கு இது அதிசயமாகப் படவில்லை. ஓலைக் குறிப்புக்களில் எல்லா விவரங்களும் இருந்தன. எனவே பதறாமல் சித்திராங்க பூபதி மேற்கொண்டு தான் செய்ய வேண்டிய காரியங்களில் மனத்தைச் செலுத்தினான்.

மறுநாள் பொழுது விடிந்ததும் அந்தக் குகைக் கோவிலிலே யிருந்த சமணத் துறவி ஒருவர் பூபதியை மலையிலிருந்த ஒரு சுனைக்கு அழைத்துச் சென்றார். குளிப்பதற்கு மிகவும் வசதியான இடம் என்றும், தினந்தோறும் மாலை நேரங்களில் இரகசியமாக நடமாடுவதற்கு ஏற்ற இடம் என்றும் துறவி சொன்னார். சுனையில் குளிக்கும் போதே பூபதி அந்தத் துறவியிடம் சொன்னான்: ''பெரியவரே! என்ன காரணத்துக்காக இந்தத் துறவுக் கோலத்தில் நான் இருக்க வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் யூகிக்கிறேன். கொடும்பாளூரிலிருந்து நான் தப்பி வந்து விட்டதனால், என்னைத் தேடிக்கொண்டு பல மனிதர்கள் இங்கு வரக் கூடும். அதனால் தலைமறைவாக இருப்பதற்காக இப்படி ஒரு புனித வேடத்தை எனக்குத் தந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனாலும் ஒரு தெய்விகமான கோலத்தை இப்படி ஒரு சாதாரணமான ஏமாற்றுக் காரியத்துக்கு உபயோகப்படுத்துவது என் மனச்சாட்சிக்கே பிடிக்கவில்லை. என்றாலும் நானாகத் தீர்மானித்துச் செய்த காரியம் இல்லை.''

இப்படிச் சொன்னான் பூபதி. இதைக் கேட்டதும் துறவி சிரித்தார்.

''என்ன சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டான் சித்திராங்க பூபதி. துறவி பதில் பேசவில்லை. திடீரென்று பூபதிக்கு ஒரு சந்தேகம் உதித்தது. கேட்டான்: ''ஐயா நீங்களும் என்னைப் போலத்தானோ? உங்களுடைய கோலமும் ஒருவேளை வெறும் வேடந்தானோ? நீங்களும் மாறு வேடத்திலே. . . .''

இப்படிக் கேட்கும்போதே பூபதிக்கு மனம் துணுக்குற்றது. படபடப்பில் ஆசாரக் குறைவாகக் கேட்டு விட்டோமோ என்று எண்ணியவனாகக் கேள்வியை முழுதும் கேட்டு முடிக்காமல், வார்த்தைகளைப் பாதியிலேயே தடுத்துக் கொண்டான். துறவி சிரித்துக்கொண்டே சொன்னார்: ''ஐயா இளவரசரே! நீங்கள் என்ன சந்தேகம் வேண்டுமானாலும் கேளுங்கள். ஆனால் ஒன்று மட்டும் கேளாதீர்கள். நாங்கள் யார்? எதற்காக இந்தக் குகையிலே இருக்கிறோம் என்று மட்டும் சந்தேகப்படாதீர்கள். உங்களை இங்கு அனுப்பி வைப்பதற்குக் காரண புருஷராக இருந்தவர் இங்கே வரும்போது எல்லா விஷயங்களும் உங்களுக்குத் தெளிவாகும்!''

துறவி இப்படிச் சொன்னதும் பூபதிக்குத் திகைப்பு இன்னும் அதிகரித்தது. கேட்டான்:

''என்னை இங்கே அனுப்பியதற்குக் காரண புருஷர் என்று சொன்னீர்கள்? என்னை இங்கே அனுப்பிய புருஷரா?''

பூபதிக்கு அதற்குமேல் துறவியிடம் பேசக் கூடப் பயமாக இருந்தது. இதைப் புரிந்து கொண்ட துறவி சொன்னார்:

''நீங்கள் செல்ல வேண்டிய அரண்மனைக்குச் செல்லும் வரையில் உங்களை இங்கே கவனமாகப் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டியது எங்கள் பொறுப்பு. ஏதோ விபத்துக்குள் சிக்கி விட்டதாகச் சந்தேகப் படாதீர்கள். உங்களை இங்கே அனுப்பிய புண்ணிய புருஷரைவிட உங்களுடைய எதிர் காலத்தில் அக்கறை கொண்ட மனிதர்கள் இந்தத் தமிழ் நாட்டில் வேறு யாருமில்லை! ஆகையினால் கவலைப் படாதீர்கள். ஸ்நானத்தை முடித்துக் கொண்டு புறப்படுங்கள்!''

அன்று காலைப் பேச்சு அத்துடன் முடிந்தது. மாலையில் மீண்டும் சுனைக்கரைக்குப் போவதற்கு முன்னால், குகைக் கோவிலிலே இருந்த துறவிகள் பூபதிக்கு அங்குள்ள பலவர்ண ஓவியங்களைக் காட்டினார்கள். அல்லிக் குளமும், அந்தக்குளத்திலே இறங்கி நிற்கும் யானைகளும் தாமரை தாங்கிய கைகளும், தாமரையா, கையா, என்று சொல்ல முடியாத வர்ணக் கொடிகளும், துறவிகளின் சாந்தமான முகத் தோற்றங்களும், பறவைகளும் பூபதியை ஒரே வியப்பில் ஆழ்த்தின.

''இளவரசரே! உங்களையும் என்னையும் போன்று இந்தக் குகையிலே இருந்த மனிதர்கள்தான் இப்படிப்பட்ட அற்புத ஓவியங்களை வரைந்திருக்கிறார்கள். பார்த்தீர்களா?''

காலையில் சுனைக்கு அழைத்துப்போன அதே துறவி மேற்கண்டவாறு பேசினார். பூபதி சொன்னான்: ''உண்மை; ஆனால் அவர்கள் எல்லாரும் என்னைப் போலக் காரியார்த்தமாக



அரசியின் முடிசூட்டல் ஒரே தடவைதான் !



ஆனல்...

ஓ, அழகியே, நீ ஒவ்வொரு நாளும் உனது நீண்ட, பளபளப்பான கூந்தலைக் கொண்டு விதவிதமாக முடியலங்கரித்துக்கொள்ளும் ரகசியமென்ன ! அபூர்வ மூலிகைகளையும் சிறந்த மூலப் பொருள்களையும் கொண்டு இனிய நறுமணமும் சேர்த்துத் தயாரிக்கப்படும் ஆயுர்வேத கூந்தல் டானிக்காகிய ஸ்ரீவிஸ் அம்லா கூந்தல் தைலம் அழகிய மாதரால் பெரிதும் விரும்பப் படுவதாகும்.

ஸ்ரீவிஸ் - அம்லா

கூந்தல் தைலம்



- கேசவளர்ச்சிக்கு உதவும்
- கேசம் உதிர்வதை தடுக்கும்
- பொடுகை அகற்றும்
- கேசத்தை மிருதுவாக்கி பளபளப்பூட்டும்
- குளுமையும் புத்துணர்ச்சியும் தரும்
- இனிய நறுமணமுள்ளது

தயாரிப்பாளர்,

ஸ்ரீவிஸ் பர்ப்யூமரி ஒர்க்ஸ், சென்னை - 1.

Parry's

பாரி கம்பெனியார்
மோதிரம் போன்ற மிட்டாய்களை
இப்பொழுது வழங்குகிறார்கள்



ருசியுள்ள மூன்று விதங்கள் !



குழந்தைகள் அனைவரும் விரும்பும் மிட்டாய்கள். சுத்தம் மற்றும் புஷ்டி சத்து கெடாமலிருக்கும்படி இவைகள் பாக் செய்யப்பட்டிருப்பது தாய்மார்களுக்குத் தெரிந்த விஷயமே.

PRS. 3677

இந்தக் குகையிலே தங்கியவர்கள் இல்லை. தங்கள் வாழ்வையே இந்தக் குகைக்குள் அர்ப்பணம் செய்த புண்ணிய புருஷர்கள் அவர்கள்!'' பூபதி குகையின் அதியற்புதமான சித்திரங்களைப் பார்த்ததும் ஏற்பட்டிருந்த பேரானந்த நிலையிலே, இப்படிப் பேசினான்.

''அவர்களைக் கலைஞர்கள் என்று மட்டும் சொல்லி நிறுத்தி விடாதீர்கள். அவர்களைப் போன்ற தீர்க்கதரிசிகள் வேறு எந்த நாட்டிலும் இருக்க முடியாது. இருந்ததில்லை. இருக்கப் போவதும் இல்லை. உங்களுடைய வலம்புரித் தீவிலுங்கூட இல்லை என்று சொல்லுவேன்!'' இரண்டாவது துறவி இப்படிச் சொன்னதும் முதலாவது துறவி அவர் பேச்சை இடைமறித்தார்.

''வலம்புரித் தீவை மட்டும் குறிப்பிடாதீர்கள். அந்தத் தீவிலே இருந்தவர்கள் வேறு. இங்கே யிருந்தவர்கள் வேறு என்று பிரித்துச் சொல்லாதீர்கள். அது தவறு. இங்கிருந்தவர்களும் வலம்புரித் தீவிலேயிருந்தவர்களும் எல்லாரும் ஒரே குலம். ஒரே இனம். ஒரே மதம் என்றுகூடச் சொல்லுவேன். ஆமாம், அவர்களுடைய குலம் தமிழ்க் குலம். தமிழ் என்பது வெறும் சொல் மட்டும் இல்லை. தமிழ் என்பது ஒரு மதம். தமிழ் என்பது ஒரு ஜீவன். தமிழ் என்பது ஒரு வாழ்க்கை முறை. முத்தமிழ் என்றால் இயல், இசை, நாடகம் என்று அறிஞர்கள் சொல்கிறார்கள். முத்தமிழ் என்றால் பாண்டியர், சேரர், சோழர் மூவரும் வளர்த்த தமிழ் என்று சொல்கிறார்கள். நான் சொல்கிறேன், முத்தமிழ் என்றால் உடல், பொருள், ஆவி!''

இப்படி வீராவேசத்தோடு ஒரு சொற்பொழிவே செய்து முடித்தார் துறவி. அப்போது பூபதி கேட்டான்:

''ஐயா! நீங்கள் சொல்வதெல்லாம் சரி. ஒன்று மட்டும் கேட்கிறேன். மழுப்பாமல் பதில் சொல்வீர்களா?''

பூபதியின் இந்தக் கேள்விக்கு முதலாவது துறவி சிரித்துக் கொண்டே பதில் சொன்னார். ''கேளுங்கள். நிச்சயம் பதில்சொல்கிறேன்!''

''ஐயா! வலம்புரித் தீவு என்று சொல்லி என்னுடைய நினைவுகளை யெல்லாம் கிளறி விட்டு விட்டீர்கள். அதனால் இப்பொழுது அதைப் பற்றிக் கேட்கிறேன். மன்னிக்க வேண்டும். இத்தனை தூரம் வலம்புரித் தீவின் பெருமையை நிலைநாட்டிப் பேசினீர்களே. அந்தத் தீவிலே உள்ள மகத்தான அதிசயங்கள் எல்லாம் உங்களுக்குத் தெரியுமா? அங்கேயுள்ள குகைகளையும் சிற்ப அதிசயங்களையும் நேரிலே பார்த்திருப்பது போலச் சொல்கிறீர்களே! அவற்றையெல்லாம் மெய்யாகவே நீங்கள் சென்று பார்த்திருக்கிறீர்களா? இரவு நேரங்களில் வலம்புரித் தீவின் காவல் தெய்வம் கண்ணீர் வடிப்பதையும், அலைகள் குகையிலே தவழ்ந்து சென்று இசை யெழுப்புவதையும் நீங்கள் அறிவீர்களா? தயவு செய்து சொல்லுங்கள்!'' என்று கேட்டான் பூபதி.

இந்த வார்த்தைகள் வந்ததும், முதலாவது துறவி பதில் சொல்வதற்கு முன்னால் இரண்டாவது துறவி குறுக்கிட்டார்.

''என்ன இளவரசரே! என்ன சொன்னீர்கள்? அலைகள் குகையிலே சென்று இசை எழுப்புகின்றனவா! இதென்ன பெரிய அண்டபகிரண்ட மனப் பிரமையாக இருக்கிறதே! என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?''

துறவி இப்படிக் கேட்டதும் பூபதிக்கு ஆவேசம் வந்து விட்டது. சொன்னான்:

''ஆமாம். எங்கள் வலம்புரித் தீவிலே கடல் அலைகள் நிலவுக் குகைக்குள்ளே சென்று மீளும்போது இசை எழும்பும் ஐயா! அது மட்டுமில்லை. வலம்புரி அம்மனுடைய கோவிலுக்கு முன்னால் உள்ள படிக்கட்டில் அலைகள் ஏறிச் சொல்லும் போதும், பிறகு இறங்கி வரும்போதும், சப்த ஸ்வரங்களும் ஆரோகணமாகவும் அவரோகணமாகவும் கேட்கும்! நான் ஏதோ பொய் பேசுவது போலக் குறுக்குக் கேள்வி போடுகிறீர்களே!''

பூபதி இப்படிப் பேசியதும், சாமர்த்திய சாலியாகக் காணப்பட்ட முதலாவது துறவி பூபதியின் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு பேச ஆரம்பித்தார்:

''இளவரசரே! ஆத்திரப்படாதீர்கள். நம்முடைய நண்பரான இந்தத் துறவிக்கும் இசையிலே தீவிரமான ஈடுபாடு உண்டு. சொல்லப் போனால் அவரை ஒரு சங்கீத மகா பண்டிதர் என்றுகூடச் சொல்ல வேண்டும். ஆனாலும் வலம்புரித் தீவிலே சென்று அந்தச் சிற்ப அதிசயத்தைப் பார்க்காத மனிதர்களுக்கு, அவர்கள் எத்தனை பெரிய இசைப் பண்டிதர்களாக இருந்தாலும், நம்ப முடியாதுதான். ஏதோ வெறும் கற்பனை என்றுதான் நினைப்பார்கள்! இங்கே இந்த வட்டத்தின் எல்லையிலே உள்ள இன்னொரு மலைக் கோவில் இருக்கிறது. வாத்திய வித்தியாதரப் பேரரசன் காலத்தில் ஆச்சரியப்படும்படியான பல அற்புதங்களை அந்தக் கோவிலின் சிற்பங்களிலே ஆக்கியிருக்கிறார்கள். கல்லிலிருந்து இசை கேட்கும் அற்புதத்தை வேறு யாராவது அன்னியர்களிடம் போய்ச் சொன்னால் பைத்தியக்காரத்தனம் என்று பரிகசிப்பார்கள். நேருக்கு நேரே பார்க்கும் வரையில் அப்படித்தான் நினைப்பார்கள். கல்வெட்டுக்கள் என்ற சான்றுகள் இல்லையென்றால், ராஜசிம்ம பல்லவனுடைய சங்கீத அற்புதங்களைக் கூட வெறும் கற்பனை என்றுதான் சொல்லிவிடுவார்கள். இன்றைய நிலைமையே இப்படி இருக்கிறதே! இன்னும் ஆயிரம் ஆண்டுகள் கழித்துத் தமிழ் நாட்டில் இந்தக் கோவில்களும், இந்தக் கல்வெட்டுக்களும் இப்படியே இருக்கப் போகின்றனவா! இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் காலகதியை எப்படிச் சொல்லுவது? ஆயிரம் ஆண்டுகளில் இவற்றில் எத்தனையோ அழியத்தான் போகின்றன. அப்பொழுது இந்த ஆராய்ச்சியையே வெறும் அசம்பாவிதமான கற்பனை என்று கூடச் சொல்லி விடுவார்கள்! அதற்காகத்தான் சொல்கிறேன், நம்முடைய தமிழ் மொழியில் இந்த விஷயங்களை யெல்லாம் நிரந்தரமான முறையிலே அழியாத இலக்கியங்களாக எழுதி முடித்து விட வேண்டும். எல்லாம் நம்முடைய யுத்தக் குழப்பங்கள் ஓய்ந்து நமது தலைவரும் நிம்மதியாக அமரட்டும்!''

இப்படிச் சொன்னார் முதலாவது துறவி. இரண்டாவது துறவி பதில் பேசவில்லை. சற்று மௌனமாக இருந்து விட்டுக் கேட்பார்:


வர்ணம்

''இலக்கியங்களுடைய ஆயுள் மட்டும் என்ன? சிரஞ்சீவியா? ஓலைச்சுவடிகளுக்கு அழிவே கிடையாதா?''

இந்த இடத்தில் பூபதி பேசினன்: ''அப்படிச் சொல்லாதீர்கள். கல்லைவிடச் சொல்லுக்கு ஆயுள் அதிகந்தான். மக்களுடைய நாவிலே மொழி யுள்ளவரை அந்த மொழியிலேயுள்ள கலைகளுக்கு அழிவேது! வலம்புரித் தீவிலே இடிந்து போய்க்கிடக்கிற கோவிலைப் போல் இல்லை. அங்கிருந்து மறைந்து விட்ட பேரியாழைப்போல இல்லை அது!''

பேரியாழ் என்ற சொல் வந்ததும், துறவிகள் அனைவரும் நிமிர்ந்து நின்றார்கள். ஏதோ ஒரு இரகசிய மந்திரச் சொல்லை உச்சரித்தது போன்று, 'பேரியாழ்' என்ற வார்த்தை அந்தச் சபையிலே ஒரு பெரிய மாறுதலைச் செய்தது.

''இளவரசரே! இதுவரை நீங்கள் பேசியது சரி. ஆனல் இனிமேல் அந்த ஒரு சொல்லை மட்டும் உச்சரிக்காதீர்கள். மறந்துகூடச் சொல்லாதீர்கள். கனவிலேகூட நீங்கள் உங்களையும் மறந்து அந்த வார்த்தையைச் சொல்லிவிட்டால் தொலைந்தது காரியம்! எல்லாம் கெட்டுப் போய் விடும். நம்முடைய குகைக்குச் சில சமயங்களில் யார் யாரோ யாத்திரிகர்கள் வருவார்கள். இரவு ஜாம நேரத்தில் குதிரைகளின் குளம்பொலி இந்த மலைப் பாதையிலே கேட்கும். சில இரவுகளில் ஏதேதோ காரணங்களைச் சொல்லி நம்முடைய இருப்பிடத்திலேயே யாரோ வழிப்போக்கர்களைப் போலச் சில மனிதர்கள் வந்து தங்கக் கூடும்! அப்பொழுது இந்தச் சொல்லை அயர்ந்து மறந்து நீங்கள் சொல்லி விடப் போகிறீர்கள். அதனல்தான் இத்தனை கண்டிப்பாகச் சொல்லுகிறேன்!''

''அது சரி; இப்பொழுது சொல்லி விட்டதனல் தவறு ஒன்றும் நேர்ந்துவிடவில்லையே. என்னை இத்தனை தூரம் பயப்படுத்துகிறீர்களே!'' என்றான் பூபதி.

''இளவரசே! பயப்படுத்தவில்லை. உண்மையைச் சொன்னேன், அவ்வளவுதான். உங்களுடைய உள்ளத்தில் அந்த இசைக் கருவி எத்தகைய ஸ்தானம் வகிக்கிறது என்பதும், உங்கள் வாழ்க்கையில் அது எத்தகைய பெருங் காரியங்களை விளைவித்து விட்டது என்பதும் எனக்குத் தெரியும். இன்னும் அதிகமான விபரீதங்களை அது விளைவித்துவிடக் கூடாதே என்பதற்காகத்தான் இப்பொழுதே உங்களுக்கு எச்சரிக்கை செய்தேன்!''

''ஐயா! நீங்கள் என்னவோ என்னுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக இப்படியெல்லாம் எச்சரிக்கை செய்வதாய் நினைக்கலாம். ஆனலும் இந்த உலகில் என்னையும் என் உயிரையும்விட எனக்கு முக்கியம் அந்தப் பேரியாழ்தான். அந்த யாழுக்காகவே நான் கடல் கடந்து வந்தேன். அந்த யாழுக்காகவே மாமல்லபுரத்திலிருந்து புறப்பட்டுக் கொடும்பாளூருக்குச் சென்றேன். இப்பொழுதுங்கூட அங்கிருந்து புறப்பட்டிருக்க மாட்டேன். பேரியாழ் என் கைக்குக் கிடைக்கும், அதோடுதான் நான் அங்கிருந்து புறப்படுவேன் என்று நேற்று வரை எண்ணியிருந்தேன். ஆனல் அந்த ஓலைச் சுருளில் கண்டிருந்த குறிப்புகளைப் பார்த்த பிறகுதான், யாழையும் யாழ்நங்கையையும் அந்தக் குங்கும மாளிகையிலே விட்டுவிட்டு வெளியேறினேன். இப்படியே வலம்புரித் தீவுக்கு ஓடி விடுவதற்காக அல்ல. என் அன்னையின் சந்நிதியிலே அந்த யாழைச் சேர்ப்பிக்கும் வரை, கனவிலும் நனவிலும் எப்பொழுதும் என்னுடைய ஒரே மந்திரம் பேரியாழ்தான்! அதை மறப்பது என்பது இந்தப் பூபதியினல் முடியாத காரியம்!''

''இளவரசரே! நிதானம் இழந்து பேசாதீர்கள்! உங்களையும் உங்களுடைய இலட்சியத்தையும் பெரிதும் மதிக்கிற உங்களுடைய நண்பர்களிடமா இப்படிப் பேசுவது? தயவு செய்து என்னேடு தனியாக வாருங்கள். ஒரு முக்கியமான விஷயம் உங்களிடம் சொல்ல வேண்டும். இல்லையென்றால் ஆத்திரத்தில் நீங்கள் ஏதாவது விபரீதமான செயலைச் செய்துவிடப் போகிறீர்கள்!''

இப்படிக் கூறிக் கொண்டே பூபதியின் கையைப் பிடித்துக் கொண்டு வேகமாக மலைச் சரிவிலே நடந்தார் முதல் துறவி.

பூபதியும் முதலாவது துறவியும் மலைச் சரிவிலே நடக்க ஆரம்பித்ததும், மற்றத் துறவிகள் அந்த இடத்திலேயே தங்கிவிட்டார்கள். மேலே நடக்கவில்லை. பூபதி சற்று நேரத்துக்கு முன்பு வலம்புரித் தீவைப் பற்றிச் சொன்னதும், அவனுடைய பேச்சிலே குறுக்கிட்டுப் பேசினர் அல்லவா இரண்டாவது துறவி; அவரைத்தானே சங்கீதத்தில் பெரிய பண்டிதர் என்று சொன்னர்கள்; அந்தத் துறவி அதே இடத்தில் நின்று கொண்டு இப்பொழுது பாட ஆரம்பித்தார்.

சூரியன் அஸ்தமிக்கிற சமயம். கதிரவனின் ஒளி மறைந்து வானத்திலே இருள் படர்ந்து வருகிற வேளை. பறவைகள் எல்லாம் வேகமாகத் தங்கள் கூடுகளை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தன. வானத்தையும், பறவைகளையும், தம்முடைய குகையையும் பார்த்தவாறு இரண்டாவது துறவி இனிமையான குரலில் கீழ்க்கண்ட பாடலைப் பாடினர்:—

இதயக் கூண்டில் ஒரு பறவை
இரைதா என்று கூப்பிடுதே
இதயக் கூண்டில் ஒரு பறவை!

உதயம் இரவு பகல் எல்லாம்
உணவு சற்றும் உண்ணமல்
உறக்கம் சிறிதும் இல்லாமல்

இதயக் கூண்டில் ஒரு பறவை
இரைதா என்று கூப்பிடுதே!

இதற்கு மேல் அந்தப் பாடலின் வார்த்தைகள் பூபதிக்குக் கேட்கவில்லை. பாடலை அந்தத் துறவி பாடியபோது, அவருடைய குரலில் இழைந்த உருக்கம் பூபதியின் உள்ளத்தை என்னவோ செய்தது. இத்தனை உருக்கமான குரலிலே இதயத்தின் ஏக்கத்தையெல்லாம் கொட்டுகிற இந்தத் துறவி யாரென்று அறியப் பூபதிக்கு ஆவல் எழுந்தது. அந்த ஆவலின் காரணமாக அவனுடைய நடையில் தயக்கம் உண்டாயிற்று.

''என்ன இளவரசே! தயங்குகிறீர்கள்? மேலே நடவுங்கள். மலைச் சரிவு. கால்களை ஊன்றி நடக்க வேண்டும். தெரிந்ததா!'' என்றார் அந்தத் துறவி! (தொடரும்)

தாயுள்ளம்

ராஜலக்ஷ்மி



கிணற்றடியில் நீராடிவிட்டுப் புறக்கடை இரேழி வழியாகச் சமையலறையில் நுழையக் கால் வைத்த தருமாம்பாள் அடுத்த அறையில் பேச்சுக் குரல் கேட்கவே சற்றுத் தயங்கி நின்றாள். "ஒன்று உங்கள் தாயார் இந்த வீட்டை விட்டுப் போகவேண்டும், அல்லது நான் போக வேண்டும். இன்றைக்குள் இரண்டிலொன்று தெரியா விட்டால் நான் என் தாயாருடன் மாமா வீட்டுக்குப் போய் விடுகிறேன்" என்றாள் மருமகள் பத்மா.

"பத்மா! சற்று நிதானமாக யோசித்துப் பார். என் தாயார் எங்கே போவாள்? சிறு வயதில் அவள் என்னை வளர்க்கப் பட்ட கஷ்டங்களை நீ அறிய மாட்டாய். அவள் இங்கிருப்பதால் உனக்கு என்ன சிரமம்?" என்றான் தருமுவின் பிள்ளை. இதைத் தொடர்ந்து பத்மாவின் விம்மலின் சப்தத்தைக் கேட்ட தருமுவால் பொறுக்க முடியவில்லை. அவளுக்கு மயக்கம் வரும் போலிருந்தது.

மருமகள் தன்னை விரும்பவில்லை யென்பதை அவள் வந்த சில தினங்களிலேயே உணர்ந்து கொண்டாள் தருமு. இதனால் தனது மகனின் இன்ப வாழ்க்கை பாதிக்கப் படுவதை அவள் விரும்பவில்லை.

அவள் மனம் குழம்ப ஆரம்பித்தது. அமைதியை நாடி நேராகத் திரிபுர சுந்தரியம்மையின் கோவிலை நோக்கிக் கிளம்பி விட்டாள். அவள் மனச் சஞ்சலம் ஏற்பட்டால் அதை ஆற்றிக்கொள்ள அம்பிகையைத் தரிசித்துவிட்டு வருவது வழக்கம். வழக்கம் போல் குளித்ததும் காப்பி போடும் வேலையையும் மறந்து அம்பாள் தரிசனத்துக்குக் கிளம்பி விட்டாள்.

திருவொற்றியூர் மேல் மாடவீதியிலிருந்து கோவில் அதிக தூரமில்லை. பிரதி வெள்ளியும் அம்பிகையைத் தரிசிக்காமல் காப்பிகூடச் சாப்பிட மாட்டாள் தருமு. அன்னை பராசக்தியின் சிரித்த முகம் அவள் கவலைகளை ஒரு நொடியில் போக்கிவிடும் என்பதில் அவளுக்கு அளவற்ற நம்பிக்கை.

கோவில் மணி கலகல வென்று ஒலித்தது. பக்தர்கள் அம்பிகையின் தரிசனத்துக்காகத் திரளாகக் கூடியிருந்தனர். தருமுவும் அவர்களோடு நின்று அம்மனை வணங்கினாள்.

அம்பிகையின் திருமுகத்தில் ஒரு விதச் சலனமுமில்லை. அதே புன்னகையுடன், அருள் மாரி பொழியும் ஒளி வீசும் முகத்துடன்தான் காட்சி யளித்துக் கொண்டிருந்தாள். ஆனால் தருமுவின் அகக் கண்களுக்கு தேவி தன்னை நோக்கி நகைப்பது போல் தோன்றியது.

''அசடே! பிள்ளை, பிள்ளை என்று உயிரை விட்டாய்! அளவுக்கு மீறி உழைத்து அவனை ஆளாக்கினாய்! இன்று அவன் உன் பிள்ளையில்லை. உன் மருமகளின் கைப்பாவை என்பதை மறந்து விட்டாயா! இனி அது உன் வீடில்லை; அவள் வீடு. உன் கடமை முடிந்துவிட்டது. உன் சக்தியுள்ளமட்டும் உன் வயிற்றைக் கழுவிக் கொள்ளவேண்டிய வழியைப் பார்'' என்று சொல்லித் திரிபுரசுந்தரியம்மன் கலகலவென்று நகைப்பதுபோல் ஒரு பிரமை தட்டியது.

அவள் நெஞ்சத்திரையில் கடந்த வாழ்க்கையின் சம்பவங்கள் ஒன்றன்பின்ஒன்றாகக் காட்சியளித்தன. விவரம் தெரியாத குழந்தைப் பருவத்தில் அவள் ஒரு உதவாக்கரைக்கு வாழ்க்கைப் படுத்தப்பட்டாள். கணவனால் ஒரு கடுகளவு சுகத்தை யடையவில்லை அப்பேதை. சுபாவத்திலேயே சற்று அசடாகவும், சாப்பாட்டு ராமனாகவும், வேலையொன்று மில்லாமல் திரிந்து கொண்டிருந்தான் அவள் கணவன். கடைசியில் பைத்தியம் பிடித்துத் திரிந்து விட்டு ஓர் ஆண் குழந்தையையும் அவள் தலையில் கட்டிவிட்டு ஒரு நாள் அவன் இறந்து போய் விட்டான்.

ஏழைமை நிலையில் விடப்பட்ட ஓர் இளம் விதவையின் கஷ்டங்கள்

கூறுமலேயே விளங்கும். கணவனை இழந்த பிறகு புக்ககத்தில் இவளை யாரும் லட்சியம் செய்யவில்லை. கைக் குழந்தையுடன் துடித்துப் போய் ஒரு நாள் வீட்டை விட்டு வெளியேறி விட்டாள் தருமு.

கடவுள் அருளால் அவளது தாயாரின் அத்தை ஒருத்தி அப்பளம் இட்டு விற்று வயிறு வளர்த்து வந்தாள். அவளும் கஷ்டப்பட்டவளாதலால் தருமுவின் நிலைக்கு இரங்கி அவளைத் தன்னுடன் வைத்துக் கொண்டு ஆதரித்தாள். வயதான அத்தைக்கு, தருமு வந்தது மிகவும் உதவியாக இருந்தது. அப்பளம் இடுவதில் கிழவிக்கு உதவி செய்வதும் ஒழிந்தபோது இட்டிலிக்கு அரைத்துக் கொடுப்பதும் நாள்கிழமைகள் கல்யாணங்கள் முதலிய விசேஷங்களுக்குச் சமைப்பதும் — இவை போன்ற சில்லறை வேலைகளை அவ்வப்போது தருமு செய்து வந்ததில் கொஞ்சம் பணம் கிடைத்தது. அவளது லட்சியமெல்லாம் தனது ஒரே செல்வமான கோபுவை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதே.

கிழவி உயிருள்ளவரை அவளைக் காப்பாற்றினாள். அந்த மகிழ்ச்சியும் அதிக நாட்கள் நீடித்திருக்கவில்லை. ஒருநாள் அவளும் தன் கண்ணை மூடிவிட்டாள். ஐந்து வயதுக் குழந்தையுடன் தன்னந்தனியே விடப்பட்ட தருமுவுக்கு எப்படிக் காலந்தள்ளுவது என்பது ஒரு பெரிய பிரச்னையாக இருந்தது. நல்ல கால




மாக ஓய்வு பெற்ற நீதிபதி சுந்தரமய்யரின் மனைவி பாரிச வாயுவினால் படுத்த படுக்கையாகி விட்டதால் அவளைக் கவனிக்க ஒரு பெண் தேவை என்றும், ரூபாய் இருபது சம்பளத்துடன் சாப்பாடு போட்டு வீட்டோடு வைத்துக் கொள்வார்கள் என்றும் வதந்தி காதில் விழுந்தது. தருமு ஓடோடியும் சென்று அந்த அம்மாளைப் பார்த்தாள். அவள் தெய்வ பக்தியும் இரக்கமும் மிகுந்தவளாதலால் தருமுவின் பரிதாப நிலைக்கு இரங்கி அவளைக் குழந்தையுடன் ஏற்றுக் கொள்ளச் சம்மதித்து விட்டாள்.

எஜமானி அம்மாளைத் தருமு அக்கறையுடன் கவனித்து வந்தாள். இரவும் பகலும் கண்ணிமைகள் கண்ணைக் காப்பதுபோல் அவளைக் காத்து வந்தாள். எஜமானி அம்மாளுக்கு அவள்மேல் அலாதியான அன்பும் பிரியமும் ஏற்பட்டது. தருமுவின் எண்ணத்தை யறிந்து கொண்ட எஜமானியம்மாள், அவள் விரும்பியவாறு கோபுவைப் படிக்கவைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். தருமுவின் மனம் மகிழ்ச்சியால் நிறைந்தது.

■ தருமு அலமேலுவிடம் வந்து ஐந்து வருடங்களாகி விட்டன. அவள் அங்கு வந்த போது கோபு ஆறுவது வகுப்பு தேறியிருந்தான். கோபுவும் அக்கறையுடன் படித்து வந்தான். அவன் எஸ்.எஸ்.எல்.ஸியில் முதலாவதாகத் தேறினான். இதற்குள் எஜமானி அம்மாளின் பிள்ளைகளுக்குக் கல்யாணமாகி மருமக்களும் வந்து விட்டனர்.


கடவுள் அதிர்ஷ்டத்தைக் காட்டி மறைப்பதுபோல் எஜமானி அம்மாளின் உடல் நிலை படு மோசமாகி விட்டது. ஆகாரமில்லாமல் படுத்த படுக்கையாகி விட்டாள். ஒருவருமில்லாத சமயமாகப் பார்த்து அவள் தருமுவை அருகில் அழைத்து, "தருமு! இனி நான் அதிக நாட்கள் இருக்க மாட்டேன். நீ எனக்குச் செய்த பணிவிடைகளை நான் ஏழேழு ஜன்மத்திலும் மறக்க மாட்டேன். நீ சம்பளம் வேண்டாமென்று சொல்லி விட்டாய். ஆனால் நான் ஒவ்வொரு மாதமும் உன் சம்பளத்தைத் தபால் ஆபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் உன் பேரில் போட்டு வைத்திருக்கிறேன். வேண்டும்போது அதிலிருந்து பணம் பெற்றுக் கொள்ளலாம். மறுக்காதே. நான் இறந்த பிறகு நிலைமை எப்படி மாறுமோ! எப்படியாவது கோபுவை பி. ஏ. வரை படிக்க வைத்துவிடு" என்று சொல்லி அழுதாள். அவளிடமிருந்து தபால் ஆபீஸ் சேமிப்புப் புத்தகத்தைப் பெற்றுக் கொண்டதும் தருமு விம்மி விம்மி அழுது விட்



பற்களைப் பரிசுத்தமாக்கும்

மக்ளீன்ஸ்!

இம் மூன்று கோப்பைகளை பற்கள் என பாவனை செய்வீர்களானால் இவைகளின் வெளிப்புறம் மற்றும் உட்புறத்தைத் தவிர, ஊத்தை சேர்ந்து அபாயகரமான கிருமிகள் வசிக்கும் இடுக்குகளை சுத்தம் செய்வது மிகக் கடினம். பற்களைப் பாதுகாக்க விரும்புவோர், 'லேப்பாயிட்ஸ்' ஸினால் ஏற்படும் அபாயத்தை அறிய வேண்டியது அவசியம்.



மக்ளீன்ஸ் எளிதில் துலக்க முடியாத பற்களின் இடுக்குகளில் முண்டிப் புகுந்து துலக்குகிறது. எனவே

பற்சிதைவைத் தவிர்க்க சிறந்த சாதனமாக இருப்பது மக்ளீன்ஸ் ஒன்றே

பற்களின் மேல் படர்ந்திருக்கும் 'லேப்பாயிட்ஸ்' கலந்த பாசி பார்ப்பதற்கு அசிங்கமாயிருப்பதோடன்றி அபாயகரமானதுங்கூட என்று பல் டாக்டர்கள் நிரூபிக்கின்றனர். 'லேப்பாயிட்ஸை' எளிதில் சுத்தம் செய்ய முடியாது. இவை தவறாமல் சுத்தம் செய்யப்பட வேண்டும். இல்லையேல் இவைகளின் உட்புறத்தில் தங்கும் திராவகச் சத்து பற்களை அரித்தே விடுகின்றது. இத்தகைய 'லேப்பாயிட்ஸை' அறவே அகற்ற ஒரே வழிதான் உண்டு. அதாவது இதை கரையச் செய்ய வேண்டும். 'லேப்பாயிட்ஸை' கரைக்கக் கூடிய விசேஷமான திரவம் மக்ளீன்ஸில் இருப்பதால், வாயில் நுரை கூட்டாமல் மக்ளீன்ஸ் 'லேப்பாயிட்ஸை' லகுவாக ஜாக்கிரதையுடன் துரிதமாக கரையச் செய்கின்றது. பற்களின் சிதைவைத் தவிர்க்க இது மிகவும் முக்கியம்.

மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை தினந்தோறும் இருமுறை உபயோகியுங்கள். பற்கள் வெண்மையாகவும், ஆரோக்கியத்துடனும் விளங்கும்.



க்ளோரோபில் சேர்ந்த
வகையும் கிடைக்கும்

MTY-41 TAM

இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பு மூலம் 41-மீட்டர் பாண்டில் பிரதி திங்கட்கிழமைதோறும் இரவு 8-30 முதல் 9 மணி வரை ஒலிபரப்பப்படும். "[illegible]" என்ற நிகழ்ச்சியை அவசியம் கேளுங்கள்

டாள். அத்தகைய உத்தமி அடுத்த நாள் கண்ணை மூடிவிட்டாள்.

எஜமானியின் மறைவுக்குப் பின் நிலைமை அடியோடு மாறிவிட்டது. தருமு ஒரு நாள் மரியாதையாகத் தன் வேலைக்குச் சீட்டுக் கிழித்துக் கொடுத்து விட்டுக் கிளம்பி விட்டாள்.

ஒரு சிறு அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு மறுபடியும் அப்பளம் இடும் வேலையைத் தொடங்கினாள். தபால் இலாகாவில் சேமிக்கப்பட்டிருந்த தொகையை அவ்வப்போது உபயோகித்து வந்தாள். அம்பிகையின் அருளால் கோபுவுக்குச் சீக்கிரத்திலேயே அங்குள்ள தொழிற்சாலையிலேயே நூறு ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலை கிடைத்தது. அதைக் கண்டு தருமுவின் உள்ளம் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தது.

ஒரே பெண்ணுடன் கொஞ்சம் சொத்துடைய ஒரு விதவை தன் பெண்ணைக் கோபுவுக்குக் கொடுக்க முன் வந்தாள். பெண் அடக்கமாகவும் அழகாகவும் இருந்ததால், தருமு மகிழ்ச்சியுடன் கோபுவுக்கு அப்பெண்ணைக் கல்யாணம் செய்து வைத்தாள். பெண்ணின் தாயார் கல்யாணமான கையோடு பெண் வீட்டோடு தங்க வந்து விட்டாள். இந்த விபரீதத்தைக் கொஞ்சங்கூடத் தருமு எதிர்பார்க்கவில்லை.

வானம் வெளுத்துக் கதிரவனின் ஒளி அவள் முகத்தில் பட்டதுமே, தருமு திடுக்கிட்டுத் தனது சிந்தனையிலிருந்து விடுபட்டாள். பரபரப்புடன் எழுந்து வீட்டுக்குப் புறப்பட்டாள். 'அடாடா! மணி எட்டு அடித்திருக்கும்போலிருக்கிறதே! கோபுவுக்குத் தொழிற்சாலைக்குப் போகும் சமயம் நெருங்கி விட்டதே. காப்பிகூடப் போடாமல் பைத்தியம்போல் இத்தனை நேரம் உட்கார்ந்து விட்டேனே' என்று தன்னைத்தானே நொந்த வண்ணம் ஒரு நொடியில் தன் வீட்டை அடைந்தாள். வீட்டினுள் சிரிப்பும், கலகலவென்று பேச்சுக்குரலும் கேட்கவே தருமு சற்று வாசற்படியிலேயே தயங்கி நின்று பேச்சைக் கவனித்தாள்.

''ஏது மாமி! இன்று சமையல் பிரமாதமாக இருக்கிறது!'' என்றான் கோபு.

''எங்கம்மாவின் காரியத்துக்கு ஒப்புமில்லை, உயர்வுமில்லை'' என்றாள் பத்மா.

''உம். என் அம்மாவுக்கே எப்போதும் தரித்திர புத்திதான். தரித்திரத்திலேயே உழன்ற அவளுக்குப் பருப்புக் குழம்பு வைக்கவே மனம் வராது. இனிமேல் நீங்களே எல்லாம் கவனித்துக் கொள்ளுங்கள். வறட்டுக்குழம்பு சாப்பிட்டுச் சாப்பிட்டு என் நாக்கு செத்து விட்டது. இன்னும் சில தினங்கள் கழிந்தால் எனக்கு வயிற்று வலி வந்துவிடும்.''

இவ்வாறு கோபு கூறியதைக் கேட்ட தருமுவுக்குத் தலை சுழன்றது. தனது கோபுவா இப்படிப் பேசுகிறான் என்பதை அவளால் நம்பவே முடியவில்லை. அவனை முன்னுக்குக் கொண்டுவர அவள் பட்டபாடு? இராப்பகலாக உழைத்துப் பாதி வேளை பட்டினி கிடந்து அவனை ஆளாக்கிய பெற்ற தாயிடம் அவனுக்கு இருந்த மதிப்பு இவ்வளவுதானா?

அன்று மாலையே தருமு காஞ்சிபுரம் புறப்படத் தயாரானாள். திடீரென்று தருமு கிளம்பியது கோபுவுக்குப் பெரும் புதிராக இருந்தது. ஒருவித வெறுப்போ கோபமோ முகத்தில் தோன்றாதவாறு, ''எனக்கு வயசாகி விட்டது. போகிறதற்கு ஏதாவது வழி தேடிக் கொள்ள வேண்டாமா? காஞ்சிபுரத்தில் கொஞ்ச நாட்கள் இருந்து சுவாமி தரிசனம் செய்துவிட்டு வருகிறேன்'' என்று சிரித்த முகத்துடன் பிள்ளையிடம் சொன்னாள். கோபு அவளைத் தடுக்கவில்லை. சந்தோஷத்துடன் அவளை அனுப்பி வைத்தான்.

முன் யோசனையுள்ள தருமு சமயத்துக்கு உதவும் என்று ஒரு சிறு தொகையைப் பத்திரமாகச் சேமித்து வைத்திருந்தாள். அதைப் பயன்படுத்திக் கொண்டு காஞ்சிபுரத்துக்குக் கிளம்பிவிட்டாள். காஞ்சிபுரத்தில் அவளுக்குச் சுப்பம்மாள் என்றொரு தோழியுண்டு. அவள் வீட்டில் சில தினங்கள் தங்கினாள். மிகவும் புத்திசாலியான சுப்பம்மாள் தருமு கூறாமலேயே விஷயங்களை ஒருவாறு ஊகித்து அறிந்து கொண்டாள்.

தருமு வந்த சில தினங்களில், பூனாவில் ஒரு இளம் டாக்டரின் மனைவி நான்கு சிறு குழந்தைகளை வைத்துக் கொண்டு, நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாக இருக்கிறாளென்றும், நோயாளியையும் குழந்தைகளையும் தாய்போல் பராமரிக்கும் பொறுப்பான ஒரு அம்மாள் தேவை என்றும் தகவல் கிடைத்தது. சாப்பாடு போக ரூபாய் முப்பது சம்பளம் என்பதைக் கேட்டதுமே சுப்பம்மாளுக்கு இந்த வேலை தருமுவுக்கு ஏற்றதென்று மனத்தில் படவே தன் அபிப்பிராயத்தைத் தருமுவிடம் கூறினாள். தருமு மகிழ்ச்சியுடன் சுப்பம்மாளின் அபிப்பிராயத்துக்கு இசைந்தாள். தகுந்த ஏற்பாடுகளுடன் அவள் தருமுவை ரயிலேற்றி விட்டாள்.

டாக்டரே பூனா ஸ்டேஷனுக்கு வந்து தருமுவை அழைத்துச் சென்றார். தருமு பங்களாவுக்குள் நுழைந்ததும் கட்டிலில் அழகே உருவாகக் கொடிபோல் துவண்டு கிடக்கும் அந்த இளம் பெண்ணைக் கண்டாள். தருமுவின் கண்களில் கண்ணீர் பெருகி வந்து விட்டது.

தருமுவைக் கண்ட அந்த மங்கையின் கண்களில் நீர் ததும்பியது. ''மாமி! நான் பாவம் செய்திருக்கிறேன். எனக்குத் தாயாருமில்லை, மாமியாருமில்லை. இந்த வயதில் எனக்கு இருதய நோய் வந்து விட்டது. நீங்கள்தான் வீட்டுப் பொறுப்பையெல்லாம் கவனித்துக் கொள்ள வேண்டும். சுப்பம்மாள் உங்களைப் பற்றி விவரமாக எழுதியிருந்தாள்'' என்று அன்பொழுகப் பேசினாள் ரேவதி.

''குழந்தாய்! நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. வீட்டைப் பொறுப்பாகக் கவனித்துக் கொள்வேன். நீ என் பெற்ற பெண்ணைப் போல். உன் நற்குணம் உன்னைக் காப்பாற்றும்'' என்றாள் தருமு.

பெற்று வளர்த்துச் சீராட்டிய மகன் இப்படியிருக்க முன்பின் தெரியாத ஒரு ஆத்மா அன்புமாரி பொழிகின்ற விந்தையை எண்ண எண்ண அவளுக்குத் தெய்வ நம்பிக்கை இன்னும் அதிகரிக்க ஆரம்பித்தது.

டாக்டர் கிருஷ்ணனுக்கும் ரேவதிக்கும் தருமுவை ரொம்பப்பிடித்துப் போய்விட்டது.

விளையாட்டுப்போல் ஒரு வருடம் ஓடி ஒளிந்து விட்டது. வரவரத் தருமுவுக்குக்

கோபுவைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. ஆனால் அவள் முடிவு நிறைவேறும் முன் ரேவதிக்குத் திடீரென்று நோய் அதிகரித்து அவளை வைத்தியசாலையில் கொண்டுபோய்ச் சேர்க்கும்படியாகிவிட்டது. தருமுவின் மனத்தில் பெருத்த நிகில் பிடித்துக்கொண்டது. தன்னிடம் அன்பு செலுத்தும் ரேவதி நல்லபடியாகப் பிழைத்து எழுந்திருக்க வேண்டுமே என்று சதா கவலைப்படலானாள்.

ஒருநாள் அவள் வழக்கம்போல் ரேவதியைப் பார்த்துவிட்டு நோயாளிகளின் பொது விடுதியின் வழியே வந்து கொண்டிருந்தாள். வெளியே ஏகப்பட்ட கூட்டமும் பரபரப்பும் இருந்ததைக் கண்ட அவளுக்கு அங்கு என்ன விசேஷம் என்று பார்க்க வேண்டுமென்று தோன்றவே கூட்டத்தில் புகுந்து சென்றாள். ஆம்புலன்ஸ் வண்டியிலிருந்து கொண்டு வந்து ஸ்ட்ரெச்சரில் கிடத்தப்பட்டிருந்த ஒருவனைக் கண்டதும் திடுக்கிட்டு விட்டாள். முகத்திலிருந்த காயத்திலிருந்து இரத்தம் குபுகுபுவென்று வெளிப்பட்டது. "நல்ல அடி. உடம்பிலிருந்து அளவுக்கு மீறிய இரத்தம் போய்விட்டது. உடனே இரத்தம் பாய்ச்சாவிட்டால் அவன் பிழைப்பது துர்லபம்" என்று பெரிய டாக்டர் கூறியது அவள் காதுகளில் விழுந்தது.

துடிதுடிப்புடன் அருகில் சென்று முகத்தை நோக்கினாள். அவ்வளவுதான்; "ஆ! கோபுவா?" என்று அலறி விட்டாள்.

தருமு ஆவேசம் வந்தவள்போல் டாக்டரிடம் ஓடினாள். "டாக்டர்! இவன் எனக்கு நெருங்கிய உறவினன்தான். என் இரத்தம் அவனுக்கு ஒத்துக்கொள்கிறதா, பாருங்கள்" என்று சொன்னாள். அவள் கூறி முடிக்குமுன் டாக்டர் கிருஷ்ணனும் அங்கு வந்து சேர்ந்தார். அவர் புன்முறுவலுடன் பெரிய டாக்டரை நோக்கி, "சார்! இந்த அம்மாளின் இரத்தம் கட்டாயம் நோயாளியின் உடலுக்குச் சேரும். தாமதிக்காமல் அவள் உடலிலிருந்து இரத்தத்தை நோயாளியின் உடலுக்குச் செலுத்துங்கள்" என்று கூறிவிட்டு, ஒரு நொடியில் தருமுவின் கையிலிருந்து ஒரு துளி இரத்தத்தை எடுத்துப் பரிசோதித்தார். அவர் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

தாமதிக்காமல் டாக்டர் இருவரும் தாதிகளின் உதவியால் தருமுவின் உடலிலிருந்து வேண்டிய அளவு இரத்தத்தைக் கோபுவின் உடலில் பாய்ச்சினார்கள். சில நிமிடங்களிலேயே கோபுவின் முகத்தில் நல்ல தெளிவு ஏற்பட்டதைக் கண்ட டாக்டரின் முகத்தில் வெற்றிக் குறி தோன்றியது.

நாட்கள் உருண்டோடின. கோபுவுக்குச் சுய ஞாபகம் வரவே பதினைந்து நாட்களாகி விட்டன. கோபு நினைவு தெரிந்ததும் கொஞ்சம் கொஞ்சமாக முன் நடந்த விஷயங்களை அறிய வாரம்பித்தான்.

தான் சைக்கிளில் லாரியுடன் மோதிக்கொண்டது, அவனுக்கு நினைவுக்கு வந்தது. அவனுக்குக் காயங்கள் அநேகமாக ஆறிவிட்டன. டாக்டர் கிருஷ்ணன் அடிக்கடி வந்து அவனைப் பார்த்துக் கொண்டார்.

"உங்கள் உறவினர் என்று சொல்லிக் கொண்டு ஒரு அம்மாள் வந்து அன்று ரத்தம் கொடுத்திரா விட்டால் நீங்கள் இறந்து போயிருப்பீர்கள்" என்று பெரிய டாக்டர் சொன்னதிலிருந்து கோபுவின் மனம் அவளைக் காணத் துடித்தது.

கால் கட்டு அவிழ்க்கப்பட்டதும் கோபுவைச் சற்று நடமாட வேண்டுமென்று டாக்டர் உத்தரவிட்டார்.

கோபு ஒரு கோலைத் துணையாகக் கொண்டு மெள்ள வேடிக்கை பார்த்துக் கொண்டே பல வார்டுகளைக் கடந்து சென்றான். ஸ்பெஷல் வார்டில் இருந்த ஒரு அறையினுள் அவன் பார்வை பட்டதும் அவன் கால்கள் அசைவற்று நின்றன. அங்கு அவன் கண்ட காட்சி அவனைத் திகைக்க வைத்தது. டம்ளரில் கஞ்சியை ஊற்றி நோயாளிக்கு அன்புடன் கொடுத்துக் கொண்டிருந்த அவன் தாயார் தருமுவைக் கண்டதும் "அம்மா" என்று அலறிவிட்டான். அவன் கால்கள் தள்ளாடின.

அவன் குரலைக் கேட்ட தருமு திடுக்கிட்டு ஓடி வந்து, விழாதபடி அவனைப் பிடித்துக் கொண்டாள். கோபுவின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பிரவாகமெடுத்தோடியது. கோபு பச்சைக் குழந்தை போல் விம்மினான். "அம்மா! பாவி நான். மன்னிப்பாயா! நீ போன பின் அந்த இரண்டு பெண் பேய்களும் அடித்த கொட்டத்துக்கு அளவேயில்லை. அவர்கள் வாழ்ந்த டாம்பீக வாழ்வு கடன் சுமையாக என் தலையில் ஏறி என் வேலைக்கும் உலை வைத்து விட்டது. இரண்டு குழந்தைகள் இறந்து என் மனைவிக்கு டி. பி. வந்து படுத்த படுக்கையாக இருக்கிறாள். நான் கஷ்டப்படுவதைக் கண்டு என் மாமியார் மெள்ளத் தன் தம்பி வீட்டுக்கு நழுவி விட்டாள். இங்குள்ள பெனிஸிலின் தொழிற்சாலையில் ஒரு வேலை கிடைத்தது. ஒப்புக்கொண்டு ஒரு மாதங்கூட ஆகவில்லை. அதற்குள் நான் சைக்கிளில் வரும்போது லாரி மோதி இந்த விபத்து ஏற்பட்டது" என்று கூறி முடித்தான்.

அவன் அவ்வாறு கூறிக் கொண்டிருக்கும் போதே டாக்டர் கிருஷ்ணன் அங்கு வந்தார். கோபுவிடம், "இந்த அம்மாள்தான் உங்களுக்கு உயிர் கொடுத்தாள்!" என்றார்.

கோபு படபடப்புடன், "டாக்டர், இவள் என் சொந்தத் தாய். பத்து மாதம் சுமந்து பெற்றவள்" என்றான் உணர்ச்சியுடன். இதைக் கேட்டதும் டாக்டர் கடகடவென்று சிரித்தார். இதைக் கண்ட ரேவதி கட்டிலிருந்து மெள்ள எழுந்து உட்கார்ந்து, "தருமு அம்மாவுக்கு ஒன்றுமே தெரியாது போலிருக்கிறது" என்றாள் புன்சிரிப்புடன்.

"மாமி! எனக்கு எல்லா விஷயங்களும் முன்பே தெரியும். சுப்பம்மாள் உங்களைப் பற்றிய முழு விவரமும் கடித மூலம் என்னிடம் தெரிவித்திருந்தாள். சமீபத்தில் கோபு வேலையில்லாமல் கஷ்டப்படுவதையும் சுப்பம்மாள் மூலம் அறிந்தேன். எனக்குத் தெரிந்த ஒரு உத்தியோகஸ்தர் மூலமாகக் கோபுவுக்கு வேலை கிடைக்கும்படி செய்தேன். எங்களைத் தாய்போல் ஆதரித்த உங்களுக்கு என்னதான் செய்யக்கூடாது?" என்று கூறிய டாக்டரை நன்றியுடன் நோக்கினாள் தருமு. என்ன விந்தை! டாக்டரின் முகத்தில் அன்னை திரிபுரசுந்தரியின் முகபிம்பம் தோன்றியது.

இப்பொழுது

புது மாதிரியான

டாய்லட் பவுடர்

நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருக்க

இந்தியாவிலே முதன் முதலாக நேர்த்தியான டால்க் உலகப் பிரசித்தி பெற்ற ஜி-11* (புதிதானது—இறுதியானது) உடன் சேர்க்கப் பட்டிருக்கிறது....இது ஒன்றுதான் நிரூபிக்கப்பட்ட எரிச்சலைத் தராமல் சருமங்களில் கறைகளையும் வியர்வை நாற்றத்தையும் உண்டாக்கும் கிருமிகளை நாசம் செய்யும் ரசாயனப் பொருள். இந்த அற்புதமான பவுடர் வேர்க்குரு போன்ற சரும உபாதைகளுக்கு துரிதமாக நிரந்தர நிவாரணம் அளிக்கிறது...

மனோகரமான மணமுள்ள இந்த மென்மையான பவுடரை வேலைக்கோ விளையாட்டுக்கோ, உல்லாசப் பிரயாணத்திற்கோ, விருந்துகளுக்கோ...போகுமுன் உங்கள் மேல் தூவிக் கொள்ளுங்கள். மனோதைரியம் அதிகரிக்கும், அதிகமாக எல்லோரும் **விரும்புவர்!** ஆடைகளின் மேல் தூவுவதால் சருமத்தில் புண்ணாவதைத் தடுக்கிறது.



Godrej ரிஜிஸ்டர்ட்

கோத்ரெஜ்
டாய்லெட் பவுடர்

ஜி-11
கலந்தது

ஜி-11 கலந்த
ஹேர் டானிக்
ஷேவிங் ஸ்டிக்
சிந்தால் ஸோப்

*விஞ்ஞான புத்தகங்களின் விவரணங்கள் கொண்டுள்ள ஜி-11 (ஹெக்ஸாக்ளோரோபின்) வரலாறுக்கு (ஆங்கிலத்தில் உள்ளது) எழுதுங்கள்: கோத்ரெஜ் சோப்ஸ் பிரைவேட் லிமிடெட், பம்பாய்-11.

தேவியின் கடிதம்

திட்டம் தேவை

வசுமதி ராமசாமி

அன்புமிக்க சகோதரி சுஜாதா,

சேலைகள், ஆடைகள் நாம் வாங்கினால் விலை கூடப் போய் விடும். ஆடவர்களையே வாங்கி விடச் சொல்லி விடலாமாவென நீ கேட்டிருக்கிறாய்.

அது இன்னும் ஆபத்துத்தான். பெண்களுக்கு வேண்டிய சேலைகளை வாங்குவதில் ஆண்களுடைய திறமை மிகக் குறைவு. நூற்றுக்கொருவர் புடவைகளின் நிறம், தரம் தெரிந்தவர்களாக இருக்கலாம். அவ்வளவே.

சென்ற வருஷம் என் கணவரிடம், ''தீபாவளிக்கு உங்கள் கையால் எனக்குப் புடவை வாங்கிக் கொடுக்க வேண்டும்'' என்று சொல்லி வைத்தேன். நுணலும் தன் வாயால் கெடுமல்லவா? வழக்கமாக நான்தான் வாங்கி வைப்பேன். ஆசையாக நூற்று இருபது ரூபாய்க்குப் புடவையை வாங்கி வந்து என் கையில் கொடுத்தார். அதைப் பார்த்ததும் எனக்குத் தலையைச் சுற்றியது. என் சிநேகிதி ஒரு வாரத்துக்கு முன் தன் மாமா பெண் கல்யாணத்துக்கு வாங்கிக் கொடுத்த மாம்பழக் கலர் புடவை நன்றாக இல்லை என்று தெரிந்து, அந்தக் கடையில் கொடுத்திருந்தாள். அதை அவர்கள் நாற்பது ரூபாய் விலை போட்டு எடுத்துக் கொண்டிருந்தார்கள். அதே புடவையை என் கணவர் நூற்று இருபது ரூபாய் கொடுத்து வாங்கி வந்திருக்கிறார்!

''எப்படிப் புடவை? இந்த ஊரில் இது ஒன்றுதான் இருக்கிறது என்று சொன்னான். பணத்தையும் கொடுத்துவிட்டேன்'' என்றார். 'ஆமாம்! இந்த மாதிரி சேலை இந்த ஊரில் உங்கள் ஒருவருக்குத்தான் அகப்படும்' என்று நானும் பதில் சொல்லிவைத்தேன்!



ஒரு சமயம் மதுரையில் இருக்கும் என் உறவினர் வீட்டுக்குப் போயிருந்தேன். வீட்டு எஜமானர் பெரிய வக்கீல். நல்ல வருமானம். நான் போயிருந்த சமயம் விருது நகருக்கு வழக்கு விஷயமாகப் போயிருந்தார். திரும்பி வரும்போது இரண்டு மூட்டை துவரம்பருப்பு வாங்கி வந்தார். (அவருடைய கட்சிக்காரர் பணம் கொடுத்திருக்கலாம்!) பருப்பு குண்டு குண்டாக ஒரு கல், மண் இன்றி மிகவும் ருசியாக இருந்தது. அந்த அம்மாளிடம், ''உங்கள் கணவர் சாமான்கள் நன்றாக வாங்குகிறார்'' என்று பெருமையாகச் சொன்னேன். ''அதற்குள் முடிவு கட்டி விடாதே! எது நிறையத் தேவை? எது கொஞ்சமாகத் தேவையென அவருக்குத் தெரியாது'' என்றாள். இரண்டு நாட்களுக்குப் பிறகு மறுபடியும் வெளியூருக்குப் போயிருந்தார். திரும்பி வரும்போது வேலைக்காரன் இரண்டு கோணி மூட்டைகளை எடுத்துக் கொண்டு வந்தான். பிரித்துப் பார்த்தால் அவ்வளவும் கத்திரிக்காயாக இருந்தது.

கூடிய மட்டும் நாம் இருக்கும் ஊரில் கிடைக்கும் சாமான்களைக் கொண்டே காரியங்கள் நடத்துவது சிறந்தது. சில சமயம் அயலூரில் நன்றாக அல்லது மலிவாகக் கிடைக்கும் பொருள்களை வாங்கித் தரச் சொல்லும் சந்தர்ப்பங்கள் நேரலாம். அவர்கள் நமக்காகச் சிரமப்பட்டு வாங்கிக் கொடுத்தால், அவற்றை அவர்கள் மனம் நோகக் குற்றம் சொல்லக் கூடாது. குற்றமாக இருந்தாலும் நாம் பாராட்டித்தான் சொல்ல வேண்டும்.

வீட்டிலிருந்து கிளம்பும் போதே என்ன சாமான்கள் தேவையென்று திட்டமிட்டுக் கொண்டு போவது நலம். கடைக்குப் போய்க் கவர்ச்சிகரமான பொருளை வாங்கி விட்டு, வீட்டுக்குத் தேவையானதை வாங்காமல், திரும்பி விட்டால் அதன் பலனாகச் சிரமத்தை அநுபவிக்க நேரிடும்.

காய்கறிகள் ஆடவர்கள் வாங்கினால் பார்த்து வாங்க மாட்டார்கள். வேலைக்காரர்கள் வாங்கினால் விலை அதிகமாய்க் கொடுப்பார்கள். அல்லது நமக்கு அதிகமாக்கணக்கு கொடுப்பார்கள். பம்பாய் நகரத்தில் நல்ல உடன்படிக்கை இருக்கிறது. ஒரு கட்டடத்தில் குடியிருக்கும் அவ்வளவு பேருக்கும் சேர்த்து ஒரு சகோதரி காய்கறிகள் வாங்கி வருகிறாள். அடுத்த முறையில் மற்றொரு சகோதரி அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகிறாள். இது சிக்கன முறையையும் அதே சமயம் ஒற்றுமையையும் வளர்த்து வரும். இப்படிக்கு,

பூமாதேவி

சாந்தி பிறந்தது

ஸ்ரீவத்ஸன்

ஏது நடக்கக்கூடாதோ அது நடந்து விட்டது. எதைப் பற்றி நான் இவ்வளவு நாள் பயந்து கொண்டிருந்தேனோ அது நடந்து விட்டது.

என்றாவது ஒருநாள் அது நடந்துதான் தீரவேண்டும். நடக்கட்டும். ஆற்று வெள்ளம் கரை புரண்டு வரும்போது அதை ஒரு கூடை மண்ணை வெட்டிப் போட்டுத் தடுத்து விட முடியுமா ?

நேற்று கடைத்தெருவிலிருந்து வரும் போது முதலியார்சந்து திரும்பும் இடத்தில் தற்செயலாக நிமிர்ந்தேன். அவ்வளவுதான்; என்பேரில் இடிவிழுந்தாற் போல் ஆயிற்று. பூமியே பிளந்து என்னை விழுங்கி விட்டாற் போல் இருந்தது. உடல் வெடவெட என்று நடுங்கியது. வீட்டுக்கு எப்படித் திரும்பி வந்தேன் என்பது எனக்குத் தெரியவே இல்லை.

காரணம், சந்து முனையில் அவனைப் பார்த்து விட்டேன். மன்னிக்கவும். ஒரு ஆணைப் போய் ஒரு பெண் அவன் என்று சொல்லுவது மரியாதைக் குறைவான செயல்தான். என் பெண் உள்ளம் அவ்வளவு குமுறுகிறது. அவனைப் பற்றி நினைத்தாலும் பேசினாலும். ஐந்து வருட காலமாக என்னுடைய உள்ளத்தை அரித்துத் தின்று கொண்டிருக்கும் புற்று நோய் போன்ற ஒரு விஷயம் அனேகமாக அடங்கிப் போய் விடும் என்ற தருணத்தில் தான் அவனே நேரில் வந்து சேர்ந்து விட்டான்.



நான் அவனைப் பார்த்து விட்டேன். அவன் என்னைப் பார்க்காதிருந்தால்..! அப்படி இருந்திருக்குமா? அவன் பார்க்காமல் இருந்திருந்தால் என் அதிர்ஷ்டம். பார்த்திருந்தால்...!

அவன் இந்த ஊருக்கு எப்படி வந்தான்? ஒருவேளை நம்மைப் பார்த்திருந்து வீடு விசாரித்துக் கொண்டு வந்து விட்டால். . .?

என் மனம் ஒரு நிலையில் இல்லை.

ஒருநாள், இரண்டு நாட்கள் ஆயின.

ஒன்றும் விசேஷமில்லை. கொஞ்சம் தைரியம் உண்டாயிற்று. ஒரு வாரம் சென்றது. அவன் வரவில்லை. 'நல்லவேளை! அவன் நம்மை அடையாளம் கண்டு கொள்ளவில்லை' என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டேன்.

அவன் மட்டும் அடையாளம் கண்டு கொண்டிருந்தால் என்னுடைய அமைதியான வாழ்க்கையில் மறுபடியும் பிரவேசித்து என்வாழ்வைக் கருக்கியிருப்பான். நல்லவேளை மீண்டும் அவன் வரவில்லை.

ஒரு வாரம் சென்றது. அன்று ஊரிலிருந்து என் சிநேகிதி எழுதிய கடிதம் ஒன்று வந்தது. அதை எங்கேயோ மறந்து வைத்துவிட்டு வீடு முழுதும் தேடினேன்.

அவர் மேஜை டிராயரைத் தேடினேன். அப்போது ஒரு கவர் தென்பட்டது. பெரிய கவர். நாலு பக்கம் எழுதப்பட்டிருந்தது. என்ன கவர்? யார் எழுதியது? இன்ஷியூரன்ஸ் நோட்டீஸ் வந்தால்கூட என்னிடம் சொல்லும் கணவர் ஏன் அதைப் பற்றிச் சொல்லவில்லை ?

கவரை எடுத்துப் பார்த்தேன். மூன்று தினங்களுக்கு முன்பு வந்திருந்தது. கடிதத்தைப் படித்துப் பார்த்தேன்.

அன்புள்ள பாலு.

உனக்கு நான் கடிதம் எழுதுவது வியப்பாக இருக்கலாம். அதுவும் உனக்குப் பக்கத்து மேஜையில் உட்கார்ந்து ஒரு வாரமாக வேலை செய்யும் நான் உன்னிடம் நேரில் சொல்லாமல் கடிதம் மூலமாக ஏன் எழுத வேண்டும்? நீ இந்தக் கம்பெனியில் வேலையில் இருக்கிறாய் என்

பது எனக்குத் தெரியாது. போன வாரம்தான் எனக்கு உன்னுடைய கம்பெனியில் வேலை ஆயிற்று. இங்கு வந்த அன்றுதான் உன்னைப் பார்த்தேன். நாமிருவரும் சேர்ந்து படித்தவர்கள் என்பது தெரிந்தது. பால்யத் தோழனாகிய என்னை நீ எவ்வளவோ மகிழ்ச்சியுடன் வரவேற்றாய். உன் வீட்டுக்கு அழைத்தாய். வேலை அதிகமாயிருந்ததால் உன்னுடன் வரவில்லை. அடுத்த வாரம் வருகிறேன் என்று சொன்னேன். என் மனத்தில் உள்ளதை உன்னிடம் சொல்லும் தைரியம் எனக்கில்லை. அதனால் கடிதம் மூலம் எழுதுகிறேன்.

நானும் நீயும் எஸ். எஸ். எல். ஸி. படித்ததும் பிரிந்து விட்டோம். இருவரும் மறுபடியும் ஒருவரை யொருவர் சந்திக்கச் சந்தர்ப்பமே ஏற்படவில்லை.

போன வாரம்தான் உன்னுடன் பேசினேன். என்னைப் பற்றிப் பொதுவாகச் சில விஷயங்களையும் உன்னிடம் சொன்னேன். ஆனால் ஒரு முக்கியமான சமாசாரத்தை மட்டும் சொல்லவில்லை. அதை இந்தக் கடிதத்தின் மூலம் சொல்கிறேன். என்னை மன்னித்து விடு.

ஏழு வருடங்களுக்கு முன்பு முதன் முதல் எனக்கு அந்தப் பாங்கியில் குமாஸ்தா வேலை ஆயிற்று.

பாங்கு மானேஜர் மிகவும் கடுமையானவர். எல்லாக் குமாஸ்தாக்களுக்குமே அவரைப் பிடிக்காது.

நான் வந்து மூன்று மாதங்கள் ஆயின. வேலையெல்லாம் அற்றுபடியாகி விட்டது. அந்தச் சமயத்தில் சில வாடிக்கைக் காரர்களின் சிநேகம் எனக்கு உண்டாகி விட்டது. அவர்கள் விரித்த வலையில் நான் விழுந்து விட்டேன்.

அதைப் பற்றியெல்லாம் உனக்கு விவரமாகச் சொல்லப் போவதில்லை.

வாடிக்கைக் காரர்களில் சிலர் சில நெளிவு சுளிவுகளை என்னிடம் சொல்லி அவற்றை நிவர்த்திக்க வேண்டினார்கள். அதன் மூலம் அவர்கள் லாபம் அடைந்ததுடன் எனக்கும் லாபத்தை உண்டாக்கினார்கள்.

முதலில் எனக்கு மிகவும் பயமாகத் தான் இருந்தது.

ஆனால் அவர்கள் எனக்குத் தைரியத்தைக் கொடுத்ததுடன், இது விஷயம் ஒருவருக்கும் தெரிய இடம் இல்லையென்றும் சொன்னார்கள்.

மேலும், எனக்குத் தினமும் ஏதாவது சம்பளத்தைத் தவிரக் கிடைத்ததும், உள்ளத்தில் பேராசை உண்டாகிப் பல விதமான ஊழல்களும் தகிடுதத்தங்களும் செய்யத் தூண்டியது.

மாதா மாதம் பாங்கியில் கொடுக்கும் உண்மையான சம்பளத்தைவிட நியாயமற்ற முறையில் சில வாடிக்கைக் காரர்கள் கொடுக்கும் தொகையிலேயே எனக்குக் கண் இருந்தது. அது என்னையும் அந்தக் குறிப்பிட்ட வாடிக்கைக் காரர்களையுமே சுற்றி உள்ள ரகசியம்.

இப்படி ஏழெட்டு மாத காலம் நடந்தது. முடிவில் அந்த ஆசையும், நியாயமற்ற சம்பாத்தியமும் நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தி விட்டன.

நீதி மன்றத்தில் என் மீது வழக்குப் பதிவாகி விட்டது.

என் தகப்பனார் ஓடோடியும் வந்தார். நல்ல வக்கீல் ஒருவரிடம் போய்ச் சொன்னார். என் மாமா கோர்ட் விவகாரத்தில் புலி என்று பெயர் வாங்கியவர். அவர் என்னிடம் தனியாகப் பேசினார்.


கடைசியில் நான் தப்ப வேண்டுமானால் ஒரு சமாசாரத்தை நீதிமன்றத்தில் சொன்னால்தான் தப்ப முடியும் என்று ஏற்பட்டது. ஆனால் அப்படிச் சொல்ல என் மனம் சிறிதும் விரும்பவில்லை. எப்படிச் சொல்வது? கண் அவிந்து போய் விடாதா?

எனக்குத் தண்டனை கிடைத்தாலும் கிடைக்கட்டும், ஒரு பெண் பாவத்தை நான் கட்டிக் கொள்ள மாட்டேன் என்று மறுத்துச் சொல்லி விட்டேன்.



என்னுடைய தாயாரிடம் போய் என் மாமா, ''உன் பிள்ளை சிறைபுகாமல் தப்பவேண்டுமானால் நான் சொல்கிறபடி கோர்ட்டில் சொன்னால்தான் முடியும். அவன் அதற்குச் சம்மதிக்கவில்லை. உன் பிள்ளை கம்பி எண்ணப் போவது நிச்சயம்'' என்றார்.

என் வயதான வியாதிக்காரத் தாயார், ''ராமு! தாயாரைக் கொன்ற பாபத்துக்கு ஆளாகாதே நீ மட்டும் மாமா சொன்ன படி சொல்லித் தப்



குன்னூர் சூரி அண்டு கம்பெனியைச் சார்ந்த ஸ்ரீ எஸ். பத்மநாபன், பி.காம். ஏ.வி.ஏ. அவர்களுக்கும் சௌபாக்கியவதி ஹேமலதாவுக்கும் சமீபத்தில் சென்னை தியாகராயநகரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களுக்கு ஏராள மான வாழ்த்துக்களும் பரிசுகளும் வந்தன. வாழ்க, பத்மநாபன்-ஹேமலதா!

பித்துக் கொள்ளாவிட்டால் நீ ஜெயிலுக்குப் போவதை என் கண்ணால் பார்க்க மனம் கேட்காது. நான் தற்கொலை செய்து கொள்வேன்'' என்றாள்.

எனக்கு மிகவும் இக்கட்டான நிலை ஏற்பட்டு விட்டது. ஒரு வார காலம் மனத்தில் பெரிய சுமை ஏறியது.

கடைசியில் நீதி மன்றத்தில் என்னை விசாரித்தபோது, ''பாங்கு மானேஜருக்கும் எனக்கும் விரோதம். அவருடைய விவாகமாகாத பெண்ணை நான் காதலித்தேன். அதை அவர் விரும்பவில்லை. தன் பெண்ணையும் என்னையும் எச்சரித்தார். ஆனால் நாங்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிய விரும்பவில்லை. எப்படியாவது என்னைக் கெடுத்துச் சிறைக்கு அனுப்பிவிட அவர் திட்டம் போட்டார். அவர் பாங்கியிலேயே குடி இருப்பதால் இரவு வேளையில் என் பீரோவைத்திறந்து என் தஸ்தாவேஜிகளில் சில திருத்தங்கள் செய்து என்னை மாட்டி வைத்து விட்டார். நான் குற்றவாளி இல்லை'' என்று வாக்குமூலம் கொடுத்தேன்.

ஆனால் கோர்ட்டார் அதை நம்பவில்லை. ஒருவருடக் கடுங்காவல்தண்டனை எனக்குக் கிடைத்தது. மகிழ்ச்சியுடன் அதை ஏற்றுக் கொண்டேன்.

தண்டனை முடிந்து வெளியே வந்தேன்.

பாங்கு மானேஜர் அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து கொண்டதாகவும், அவர் பெண்ணை ஒருவரும் கலியாணம் செய்து கொள்ளச் சம்மதிக்கவில்லை என்றும் தெரிந்து கொண்டேன்.

அவளைத் தேடிக் கண்டு பிடித்து என் நிலையைச் சொன்னால்தான் மனத்துக்குச் சாந்தி கிடைக்கும் என்று ஏற்பட்டது.

ஒரு தடவை என் நண்பர் ஒருவர் என்னைப் பார்த்து, ''அநியாயமாக ஒரு கன்னிப் பெண்ணின் வாழ்வைக் குட்டிச் சுவராக்கி விட்டாயே! அவளுக்குக் கலியாணமே ஆகவில்லை. ஒரு வேளை அவள் தற்கொலை செய்து கொண்டிருந்தால், அந்தப் பாவம் உன்னைச் சும்மா விடாது'' என்று சொன்னார்.

பித்துப் பிடித்தவனாகி விட்டேன். வருடங்கள் ஐந்து ஆகிவிட்டன. ஓரிடமும் வேலைக்குப் போகவில்லை. சிறை சென்றவனை யாராவது வேலைக்கு வைத்துக் கொள்வார்களா!

இரண்டு வாரங்களுக்கு முன்பு உன் கம்பெனிக்கு விண்ணப்பம் போட்டேன். அதிர்ஷ்டவசமாக வேலை கிடைத்தது.

ஒரு வாரம் முன்பு அவளை எதிர்பாராத விதமாய்ப் பார்த்து விட்டேன். ஓடிப்போய் மன்னிப்பு கேட்க நினைத்தேன். ஆனால் அவள் என்னைக் கண்டு நடுநடுங்கிவிட்டாள்என்பது தெரிந்தது. அவள் வீடு தேடிப்போய் இப்போது பழைய சம்பவங்களைக் கிளறினால், அவள் கணவன் சந்தேகப்பட்டு அதனால் அவளுடைய வாழ்க்கை மறுபடியும் குட்டிச் சுவர் ஆகக் கூடாது அல்லவா?

ஆனால் எப்படியாவது அவள் மன்னிப்பைப் பெறாவிட்டால் மண்டை வெடித்துப் போய்விடும்போல் இருந்தது.

ஆனால் அவள் வேறு யாருடைய மனைவியும் இல்லை, உன்னுடையவள் என்று இப்பொழுதுதான் தெரிந்தது.

இதோ இந்தக் கடிதத்தின் மூலம் உன்னுடைய மன்னிப்பையும் அவள் மன்னிப்பையும் கோருகிறேன்.

என் வேலையை ராஜினாமாச் செய்து விட்டேன். என்னை மன்னித்து விடு.

ராமு

கடிதத்தைப் படித்து முடித்து விட்டேன். கண்களில் தாரை தாரையாக நீர் பெருகியது. என் கணவர் வந்தது கூடத் தெரியவில்லை.

''வாஸந்தி! கடிதத்தைப் படித்துப் பார்த்தாயா? பாவம். ராமுவை மன்னித்து விடு'' என்றார். அவர் கண்களிலும் நீர் பெருகியது.

''இவ்வளவு காலமாக உங்களிடம் உண்மையைச் சொல்லாமல் இருந்ததற்கு மன்னிக்க வேண்டும்'' என்றேன்.

''வாஸந்தி! உன் மனத்துக்கு இப்பொழுதாவது சாந்தி பிறந்ததா?'' என்று கேட்டார் அவர். ''ஆமாம்! என்னுடைய மனசுக்கு இப்பொழுது தான் சாந்தி உண்டாயிற்று'' என்றேன்.



ரசிகர்கள் விரும்பும் ரம்யமான ஆடைகளுக்கு

ஸ்ரீ நிவாஸ்

காட்டன் மில்ஸ் லிட்.
ஸ்ரீ நிவாஸ் ஹவுஸ்
வாட்பி ரோடு, பம்பாய்-1

SN-R/5

சித்தர் கோரோஜனை மாத்திரை



குழந்தைகளுக்கு உண்டாகும் சளி இருமல், கபம், தொண்டைக் கட்டு, சீதளம், சுரம், மந்த வாய்வு இவைகளுக்குக் கைகண்டது

40 மாத்திரைகள் கொண்ட புட்டி 1க்கு விலை அணா 12

★

தயாரிப்பவர்கள் :

ஆர். எஸ். பதி & கோ.

(ஸ்தாபிதம் : 1909)

தபால் பெட்டி நெ. 99, மதுரை

சென்னையில் கிடைக்குமிடம்

ஸ்கூல் வியூ ஸ்டோர்ஸ், 96, தம்பு செட்டித் தெரு ● எம். எஸ். ஸ்டோர்ஸ் 1/17H, மவுண்ட் ரோடு ● அப்பா & கோ., நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு

பாக்கியசாலி

எம்.கே.சங்கரன்

அந்தஸ்துக்கு மீறிய பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்வது எவ்வளவு தவறு என்பது வின்சென்ட் விஷயத்தில் தெளிவாகப் புலனாயிற்று. பாவம்! அவன் தாமரை இலைத் தண்ணீர் போல் அவன் மட்டும் தனியாக இருந்தான். விசாலமான அந்த அறையில் ஒரு கட்டிலில் அவன் படுத்திருந்தான். அவனுக்குக் காலையிலிருந்து பலமான தலைவலி! இப்பொழுது உடல் அனலாகக் கொதித்தது. மாலை வரையில் இதை ஒருவரிடமும் தெரிவிக்காமல் பல்லைக் கடித்துச் சகித்துக் கொண்டான். அந்த வீட்டில் அவன் யாரிடம் தன் நிலைமையைக் கூற முடியும்?

மாலையில் வில்லியும், அவள் தாயாரும் சினிமாவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர். இனியும் சும்மா இருந்தால் பயனில்லை என்பதை உணர்ந்த வின்சென்ட் மெதுவாக வில்லியிடம் சென்று, "வில்லி! இன்று நீ சினிமாவுக்குப் போக வேண்டாம்" என்று கெஞ்சிய குரலில் கேட்டான்.

"ஏன்?" என்றாள் வில்லி.

"எனக்கு உடம்பு நன்றாக இல்லை. ஒரே தலைவலி!" என்றான் வின்சென்ட் முகத்தைச் சுளித்துக் கொண்டு.

வில்லிக்குக் கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது. எரித்து விடுவது போல் அவனைப் பார்த்தாள். எரிச்சலுடன் அங்குள்ள நாற்காலியில் தொப்பென்று விழுந்தாள். வின்சென்ட் அயர்ந்து போய் விட்டான்.

இந்தச் சமயம் வில்லியின் தாயார் வந்தாள்.

"வில்லி, இன்னும் புறப்படவில்லையா? நேரமாகிவிட்டது!" என்றாள்.

"நான் வரவில்லை, அம்மா! இங்கே நான் புறப்படும்போதுதான் மண்டைக் குத்தும் தலைவலியும் வந்துவிடும்" என்றாள் வில்லி அளவற்ற எரிச்சலுடன்.

இதற்கு மேல் மாமியார் என்ன ஆர்ப்பாட்டம் நடத்தி விடுவாளோ என்ற பயம் வின்சென்டுக்கு. எனவே அவனே முந்திக் கொண்டு விட்டான்.

"நீ போக வேண்டுமானால் போ, வில்லி! நான் தடுக்கவில்லை" என்றான்.

பாவம்! அவனை அந்த நிலையில் தனியாக வைத்து விட்டு உல்லாசமாகச் சினிமாவுக்குச் சென்று விட்டாள் வில்லி.

இரவு எட்டு மணிக்கெல்லாம் அவனுக்கு ஜுரம் அதிகரித்து விட்டது. தலை வரையில் போர்வையை இழுத்து மூடிக் கொண்டு வேதனை தாளாமல் முனகினான்.

திடீரென்று அவன் உடலில் ஏதோ ஊர்வது போல் உணர்வெடுத்தது. போர்வையை நீக்கிவிட்டுத் திரும்பினான். மிருதுவான கரம் ஒன்று அவன் நெற்றியைப் பிடித்துக் கொண்டிருந்தது.

"வில்லி, வந்து விட்டாயா?" என்று எழுந்திருக்க முயன்றான்.

"படுத்துக் கொள்ளுங்கள். உடம்பை அலட்டிக் கொள்ளக் கூடாது" என்றாள் அவள்.

"என்னை இப்படியே விட்டுப் போய் விட்டாயே என்று எனக்கு ரொம்ப வருத்தம்! இருந்தாலும் கணவன் பாசம் உன்னைச் சும்மா விடுமா?" என்றான் கனிந்த குரலில்.

அவள் அவனைப் படுக்கச் செய்து விட்டு, ஏதோ மருந்துகள் கொண்டு வந்து அவன் தலையில் தடவிக் கொடுக்கவும் செய்தாள்.

அவனுக்கு ஒரே ஆச்சரியம்! வில்லிக்கு இந்த அக்கறை எங்கிருந்து வந்தது என்று வியந்தான். அந்த இன்ப உணர்வில் அப்படியே தூங்கிப் போய்விட்டான்.

காலையில் எழுந்ததும் வில்லியைப் பார்த்தான். அவள் நன்றாய்த் தூங்கிக் கொண்டிருந்தாள். 'பாவம்! தனக்காக எவ்வளவு நேரம் விழித்திருந்தாளோ! வில்லி எழுந்திருக்கும் வரை அவள் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தான். அவள் எழுந்ததும் முகத்தைக் கழுவிக் கொள்ளப் போனாள்.

"வில்லி!" என்று அழைத்தான் வின்சென்ட் அன்போடு.

"ஏன்?" என்று அலட்சியத்துடன் கேட்டுக் கொண்டே அவன் எதிரில் வந்தாள் வில்லி.

"நேற்று எவ்வளவு அக்கறையோடு என்னைக் கவனித்தாய்! இன்று ஏன் இந்த அலட்சியம்!"

"நான் சினிமாவுக்குப் போனதைக் குத்தாமல் குத்திக் காட்டுகிறீர்களோ?" என்றாள் வில்லி வெடுக்கென்று.

"நேற்று நீ எனக்கு மருந்து அரைத்துப் பூசவில்லையா?" என்றான் வின்சென்ட்.

"ஏதாவது சொப்பனம் கண்டீர்களா?" என்று பரிகாசத்துடன் கூறிக் கொண்டே அவள் வேகமாகச் சென்று விட்டாள்.

வின்சென்டுக்கு ஒன்றும் புரியவில்லை. முன் தினம் அவனுக்குச் சிசுருஷை செய்தது வில்லி இல்லையா? அப்படியானால் அவள் யார்?— அவன் மனம் எண்ண அலைகளில் பாய்ந்தது.



பல் விளக்கிக் கொண்டு கிணற்றடிக்கு வந்தான் வின்சென்ட். அங்கே பாத்திரம் விளக்கிக் கொண்டிருந்த ஒரு பெண்ணைப் பார்த்துத் திகைத்துப் போய், "கிளாரா!" என்று அலறி விட்டான்.

அவள் அவனைப் பார்த்ததும் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

வின்சென்ட் அவள் அருகில் வந்தான். "கிளாரா, ஏன் பேசமாட்டேன் என்கிறாய்? இங்கு எங்கு வந்தாய்?" என்று கேட்டான்.

"நான் இந்த வீட்டு வேலைக்காரி! நேற்றுத் தான் வேலைக்குச் சேர்ந்தேன்" என்றாள் கிளாரா அமைதியான குரலில்.

"வேலைக்காரியா?" — வின்சென்ட் தலையைப் பிடித்துக் கொண்டான். "கிளாரா! உன்னை நான் மோசம் செய்து விட்டேன்!" என்று அரற்றினான்.

"இப்பொழுது அதைப் பற்றிப் பேசிப் பயன் என்ன?"

"கிளாரா, உண்மையைச் சொல். நேற்று என் தலையில் மருந்து அரைத்துப் பூசியவள் நீதானே?" என்றுசந்தேகத்தோடுகேட்டான்.

"ஆமாம். தனியாகக் கிடந்து தவித்துக் கொண்டிருந்தீர்கள். கண்ணால் பார்த்ததும் சும்மா இருக்க முடியவில்லை."

"கிளாரா, உன் அன்பை நான் புரிந்து கொள்ளாமல் போய் விட்டேன்."

"இப்படி யெல்லாம் பேசாதீர்கள்! எந்த அன்புக்கும் கட்டுப்பட்டு நான் இந்த உதவியைச் செய்யவில்லை. உங்கள் மீது எனக்கு என்ன உரிமை? மேலும்...." இந்த வார்த்தையை முடிக்கவில்லை. "கிளாரா!" என்று வில்லி குரல் கொடுக்கவே சட்டென்று எழுந்து ஓடி விட்டாள் கிளாரா.

வின்சென்ட் அப்படியே தன் அறைக்கு வந்து தொப்பென்று நாற்காலியில் விழுந்தான். அவன் எண்ணம் கடந்த நாட்களைக் கிளற ஆரம்பித்து விட்டது.

★

திருச்சியில் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்று விட்ட வின்சென்டின் தந்தை தன் குடும்பத்துடன் சொந்த ஊராகிய நாசரேத் வந்து சேர்ந்தார். சிறு வயதிலிருந்தே திருச்சியில் பழகிவிட்ட வின்சென்டுக்கு அந்த ஊரின் அமைதி என்னவோ போலிருந்தது.

நாசரேத்துக்குத் தெற்குப் பகுதியும் கிழக்குப் பகுதியும் செம்மணல் நிறைந்த காடு. எங்கு நோக்கினும் செக்கச் செவேலென்று சிவந்த மணற்பரப்பும், உயர்ந்த மேடுகளும், தாழ்ந்த பள்ளத்தாக்குகளும், கும்பல் கும்பலாக விராலிச் செடிகளும், தோப்புகளுமாகக் கண்கொள்ளாத காட்சியாக இருக்கும்.

வின்சென்டுக்கு அந்த இடம்தான் பொழுது போக்கு. சாயந்திரமாகி விட்டால் அந்தக் காட்டில் ஒரு மைல் தூரம்வரை சென்று உலாவி விட்டுத் திரும்புவான்.

அன்று அவன் சற்றுத் தூரம் தள்ளியே சென்று விட்டான். போகப் போகக் கண் நிறைந்த காட்சியாக இருந்ததால் அதிக தூரம் வந்து விட்டதை அவன் உணரவில்லை. சிறிது நேரம் வந்ததும் அவனுக்கு ஒரே திகைப்பாகி விட்டது. அவன் வந்த வழி மாதிரி தெரியவில்லை. எந்தப் பக்கம் செல்வது என்பதும் அவனுக்குப் புலப்படவில்லை. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு ஒரு திசையை நோக்கிச் சென்றான். போகப் போக அடர்ந்த காடுகளாக வந்து கொண்டிருந்தன. குறுக்காக எத்தனையோ ஒற்றையடிப் பாதைகள்! எந்தப் பாதையில் செல்வது? ஒன்றும் தோன்றாமல் ஒரு பாதையைப் பின்பற்றி வேகமாக நடக்க ஆரம்பித்தான். அந்த அடர்ந்த காட்டை விட்டுப் பரந்த வெளியான ஒரு இடத்துக்கு வந்து சேர்ந்தான். இருள் படரத் தொடங்கி விட்டது. எங்கும் ஒரே நிர்மானுஷ்யம்! சிறிது தூரம் வந்ததும் ஒரு மனித உருவம் தூரத்தில் செல்வதை அவன் கண்கள் கண்டு விட்டன. அவ்வளவுதான்! திசை தெரியாமல் தவித்த கப்பல் மாலுமிக்குக் கலங்கரை விளக்கம் தென்பட்டது போல அவன் மனம் உவகை கொண்டது. "ஐயா!" என்று அழைத்துக் கொண்டே அந்த மனிதனை நோக்கி ஓடினான். சத்தம் கேட்டதும் அம்மனிதன் நின்று விட்டான். வின்சென்ட் அருகில் சென்று, "ஐயா, நாசரேத் இங்கிருந்து எவ்வளவு தூரம்?" என்று கேட்டான்.

அவன் வின்சென்டை ஏற இறங்கப் பார்த்தான். "ஏழு மைல் தூரம்" என்றான்.

பகீரென்றது வின்சென்டுக்கு. அவனுடைய நிலைமையைப் புரிந்து கொண்ட அம்மனிதன் "நீங்கள் இந்தத் தேரிக் காட்டில் வழி தவறி வந்து விட்டீர்களா?" என்று கேட்டான்.

வின்சென்ட் நிலைமை முழுவதும் சொன்னான். அவன் மிகவும் அனுதாபப்பட்டான். "வழி தெரிந்தவர்கள்கூட இந்தக் காட்டில் திணறிப் போய் விடுவார்களே! நீங்கள் இப்படித் தனியாக வரலாமா?"

"என்னுடன் வாருங்கள். இன்னும் இரண்டு மைல் போனால் என் ஊர் வந்துவிடும். திருச்செந்தூரிலிருந்து நாசரேத் போகும் பஸ் ஏழரை மணிக்கு அந்த வழியாகப் போகிறது. வேகமாக நடந்தால் நீங்கள் பஸ்ஸைப் பிடித்து விடலாம்."

வின்சென்டுக்குச் சற்று இதமாக இருந்தது. "உங்கள் பெயர் என்ன?" என்று கேட்டான்.

"தங்கராஜ்" என்றான் அவன்.

இருவரும் அதி வேகமாக நடந்தனர். சற்று நேரத்துக்கெல்லாம் அந்தச் சிறிய கிராமத்தை அடைந்தனர். என்ன ஏமாற்றம்! அவன் நம்பி வந்த பஸ் போய் விட்டது! அதுதான் கடைசி பஸ்! வின்சென்ட் பரிதவித்தான். "வாடகை வண்டி ஏதாவது கிடைக்குமா? எவ்வளவு ரூபாய் வேண்டுமானாலும் கொடுத்து விடுகிறேன்" என்றான் அவன்.

"ரோட்டுப் பாதை ரொம்பச் சுற்று! வண்டிக்காரன் ஒருவனும் வரமாட்டான். பேசாமல் என் வீட்டில் தங்கி விட்டுக் காலையில் போங்கள். அடிக்கடி பஸ் இருக்கிறது" என்றான் தங்கராஜ். வேறு வழியின்றிச் சம்மதித்தான் வின்சென்ட். தங்கராஜ் அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். குடிசை போன்ற அந்த வீட்டை அடைந்ததும், "கிளாரா!" என்று அழைத்தான் தங்கராஜ்.

பதினேழு வயது நிறைந்த ஒரு பெண் "என்ன அண்ணா!" என்று குரல் கொடுத்தவாறு விரைவாக ஓடி வந்தாள்.


எக்லா
தென் இந்தியா
விரும்பும் டால்க்!
தெம்பூட்ட, மணமளிக்க
தனிப்பட்ட தயாரிப்பு
இந்த பரத நாட்டியக்காரியைப்போல்,
நீங்களும் தென்னாட்டின் அதி உஷ்ண
கால நிலையிலும்கூட குளுமையும் இத
மும் பெறலாம். மனோரம்மிய மணம்
பெற்ற எக்லா டால்க் உபயோகி
த்தால் குளுமையான நுண்ணிய
சுகந்தத்திற்கு இந்த ஒப்புயர்வற்ற டால்க்கை
அடிக்கடி தாராளமாக உபயோகியுங்கள்
மெல்லிய எக்லா ஒரு லட்சிய
முகப்பவுடரும் கூட
கால்கேட்
எக்லா
டால்க் பவுடர்
ÉCLAT
TALC POWDER
COLGATE

புதிய கேவர்ட்

GEVAERT

போட்டோக் கலைப் போட்டி

விஷயம்

இந்தியர்களின் வாழ்க்கையும், விதங்களும்



ரூ. 4000க்கு மேல் பரிசுகள்

முதல் பரிசு	ரொக்கம்	ரூ.	1,000
2வது பரிசு	,,	ரூ.	750
3வது பரிசு	,,	ரூ.	500
4வது பரிசு	,,	ரூ.	250

5லிருந்து 9 வரை ரூ. 100 பெறுமான முள்ள APL போட்டோ சாமான்கள் பெறக்கூடிய பரிசு கூபன்கள்.

10லிருந்து 19 வரை ரூ. 50 பெறுமான முள்ள APL போட்டோ சாமான்கள் பெறக்கூடிய பரிசு கூபன்கள்.

இத்துடன் டீலர்களுக்கு ரூபாய் 650/–க்கு பரிசுகள்

முடிவு தேதி 31 ஜனவரி 1957

இம் மாபெரும் இந்தியப் பிரதேசத்தில் கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் வடக்கிலும் பற்பல விதமான மனிதர்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய நடை, உடை, அலங்கார அணிகள், பழக்க வழக்கங்கள் மற்றும் முக பாவங்களும் வெவ்வேறானவை. இந்தியாவின் மனிதர்களையும், அவர்களுடைய வாழ்க்கையையும், இந்தியாவின் மாய அழகையும் போட்டோவில் கவர்ந்து இந்த கேவர்ட் போட்டோக் கலைப் போட்டியில் ஒரு கணிசமான பரிசைப் பெறுங்கள். இந்தப் போட்டிக்கு நீங்கள் எத்தனை போட்டோ வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு போட்டோவும் கேவர்ட் பிலிமில் எடுத்து கேவர்ட் பேப்பரில் 'பிரிண்ட்' போட்டிருக்க வேண்டும். குறைந்த அளவு சைஸ் அரை பிளேட்—அதாவது $4\frac{3}{4}'' \times 6\frac{1}{2}''$. ஒவ்வொரு போட்டோவுடனும் கேவர்ட் பிலிம் காலி அட்டைப் பெட்டியைச் சேர்த்து அனுப்ப வேண்டும். இந்தியர்களின் வாழ்க்கையையும், விதங்களையும் மட்டுமே படமெடுத்து அனுப்ப வேண்டும்.

இப்போட்டியின் முழு விவரங்கள் வேண்டுவோர் உங்கள் அருகாமையிலிருக்கும் கேவர்ட் வியாபாரிகளிடமோ அல்லது நேரிடையாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

ALLIED PHOTOGRAPHICS PRIVATE LIMITED

அலைட் போட்டோகிராபிக்ஸ் பிரைவேட் லிமிடெட்

(விளம்பர இலாகா) கஸ்தூரி பில்டிங், ஜாம்ஷெட்ஜி டாடா ரோடு, பம்பாய்-1

இப்பெரும் போட்டியைப்பற்றி மேற்கொண்டு விவரங்களை அறிய பிரதி வியாழன் இரவு 8 மணிக்கு இலங்கை வானொலியில் (41 மீட்டர் பாண்டில்) போட்டோ-மேளா (PHOTO-MELA) என்ற நிகழ்ச்சியைக் கேளுங்கள்

"ஐயாவுக்கு நாசரேத். தேரிக் காட்டில் வழி தவறி வந்து விட்டார். இன்றைக்கு நம் வீட்டில் தங்குகிறார். சீக்கிரமாக உணவு தயார் செய்" என்று உத்தரவிட்டான். பிறகு அவன் வின்சென்டை உட்காரச் சொன்னான். பனை ஓலையால் வேயப்பட்ட அந்தக் குடிசையைப் பார்த்துக்கொண்டே அங்கிருந்த நார்க் கட்டிலில் அமர்ந்தான் வின்சென்ட்.

ஒளாரா அன்புடன் பரிமாறிய ஆகாரத்தை மிக்க ஆவலுடன் அருந்தினான். களைப்பாக இருந்ததால் உணவு அருந்தியதும் படுத்துக் கொண்டான். படுத்தவுடனேயே அவன் நன்றாகத் தூங்கி விட்டான்.

வின்சென்ட் காலையில் எழுந்த சமயம் குடிசையில் ஒருவரையும் காணவில்லை. எங்கே போயிருப்பார்கள் என்று சிந்தித்தவாறு தெருத் திண்ணையில் அமர்ந்தான்.

சிறிது நேரத்தில் ஒளாரா குளித்துவிட்டு ஈரப் புடவையுடன் இடுப்பில் குடத்தைச் சுமந்து கொண்டு வந்தாள். அவளுடைய பிரமாதமான அழகைக் கண்டு சொக்கிப் போய் விட்டான் வின்சென்ட்.

"அண்ணா எங்கே?" என்று அவளை நோக்கிக் கேட்டான் அவன்.

"பக்கத்துக் கிராமத்துக்குப் போயிருக்கிறார்" என்றாள்.

"நான் போய் வருகிறேன். அண்ணாவிடம் சொல்லி விடுங்கள்" என்றான்.

"அண்ணா வந்ததும் போங்களேன். கொஞ்ச நேரத்துக்குள் வந்து விடுவார்."

"இல்லை, வீட்டில் என்னைத் தேடுவார்கள். நான் அவசியம் போயாக வேண்டும்."

"அப்படியானால் சாப்பிட்டு விட்டாவது போங்கள். இட்டிலி தயாராகி விட்டது."

அவள் அழைப்பை அவனால் மறுக்க முடியவில்லை. அவள் மிகுந்த அன்போடு பரிமாறிய ஆகாரத்தைச் சாப்பிட்டு விட்டு அவளிடம் விடைபெற்றுக் கொண்டான்.

அதற்குப் பிறகு வின்சென்ட் அடிக்கடி அந்தக் கிராமத்துக்குச் சென்றான். தங்கராஜுவும் ஒளாராவும் அவனுக்கு விழுந்து விழுந்து உபசாரம் செய்தனர்.

தங்கராஜுவுக்குத் தன் தங்கை ஒளாராவைப்பற்றியே கவலை. அவளுக்கு நல்ல இடம் கிடைத்துக் கல்யாணம் ஆகி விட்டால் அவன் கடமைமுடிந்து விடுமல்லவா? வின்சென்ட் வரும் சமயங்களில் அவன் இதைப் பற்றியே சொல்லிக் கொண்டிருந்தான். வின்சென்ட் மூலமாக ஒரு எளிய வரனாவது குதிர்ந்து விட்டால், தன் கடமை தீர்ந்து விடும் என்று எண்ணினான் தங்கராஜ்.

வின்சென்ட் அடிக்கடி அவர்கள் வீட்டுக்கு வருகிறானென்றால் அவர்கள் மீதுள்ள நன்றி விசுவாசம் மட்டுமல்ல; ஒளாராவிடம் இருந்த காந்த சக்தியுந்தான். ஒளாராவின் மேல் அவன் அளவற்ற காதலும், பிரியமும் கொண்டிருந்தான்.


அன்று தங்கராஜ் பேசிக் கொண்டிருக்கும் போது, "வின்சென்ட், என் தங்கைக்குத் தகுந்த மாப்பிள்ளையைத் தாங்கள்தான் தேடித் தர வேண்டும்" என்றான்.

இதுவரையில் வின்சென்டின் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்த உணர்ச்சி பொங்கி விட்டது. தங்கராஜின் கைகளைப் பற்றிக் கொண்டு, "அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டாம். ஒளாராவை நானே கல்யாணம் செய்து கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன்" என்று கூறினான்.

தங்கராஜுவுக்குத் தன்னையே நம்ப முடியவில்லை. தன் அருமைத் தங்கைக்கு இவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் இருக்கிறதா எனப் பூரித்துப் போய் விட்டான்.

நினைப்பதெல்லாம் நடந்து விடுகிறதா? வின்சென்ட் ஊர் திரும்பிய சமயம் வீட்டில் புதிய ஆட்கள் வந்திருந்தனர். ஒரு நொடியில்





சென்னைப் பிரதம மாகாண மாஜிஸ்திரேட் சே. அ. அய்யாசாமி செட்டியார் அவர்களின் குமாரத்தி திருநிறைச் செல்வி ஆண்டாளுக்கும், மணச்சநல்லூர் ஸ்ரீ ஏ. டி. எம். ராமசாமி செட்டியாரின் புத்திரன் திருநிறைச்செல்வன் ராஜ கோபாலனுக்கும் சமீபத்தில் சென்னை எழும்பூரில் சிறப்பாகத் திருமணம் நடந்தது. திருமணத்துக்கு ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் விஜயம் செய்து மணமக்களுக்கு ஆசி கூறினார்கள். அன்று மாலை நிகழ்ந்த இசை நிகழ்ச்சியின்போது மந்திரிகளும், நீதிபதிகளும், சென்னை நகரப் பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வாழ்க மணமக்கள் !

அவனுக்கு விஷயம் விளங்கி விட்டது. அவன் அப்பா அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்த பாளையங்கோட்டைப் பெண் வீட்டார்தான் வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்தான்.

இரவு அதிக நேரம் அவர்கள் கல்யாண விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். மறுநாள் வின்சென்டைப் பெண் பார்க்க அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது. வின்சென்டுக்கு ஒப்புக் கொள்ளவும் முடியவில்லை; வேண்டாம் என்று மறுக்கவும் துணிவில்லை.

மறுநாள், வந்தவர்களுடன் பாளையங் கோட்டைக்குச் சென்றான். பெண் வீட்டில் காலை வைத்ததும் அங்கு நின்ற தங்கச் சிலையைக் கண்டு மெய்மறந்து நின்று விட்டான். அவள்தான் அவன் பார்க்க வந்திருக்கும் பெண் என்று பக்கத்தில் நின்றவர் கூறினார். "இவ்வளவு அழகியா !" என்று வியந்தது அவன் இதயம். அந்த இன்ப போதையில் ளாரா என்ற ஒரு பெண் இருப்பதை அவன் அடியோடு மறந்து விட்டான்.

பிறகு சொல்வானேன்? அந்த அழகி லில்லிக்கும் வின்சென்டுக்கும் அதி விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது.

லில்லியின் தகப்பனார் பெரிய பணக்காரர். லில்லி அவருக்கு ஒரே பெண். எனவே லில்லியை வின்சென்டுடன் அனுப்ப அவர் விரும்பவில்லை. லில்லியின் அழகில் மதிமயங்கிக் கிடந்த வின்சென்டால் அதை மறுக்க முடியவில்லை. மாமனார் வீட்டையே தஞ்சமடைந்தான். ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் தானே? அந்தக் காலம் கடந்த பின் தான் வின்சென்டுக்குத் தன் நிலை தெரிந்தது. லில்லி தனக்கு மனைவியா, அல்லது எஜமானியா என்றுகூட அவனுக்குச் சந்தேகமாகிவிட்டது. ஆம்! லில்லி அவ்வளவு அதிகாரத்தை அவனிடம் செலுத்தினாள்.

இவை அனைத்தும் நினைவுத் திரையில் கண்ட வின்சென்ட் தன்னையறியாமல் "ளாரா" என்று முனகினான். ளாராவிடம் பேச வேண்டும், மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று அவன் துடித்தான்.

ஆனால் ளாராவோ தினமும் வருகிறாள். அவள் தன் வேலைகளை முடித்து விட்டுச் சென்று விடுகிறாள். அவளிடம் பேசவே அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அன்று கடை வீதியில் வந்து கொண்டிருந்த வின்சென்ட் ளாரா கையில் ஒரு பாட்டிலை வைத்துக் கொண்டு வேகமாகப் போவதைக் கண்டான். அவளிடம் பேச இதைவிட வேறு சந்தர்ப்பம் கிடைக்காது. ளாரா சற்றுத் தள்ளிப் போய்க் கொண்டிருந்தாள். அந்த வீதியில் அவளைச் சத்தமிட்டு அழைக்க அவன் கௌரவம் இடம் கொடுக்கவில்லை. அவளைத் தொடர்ந்து நடந்தான். ளாரா குடிசை போன்ற ஒரு வீட்டுக்குள் சென்றாள். வின்சென்ட் அந்த வீட்டின் பக்கம் வந்து, உள்ளே போகலாமா, வேண்டாமா என்று யோசித்தான். திறந்திருந்த அந்த வீட்டு ஜன்னல் வழியாக உள்ளே நடப்பது அவன் கண்களுக்குத் தெரிந்தது.

யாரோ ஒரு புதிய ஆள் எலும்பும் தோலுமாய் ஒரு கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருந்தான். ளாரா ஒரு தம்ளரில் மருந்தை எடுத்து அவன் வாயில் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவன் யார்? ளாராவின் கணவனாக இருக்கலாமோ? அப்படியானால் ளாராவுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா? அவன் இதயத்தைப் பிழிவது போலிருந்தது. தன் உரிமையை யாரோ பறித்து விட்டது போல் அவன் மிகவும் சிரமப் பட்டான். அவன் உள்ளத்தில் பதுங்கிக் கிடந்த காதல் கொந்தளித்துக் கிளம்பியது.

"ளாரா! என்னால் நீ ரொம்பவும் கஷ்டப் பட்டு விட்டாய். இனி நீ வேலைக்குப் போக வேண்டாம். எனக்குக் குணமாகிவிட்டது. நான் வேலை செய்ய முடியும்" என்றான் ளாராவின் கணவன்.

"வேண்டவே வேண்டாம். இன்னும் ஒரு மாதத்துக்கு நீங்கள் வேலை செய்வதைப் பற்றியே நினைக்கக் கூடாது. உங்களைக் கவனிப்பதை விட எனக்கு வேறு வேலையே கிடையாது" என்று திட நம்பிக்கையுடன் கூறினாள் ளாரா.

"உன்னைப் போல ஒரு உத்தம மனைவியை இந்த உலகத்திலேயே நான் கண்டதில்லை. உன்னை அடைந்த நான் பெரிய பாக்கிய சாலி" என்று உணர்ச்சியுடன் கூறி அவன் ளாராவின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

"ஆம் உண்மை! அவன் பாக்கியசாலியே தான்!" என்றது வெளியில் நின்ற வின்சென்டின் வாய். அவன் கால்கள் வந்த வழியை நோக்கித் திரும்பி விட்டன.

கால்கேட் குளோரோபில்*

ஈறுகளை பலப்படுத்துகிறது

வைத்திய சோதனை நிரூபிக்கிறது!



ஈறுகளைப் பலப்படுத்து கிறது!

வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது!

சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது!

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை வழக்கமாகத் தேய்ப்பதால், குளோரோபில் மூலம் அது ஈறுகளைப் பலப்படுத்துகிறது.

வேறு சாதாரண பற்பசையை விட மிகமிகத் தீவிரமாக வாய்நாற்றத்தை கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஒழிக்கிறது என்பது ருசுவான உண்மை.

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொருமுறையும், சாப்பிட்டவுடன் தேய்ப்பதால் பல் எனாமலை அரிக்கும் நாச அமிலங்களும், அவற்றை விளைவிக்கும் கிருமிகளும் குறைகின்றன!

வேறு எந்த பற்பசையிலும் இதைவிட வீரியகுளோரோபில்

குழந்தைகள் விரும்பும் மதுரமான சுவை. மதுரமான இனிய சுவையுள்ள கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை குழந்தைகள்கூட விரும்புவார்கள்.



குளோரோபில் டூத்பேஸ்டின் பூரண நன்மைகளைத்தரும் விசேஷ கால்கேட் சூத்திரம்!

* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.

CTPA/G/5



அறியாவூர்க் கதை

அறியாவூரில் எலி உபத்திரவம் அதிகமாகி விட்டது. ஊரார் ஜமீன்தாரிடம் சொல்லிக் கொண்டார்கள். அவர் பூனையூருக்குப் போய், பூனையாரை வேண்டிக்கொண்டார். அவர் அங்கே சந்நியாசியாக இருந்தார்.

"தேசிகரே! எங்கள் சிறு கிராமத்தில் தாங்கள் கொஞ்ச நாட்கள் முகாம் போட்டால் நாம் கடமைப்பட்டிருப்போம்" என்று கேட்டுக் கொண்டார். அதன் பேரில் பூனைசுவாமி "நமக்கு இப்போது எலிகள் பேரில் கருத்தில்லை. நாம் சிவ பூஜையில் ஈடுபட்டிருக்கிறோம்" என்று சொன்னார்.

"சாதுர்மாஸ விரதம் அங்கேயே நடத்தலாம். தயை பண்ணுங்கள்" என்றார் ஜமீன்தார். அதன் பேரில் பூனைசுவாமி ஒப்புக்கொண்டார்.

பகல் எல்லாம் உபந்நியாசக் கூட்டம். ஏராளமான ஜனங்கள், ஆண், பெண், குழந்தைகள் ஏராளமாக வந்து கூடுவார்கள் பூனை சுவாமியின் பிரசங்கங்கள் மிக உருக்கமாக இருந்தன.

"உங்கள் கிராமத்தில் தானியசரக்குக் குறைவில்லை. காய்கறி வகைகள் தோட்டங்களில் ஏராளமாக விளைகின்றன. உங்களுடைய பசுக்கள் பாலும், தயிரும் வெண்ணெயும் நிறையக் கொடுத்து வருகின்றன ஏன் புலால் உணவில் மனம் செலுத்துகிறீர்கள்? அது, பாவம், வேண்டாம்! என்னைப் பாருங்கள்! முன் காலத்தில் நானும் அந்தத் தவறு செய்து வந்தேன். என் ஆசாரிய சுவாமியின் அருளால் இந்த இரண்டு வருஷ காலமாக நான் சைவ போஜனத்திலேயே இருந்து வருகிறேன்."

இப்படியெல்லாம் பேசி ஜனங்களுடைய மனத்தை உருக்கி விட்டார் பூனை சுவாமியார்.

அறியாவூரில் வசித்து வந்தவர்கள் எல்லாரும் 'சைவ'மாகிவிட்டார்கள்.

"மாலையில் பூனைச் சுவாமியை எல்லாரும் வணங்கி விட்டுக் கலைவார்கள். அதன் பின் இரவில் பூனையை ஜபம்

செய்ய விட்டு விடுவார்கள். பூனைச் சுவாமியார் கொழுத்து வந்தார். அறியாலூரில் எலிகள் உபத்திரவம் குறைந்து போயிற்று. காரணம் ஊராருக்குத் தெரியவில்லை.

பிரசங்கங்களைக் கேட்டவர்கள் அடுத்த கிராமங்களில் தங்கள் பந்துக்களிடையில் சுவாமியாரின் மகிமையைப் பற்றிப் பேசி வந்தார்கள். "மகா தபஸ்வி, நம்முடைய பாக்கியத்தின் விசேஷம், நம்மை நல்வழியில் திருப்பி விட்டார்" என்று அவர்களுக்குப் பூனைச் சுவாமியாரைப் பற்றிச் சொல்லி வந்தார்கள்.

பக்கத்து ஊரில் ஒரு குறும்புக்காரன். அவன் ஒரு சாமர்த்தியமான போன் ஒன்று செய்தான். அதற்குள்ளே இரண்டு எலிகளைப் பிடித்து உள்ளே ஒரு அறையில் தாராளமாக ஓடியாட விட்டு விட்டு, மரத்தால் தந்திரமாகச் செய்யப்பட்ட அந்தப் பெரிய போனைக் கபாலீசன் கோயிலில் வைத்து விட்டுப் போனான்.

மறுநாள் காலையில் வழக்கம் போல் பூனையின் பிரசங்கம் கேட்க எல்லாரும் கூடியிருந்தார்கள். சாமியார் வரவில்லை. என்ன காரணம் என்று விசாரித்தார்கள். யாருக்கும் தெரியவில்லை.

சுவாமியாருக்கு அமைத்துக் கொடுத்திருந்த மடத்துக்குச் சென்று பார்த்தார்கள். அவ்விடமும் சுவாமியார் இல்லை. ஒரு விவரமும் தெரியவில்லை.

குறும்புக்காரன, "வாருங்கள், நான் உங்கள் சுவாமியாரைக் காட்டுகிறேன்" என்று ஊராரை அழைத்துச் சென்றான். கிராமத்துக்கு வடக்கே, கொஞ்சம் பாழ்பட்டிருந்த கபாலேசன் கோயிலுக்கு அழைத்துப் போனான். அவ்விடம் மரக்கூண்டில் பூனை சுவாமி அகப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார்கள்!

"அவதூறு பேசாதீர்கள், நான் அல்ல அந்த சுவாமி!" என்றது பூனை.

"வேறு யார் நீ?" என்றார்கள் ஊரார்.


"கடவுள் அருளால் அவர் என் நீச உடலில் சில நாட்கள் தங்கியிருந்தார். நேற்றிரவு அவர் என்னிடம் விடை பெற்றுக் கொண்டு அந்தர்தானமாகி மறைந்து விட்டார். என்னைத் தயவு செய்து வெளியே விட்டு விடுங்கள்" என்றது பூனை.

குறும்புக்காரனுடைய தாயார் அனுதாபப் பட்டுக் கதவைத் திறந்து விட்டாள். உடனே பூனை தாவி வெளியே வந்து கண்ணுக்குத் தெரியாமல் ஓடிப் போயிற்று.

அறியாலூரில் எல்லாரும் மறுபடியும் முன்போல் ஆடும் கோழியும் உணவில் சேர்த்துக் கொள்ள ஆரம்பித்தார்கள்.

சாதுர் மாஸ விரதம் என்றால் மழை காலத்தில் பக்தர்கள் ஒரு ஊரில் தங்கி பூஜைக்கிரமம் நடத்தி, போஜனம் சுருக்கி நியமமாக நான்கு மாதங்கள் கழிப்பது.

முதல்வன் மகாதேவன் அருளைப் பெற்றால் எந்த நாயும் சிவிகை ஏறும். ஆனால் பொய்யை மூடிப் பிழைப்பவர்கள் அருள் பெற மாட்டார்கள். பொய்யை விட்டுத் தள்ளவும் ஆண்டவன் அருள் வேண்டும். அதற்கு அழுது தீர்க்க வேண்டும். மனம் கரைந்து அழுதால் அருள் பெறுவோம்.





கர்ணபரம்பரைக் கதை:

அரசமரத்துப் பிசாசு

ஓர் ஊரில் ஒரு கணவனும் மனைவியும் வாழ்ந்து வந்தார்கள். புருஷன் ரொம்ப சாது. அவன் மனைவி மிகவும் பொல்லாதவள். அவளைக் கண்டால் எல்லோரும் பயப்படுவார்கள். இப்படியிருக்கும் பொழுது ஒரு நாள் அவள் கணவன் ஏதோ வேலையாக வெளியூர் போக வேண்டியிருந்தது. "தாங்கள் வெளியூர் போய்விட்டால் எனக்குப் பொழுதே போகாதே!" என்றாள் அவன் மனைவி.

"பொழுது போகாவிட்டால் எதிரேயிருக்கும் அரச மரத்தைச் சுற்றி வா. புண்ணியம் உண்டு" என்று கூறிவிட்டுப் போய் விட்டான் அவள் கணவன்.

மறுநாள் அவள் அரசமரத்தருகில் போய்ப் பார்த்தாள். அங்கே ஒரே கல்லும் முள்ளுமாய்க் கிடந்தன. மரத்தின் மேலும் சுற்றுப் பக்கத்திலும் சாணி நீரைத் தெளித்துத் துடைப்பத்தால் அடித்து அடித்துப் பெருக்கினாள்.

அந்த மரத்தில் ரொம்பக் காலமாய் ஒரு பிசாசு வாழ்ந்து வந்தது. துடைப்ப அடி என்றால் பிசாசுக்கு ரொம்ப பயம். அது மரத்திலிருந்து குதித்து இவள் முன்னால் நின்றது. "ஹோ! ஆ!" என்று அலறி அவளைப் பயமுறுத்தியது. அவள் பிசாசைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. பிசாசு மீண்டும் பயங்கரமாகக் கத்தியது. அவள்தான் பிசாசுக்கெல்லாம் பிசாசாயிற்றே! அடங்காப் பிடாரி ஆயிற்றே? பயப்படாமல் கையில் மீதியிருந்த சாணி நீரையும் அதன் மேல் வீசித் துடைப்பத்தால் ஓங்கி அடிக்க ஆரம்பித்தாள்.

பிசாசு வலி தாங்காமல் அவள் காலில் விழுந்து. "அம்மா! அம்மா! என்னை விட்டு விடு. உனக்கு நிறையப் பொருள் சம்பாதித்துக் கொடுக்கிறேன். உன்னைப் பெரிய பணக்காரியாக்கி விடுகிறேன். என்னை விட்டு விடு!" என்று கெஞ்சியது. அவள் "அது எப்படி?" என்று கேட்டாள்.

பிசாசு சொல்லிற்று: "நான் காசிக்குப் போய் அந்த ஊர் ராஜாவின் பெண்ணைப் பிடித்துக் கொள்ளுகிறேன். உன் கணவனை வரச் சொல். வந்து ஏதோ மந்திரம் போடுவது போல் 'மலையாள பகவதி, மந்திரக் காளி, க்ளீம், க்ரீம்' என்று சொல்லச் சொல்லு. நான் அந்தப் பெண்ணை விட்டு ஓடிவிடுகிறேன். ராஜா உன் கணவனுக்கு நிறையப் பொன்னும் பொருளும் கொடுப்பான்" என்றது.

அவள், "இதில் ஏதாவது சூது செய்தாயானால் பார்த்துக் கொள்" என்று கையை ஓங்கினாள். பிசாசு ஒரே ஓட்டமாய் ஓடிக் காசி ராஜாவின் பெண்ணைப் பிடித்துக் கொண்டது.

மறுநாள் அவள் தன் கணவன் வந்ததும் நடந்ததைச் சொல்லி, காசிக்குப் போய்ப் பணம் சம்பாதித்து வரச்சொன்னாள். மனைவியின் பேச்சைக் கேட்டதும் புருஷனுக்குத் திகில் பிடித்துக் கொண்டது. அரசமரத்துப் பிசாசு தன்





மனைவியைப் பிடித்துக் கொண்டதோ என்று நினைத்தான். மனைவியைக் கண்டே பயப்பட ஆரம்பித்தான்.

இதைப் புரிந்து கொண்ட அவள், "என்னை ஒன்றும் பிசாசு பிடித்துக் கொள்ளவில்லை. நான் சொன்னபடி கேட்கப் போகிறீர்களா இல்லையா?" என்று அதட்ட ஆரம்பித்தான்.

கணவனுக்குக் கொஞ்ச நஞ்சம் இருந்த சந்தேகமும் தீர்ந்து விட்டது. ஆனாலும் பிசாசு பிடித்த பெண் தன்னை என்ன செய்வாளோ என்று பயந்தான். ஆனால் 'இங்கே இந்தப் பிசாசு தன்னைச் சும்மா விடாதே' என்று நினைத்துக் காசிக்குக் கிளம்பினான்.

காசிராஜா வீட்டில் பிசாசு கொட்டம் அடித்துக் கொண்டிருந்தது. ராஜாவின் பெண் குளிக்காமல் சாப்பிடாமல் அருகில் வருகிறவர்களை அடித்து, திட்டி விரட்டிக் கொண்டிருந்தாள். எங்கெங்கிருந்தோ மந்திரவாதிகள் வந்து வைத்தியம் செய்து பார்த்தும் பயனில்லை.

காசிராஜா மிகவும் கவலைப்பட்டார். அச்சமயம் அரச மரத்தடியிலிருந்து பிசாசை அடித்து ஓட்டிய அந்த அம்மாளின் கணவன் அவ்விடம் போய்ச் சேர்ந்தான். அவன் அந்தப் பிசாசை ஓட்டுவதாகச் சொன்னான். அவனைப் பெண்ணிடம் அழைத்துப் போனார்கள். யாரோ மந்திரவாதி வருகிறான் என்றதும் அந்தப் பெண்ணிடமிருந்த பிசாசு பலமாகக் கத்திக் கொண்டு பயமுறுத்த வந்தது. அருகில் வந்ததும், தன் ஊர்க்காரனாக இருப்பதைப் பார்த்து விழித்தது.

அதைக் கண்டு கொண்ட அவன் உடனே 'மலையாள பகவதி, மந்திரக் காளி, க்ளீம், க்ரீம்' என்று பலமாகச் சொல்ல ஆரம்பித்தான். உடனே பிசாசு 'ஐயோ, நான் போகிறேன், போகிறேன்!' என்று கூச்சலிட்டு அந்தப் பெண்ணை விட்டு விட்டு ஓட்டம் பிடித்தது. அரசனுடைய மகள் சௌக்கியமடைந்தாள். அரசன் மகிழ்ச்சி



தோசைப் பாட்டு

சின்னச் சின்னத் தோசை
சிங்காரத் தோசை
அம்மா சுட்ட தோசை
அரிசிமாத் தோசை

அப்பன் கடைத் தோசை
அழகான தோசை
தின்னத் தின்னத் தோசை
திகட்டாத தோசை

பாட்டி சுட்ட தோசை
பச்சரிசித் தோசை
பார்க்கப் பார்க்க அழகாம்
தின்னத் தின்ன ருசியாம்

— ப. பெருமாள்

யடைந்து மந்திரவாதிக்கு நிறையப் பொன்னும், பணமும், பட்டும் கொடுத்து அனுப்பினான்.

அரசன்மகளை விட்டுப்போன பிசாசு மந்திரி மகளைப் பிடித்துக் கொண்டது. உடனே மந்திரி "நல்லவேளை, மந்திரவாதி ஊரில் இருக்கிறான். அவனையே கூப்பிட்டுப் பேய் ஓட்டச் சொல்லலாம்" என்று நினைத்து அவனைக் கூப்பிட்டு வரச் செய்தான். அவனும் போய், 'ஆ, மந்திரக்காளி!' என்று ஆரம்பிக்கலானான். அந்தப் பெண்ணைப் பிடித்து ஆட்டும் பிசாசு கண்ணில் நெருப்புப் பறக்க விழித்து, "டேய், இங்கே ஏன் வந்தாய்? நான் போகிற இடமெல்லாம் வரலாமென்று பார்க்கிறாயா? ஒரு தடவைதான் உன் மனைவிக்காக ராஜாவின் பெண்ணை விட்டு ஓடினேன். மறுபடியும் ஏன் வந்தாய்? உன்னைக் கொன்று போட்டு விடுகிறேன், பார்!' என்று ஓடி வந்தது.

அவனுக்கு உடம்பில் உயிர் இல்லாது போய் விட்டது. ஒரு கணம் அங்கிருந்து ஓடிவிடலாமா என்று நினைத்தான். அப்படிச் செய்தால் ராஜாவிடம் பெற்ற வெகுமதியையும் பிடுங்கிக் கொண்டு மந்திரி தன்னைப் பிடித்துச் சிறைச்சாலையில் அடைத்து விடுவாரோ என்று பயந்தான். அதைவிட இந்தப் பிசாசிடமே தன்னுடைய சாமர்த்தியத்தைக் காண்பித்துவிட வேண்டியது என்று தீர்மானித்தான். சற்றுநேரம் ஏதோ யோசித்தான். 'சட்'டென்று யோசனை தோன்றியது. மனத்தைத் தைரியப்படுத்திக்கொண்டு, "பிசாசே, பிசாசே! ஆத்திரப்படாதே! நீ செய்த உபகாரத்தை நான் மறப்பேனா! உன்னை ஓட்டுவதற்கு நான் வரவில்லை. ஒரு முக்கியமான சமாசாரம் உன்னிடம் சொல்ல வந்தேன்" என்றான்.

"அதென்ன சமாசாரம், உடனே சொல்லு?" என்று கேட்டது பிசாசு.

"என் மனைவி வந்திருக்கிறாள். வாயிலில் துடைப்பமும் கையுமாக நிற்கிறாள். பாவம்! உனக்கு ஆபத்து வந்து விடுமே என்று எச்சரிப்பதற்காக வந்தேன்" என்றான்.


பிசாசு, "ஐயோ, உன் மனைவி இங்கேயும் வந்து விட்டாளா? நான் போகிறேன் அப்பா, போகிறேன்! இந்தத் தேசத்திலே நான் இருக்கவில்லை!" என்று சொல்லி ஓடியே போய்விட்டது.

பிசாசை விரட்டிய அவனுக்கு மந்திரி பரிசுகள் கொடுத்தான். அவற்றுடன் அவன் மகிழ்ச்சியோடு ஊர் வந்து சேர்ந்தான்.

வி. பி. கிருஷ்ணசாமி.

தெரிந்து கொள்ளுங்கள்

ஒட்டகங்களின் உடம்புக்குள் தண்ணீரைத் தனியாக நிரப்பிக் கொள்வதற்கென்று பிரத்தியேகமாக ஒரு பகுதி கிடையாது. ஒட்டகங்கள் தண்ணீர் இன்றியே மாதக் கணக்கில் நெடுந்தூரம் பிரயாணம் செய்ய முடியும். ஏனெனில்



அவற்றின் உடல் முழுதுமே தண்ணீர் பரவி நிற்கும்படி அமைந்திருக்கிறது. அவை வெயிற் காலத்தில் பாலைவனங்களில் செல்லும்போது உடம்பில் பரவியுள்ள தண்ணீரே உதவுகிறது. எப்போதாவது தண்ணீர் அகப்பட்டால் ஒட்டகங்கள் முப்பது காலன் வரை கால் மணி நேரத்துக்குள் குடித்து விடுகின்றன.

★

1. வெள்ளையாக இருக்கும்போது அழுக்காக இருக்கும். சுத்தமாக இருக்கும்போது கறுப்பாக இருக்கும். அது என்ன?
2. கை உண்டு! கால் உண்டு; அசையும்; ஆடும்! அது என்ன?


(விடை அடுத்த பக்கத்தில்)

★

சென்ற வாரக் கணக்குக்கு விடை

பத்து வீசைக் குடம் நிறைய எண்ணெய் இருக்கிறது. ஏழு வீசைக் குடமும் மூன்று வீசைக் குடமும் காலியாக இருக்கின்றன. இப்போது மூன்று வீசைக் குடத்தால் பத்து வீசைக் குடத்திலிருந்து இரு தடவை எண்ணெயை எடுத்து ஏழு வீசைக் குடத்தில் ஊற்று. பிறகு இன்னொரு மூன்று வீசையை எடுத்து ஏழு வீசைக் குடத்தில் ஊற்றினால் ஏழு வீசைக் குடம் நிரம்பி விடும். மூன்று வீசைக் குடத்தில் இரண்டு வீசை எண்ணெயும், பத்து வீசைக் குடத்தில் ஒரு வீசை எண்ணெயும் மிஞ்சும்.


சரி; இப்போது ஏழு வீசைக் குடத்திலுள்ள ஏழு வீசை எண்ணெயைப் பத்து வீசைக் குடத்தில் ஊற்று; மூன்று வீசைக் குடத்திலுள்ள இரண்டு வீசை எண்ணெயை ஏழு வீசைக் குடத்தில் ஊற்று. பிறகு பத்து வீசைக் குடத்திலுள்ள எட்டு வீசை எண்ணெயில் மூன்று வீசையை எடுத்து ஏழு வீசைக் குடத்தில் ஊற்றிவிட்டால் இரண்டும் ஐந்து வீசைகளாகி விடும்.



வேடிக்கை விளையாட்டு




ஒரு பள்ளிக்கூடத்தின் ஆண்டு விழாவில் நாட்டியக் குதிரைப் போட்டி ஒன்று நடத்தினார்கள். நாட்டியக் குதிரை ஆட்டத்துக்கு நாட்டியக் குதிரை போன்ற ஆடை தயாரித்து அதற்குள் இரண்டு சிறுவர்கள் புகுந்து கொண்டு ஆட வேண்டும். போட்டியில் ஒரே ஒரு நாட்டியக் குதிரை மட்டும் வெகு ஜோராக ஆடியது. அந்தக் குதிரைக்குத்தான் பரிசு என்று முடிவு செய்தார்கள். அந்தக் குதிரைக்குள் இருந்த சிறுவர்களுக்குப் பரிசு கொடுக்கும் பொருட்டு வெளியே வரச் சொன்னார்கள். சிறிது நேரம் வரையில் அந்த ஆடைக்குள்ளிருந்து யாரும் வரவில்லை. சிறுவர்கள் காதில் விழவில்லையோ என்று பரிசு பெற்ற குதிரையின் ஆடையைப் பிரித்துப் பார்த்தார்கள். என்ன ஆச்சரியம்! அதற்குள் சிறுவர்கள் இல்லை. நிஜமாகவே ஒரு குதிரை இருந்தது.



"அம்மா! அடுத்த வீட்டில் இருப்பவர்கள் ரொம்ப ஏழை போல் இருக்கிறது!"


"ஏன்டா அப்படிச் சொல்கிறாய்!"

"அவர்கள் வீட்டுக் குழந்தை ஒரு காலணாவை விழுங்கி விட்டதாம். அதற்கா ஒரே கூச்சல் போடுகிறார்களே!"




"தீக் குச்சியைக் கொளுத்தி இருட்டிலே என்னடா பார்க்கிறாய்!"

"ஒன்றுமில்லை; மின்சார விளக்கை அணைத்தாயிற்று இல்லையா என்று பார்த்தேன்!"



இந்த நாலு மிருகங்களும் பொதுவாக ஒரு காரியம் செய்கின்றன. அது என்ன?

(விடை அடுத்த இதழில்)



வீரராகவன் அளவுகடந்த கோபத்துடன் ஊஞ்சலை விட்டு எழுந்தான். நல்ல வேளை! நெற்றிக் கண் இல்லை! இருந்திருந்தால் அவன் முன்னிருந்த சகல பொருள்களும் பிடி சாம்பலாகப் போயிருக்கும்!

"அம்மா! நீ சொல்வதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பதில் பிரயோசனமே இல்லை. நான் முடியாது என்று



பாவையும் பார்வையும்

கோமதி சுவாமிநாதன்

சொன்னால் முடியாதுதான்." வீரராகவனின் குரலில் கடுமையும் கண்டிப்பும் ஒலித்தன.

"என்னடா, ஒரேயடியாகப் பிடிவாதம் பிடிக்கிறாய்? அவ்வளவு தூரம் ஒரு மனிதர் பெண் பார்க்க வரச் சொல்லிக் கடிதம் எழுதியிருக்கிறார். ஒரு நாள் லீவு எடுத்துக் கொண்டு போய்ப் பெண்ணைப் பார்த்து விட்டு வா!" என்று அவனிடம் கெஞ்சாத வண்ணமாகச் சொன்னாள் பார்வதியம்மாள் மூன்றாம் தடவையாக!

வீரராகவன் கண்ணாடி முன் நின்று உடைகளைச் சரிசெய்து கொண்டான். அவனுடைய கோபம் சற்றுத் தணிந்திருந்தது போல் காணப்பட்டது. "அம்மா! நான் போய் வர வேண்டிய அவசியமே இல்லை. எனக்குப் பெண்ணைப் பிடிக்க வில்லை! சரிதானா? அம்மா! அந்த மகாலிங்கத்துக்கு இதோ ஒரு கார்டு வைத்திருக்கிறேன். 'கல்யாணத்தைப் பற்றி யோசிக்க இப்போது எனக்கு அவகாசமுமில்லை. வேறு இடத்தில் வரன் பார்த்துக் கொள்ளலாம்' என்று. இதை இன்றைக்கே தபாலில் சேர்த்துவிடச் சொல்" என்று சொல்லிக் கொண்டே கோட்டுப் பையிலிருந்த ஒரு கார்டை எடுத்து ஊஞ்சலில் வைத்து விட்டுக் காரியாலயத்துக்குக் கிளம்பினான். பார்வதி அம்மாள் பிரமை பிடித்தவள் போல் நின்று விட்டாள்.

★

ஆடுதுறை மகாலிங்கம் சமீபத்தில் வரன் வேட்டைக்காகச் சென்னைக்கு வந்திருந்த போது கல்யாண மார்க்கெட்டில் விலை போகத் தயாராக நிற்கும் வீரராகவனைப் பற்றியும் கேள்விப்பட்டார். ஒரு நண்பரின் துணையுடன் பார்வதி அம்மாளை வந்து பார்த்தார். வீரராகவனின் தந்தை காலமாகி அனேக வருஷங்களாகி விட்டன. பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை. ஏற்கனவே சுமாரான பூஸ்திதி உண்டு. ஒரு வெளிநாட்டு வியாபாரக் கம்பெனியில் ஒரு நல்ல உத்தியோகத்தையும் வகித்து வந்தான் வீரராகவன். பின்னையின் கல்யாணத்தை நடத்தி வைத்தால்தான் ஜன்மம் சாபல்ய

மடையும் என்ற ஒரே எண்ணம் பார்வதியம்மாளுக்கு. வீரராகவன் வீட்டுக்கு மகாலிங்கம் வந்திருந்தபோது அவனைச் சந்திக்க முடியவில்லை. அவன் கம்பெனி விஷயமாக அயலூர் போயிருந்தான். ஆனால் மகாலிங்கம் வீட்டில் மாட்டப்பட்டிருந்த அவனுடைய புகைப்படத்தைப் பார்த்துத் திருப்தியடைந்தார். அவர் செய்வதாகச் சொன்ன சீர்வரிசைகளைப் பற்றிக் கேட்டுப் பார்வதியம்மாள் திருப்தியடைந்தாள். தன் பிள்ளை ஊருக்குத் திரும்பியவுடன் பெண் பார்க்க ஆடுதுறைக்கு அனுப்புவதாகவும் வாக்களித்தாள். லௌகிக விஷயங்களைப் பற்றிப் பேசி ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள். தம் விலாசத்தைக் கொடுத்து விட்டு மனத்தில் நம்பிக்கை நிறைந்தவராக மகாலிங்கம் ஆடுதுறைக்குத் திரும்பினார்.

வீரராகவன் வந்தவுடன் பார்வதி அம்மாள் பக்குவமாக விஷயத்தை ஆரம்பித்தாள். பிறகு விவரமாகச் சொன்னாள். அவன் வீராவேசத்துடன் சீறினான். பார்வதி அம்மாளுக்கு மாத்திரம் தன் பிள்ளையின் மனத்திரையிலாடும் சித்திரங்களைப் பார்க்கும் சக்தி இருந்திருந்தால், அந்த ஆடுதுறை ஆரணங்கை நந்திபோல் மறைத்துக் கொண்டு நகரத்து நாரீமணி ஒருத்தி நின்று கொண்டிருப்பதைக் கண்டிருப்பாள். அவள் வீரராகவன் வேலை பார்க்கும் காரியாலயத்திலேயே மானேஜரின் காரியதரிசியாக இருப்பவளான காஞ்சனா என்றுகூடத் தெரிந்து கொண்டிருப்பாள்.

இதில் விசேஷம் என்னவென்றால் வீரராகவன் மற்ற வாலிபர்களைப் போல் அவசரப்பட்டுக் காதல் கீதல் என்ற விவகாரத்தில் இறங்கிவிடவில்லை. காஞ்சனா மீது காரியாலய மானேஜருக்கு ஒரு கண் என்று தெரியும். ஆயிரம் ரூபாய்களைச் சுளையாக வாங்கும் அவருடன் போட்டி போடத் தனக்குத் தகுதியில்லை என்றும் அவனுக்கு நன்கு தெரியும். ஆனால் தன் வாழ்க்கைத் துணைவியைத் தேர்ந்தெடுக்கக் காஞ்சனாவை ஒரு அளவுகோலாக வைத்துக் கொண்டான். காஞ்சனாவைப் போன்ற அழகியைத் தேடி அடையும் வரை, எத்தனை வயதானாலும், பிரம்மச்சாரியாகவே காலத்தைக் கழித்து விட முடிவு செய்தான். நூறு ஆடுதுறைப் பெண்கள் சேர்ந்தாலும் காஞ்சனாவின் கால் கட்டை விரலின் அழகுக்கு ஈடாக மாட்டார்கள் என்று அவன் அந்தராத்மா சொல்லியது.

அன்று மாலை சீக்கிரமாகவே காரியாலயத்திலிருந்து திரும்பி விட்டான். வந்ததும் வராததுமாகப் படுக்கையை எடுத்து விரித்துச் சரி செய்தான். பெட்டியில் சலவைத் துணிகளை எடுத்து வைத்தான். பார்வதியம்மாளுக்குத் தன் பிள்ளை எங்கோ அயலூருக்குப் புறப்படச் சித்தமாகிறான் என்று தெரியும். அந்த ஊர் ஆடுதுறையாக இருக்கக் கூடாதா என்று ஓர் சபலம்! 'ஆடுதுறைக்குத்தானே?' என்று கேட்கவும் பயம். பிள்ளை மீண்டும் துர்வாசராகி விட்டால் என்ன பண்ணுவது? அம்மாவின் உள்ளக் கலக்கத்தைப் புரிந்து கொண்டவன் போல் வீரராகவனே பேசினான். ''அம்மா! ஆபீஸ் விஷயமாகத் தஞ்சாவூருக்குப் போகிறேன். வர நான்கு நாட்களாகும்'' என்றான். பார்வதியம்மாளுக்கு அந்தப் பதில் பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்தாலும், அவள் பிள்ளை பம்பாய், கல்கத்தா என்று கிளம்பி விடாமல் ஆடுதுறையைத் தாண்டிக் கொண்டுதானே தஞ்சாவூர் போகப் போகிறான் என்ற தெம்பு ஏற்பட்டது. ''ஏண்டாப்பா! அப்படியே ஆடுதுறையிலே இறங்கி விட்டு அடுத்த வண்டியிலே தஞ்சாவூருக்குப் போகக் கூடாதா?'' என்றாள்.

''என்ன அம்மா இது! நீ சொல்லுவது வேடிக்கையாயிருக்கிறதே! ஆபீஸ் காரியமாக நான் தஞ்சாவூர் போகிறேன். அப்பொழுது எப்படி வழியில் ஆடுதுறை ஸ்டேஷனில் இறங்க முடியும்?'' என்று கேட்டு விட்டு வீரராகவன் பிரயாணத்துக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யலானான். அவன் சுபாவம் தெரிந்த பார்வதியம்மாள் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை.

அன்று இரவு புறப்படும் இந்தோ சிலோன் எக்ஸ்பிரசிலோ திருவனந்தபுரம் பாசஞ்சரிலோ இரண்டாம் வகுப்பு டிக்கெட்டுகளெல்லாம் இரண்டு நாட்களுக்கு முன்பே ரிசர்வ் செய்யப்பட்டு விட்டன. மிகுந்த ஏமாற்றத்துடன் வீரராகவன் திருவனந்தபுரம் பாசஞ்சர் வண்டியில் மூன்றாம் வகுப்புப் பெட்டி ஒன்றின் மேல் தட்டில் படுக்கையை விரித்துப் படுத்தான். வண்டி தாம்பரத்தைத் தாண்டு முன்பே குறட்டை விடவும் ஆரம்பித்து விட்டான்.

ஜிலு ஜிலுவென்ற இனிமையான குளிர்ந்த காற்றும், கல கல வென்ற பக்ஷிஜாலங்களின் ஒலி போன்ற பேச்சொலியும் வீரராகவனைத் தூக்கத்திலிருந்து விடுபடச் செய்தன. கண்களை விழித்துப் பார்த்தான். காலைவேளைக்கே உரித்தான ஈரம் கலந்த வாடைக் காற்றின் இன்பம் மனசுக்கு ரம்யமாக இருந்தது. இன்னும் சூரியன் உதயமாக வில்லை. ஆனால் நல்ல வெளிச்சம் பரவியிருந்தது. கும்பகோணம் ஸ்டேஷனில் வண்டி நின்று கொண்டிருந்தது. பிளாட்பாரத்தில் மக்கள் போடும் கூச்சலும், சந்தடியும் அவனைத் தூக்கத்தின் பிடியிலிருந்து முற்றிலும் விடுவித்துவிட்டன.

பார்வையைக் கீழே செலுத்தினான். அவ்வளவுதான்! ஒரே அதிர்ச்சி! வெறும் சாதாரண அதிர்ச்சி இல்லை. இன்ப அதிர்ச்சி! அவன் படுத்துக் கொண்டிருந்த மேல் தட்டுக்கு எதிர்ப்புறமாகக் கீழே ஒரு குடும்பத்தினர் உட்கார்ந்திருந்தனர். அழகு ராணியான ஒரு யுவதி நடுநாயகமாக அங்கு வீற்றிருந்தாள். புள்ளினங்களின் சப்த ஜாலம் என்று அவன் நினைத்ததெல்லாம், அந்த யுவதியின் பேச்சொலிதான் என்று தெரிந்தபோது அவன் புளகாங்கிதமடைந்தான். தந்தத்தை இழைத்து விட்டது போன்ற அவள் கழுத்தில் ஒரு மெல்லிய சங்கிலி மாத்திரம் ஊசலாடிக் கொண்டிருந்ததிலிருந்து அவள் ஒரு குமரி தான் என்று யூகிக்க அதிக நேரம் பிடிக்கவில்லை. அழகின் அளவுகோலாக இத்தனை நாட்கள் அவன் இதயத்திலிருந்த காஞ்சனாவைக் கணப்பொழுதிலே கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டு அந்த இடத்தில் இந்த யுவதியை அமர்த்தினான்.

ஒரு வயோதிகர், நாற்பத்தைந்து வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் ஒரு நடுத்



உங்கள் தேநீர் பானத்தை
லில்லியின்
நோண்டா
பிஸ்கோத்துகளுடன்
அருந்தி ஆனந்தமடையுங்கள்
LILY'S
NONTA
ருசியும்
மொறுமொறுப்பும்
கொண்டது
தேநீருக்கு
ஏற்ற விருந்து
LILY BISCUIT CO. PRIVATE LTD. CALCUTTA-4



இருட்டு நேரங்களில்
உங்களுக்கோர் வழிகாட்டி
ESTRELLA
BRIGHT LIGHT
LONG LIFE
ESTRELLA BATTERIES LTD.
BOMBAY
எஸ்ட்ரேலா
எஸ்ட்ரேலா பாட்டரீஸ் லிட்.
பம்பாய்—மதராஸ்—டில்லி—நாகப்பூர்—கல்கத்தா—கான்பூர்

தர வயது ஆசாமி, பதினெட்டு வயதில் பத்தரை மாற்றுத் தங்கம்போல் பரிமளிக்கும் அந்த யுவதி. பத்து வயது நிரம்பி யிருக்கும் ஒரு வாண்டுப் பயல்,—இந்த நால்வரும்தான் அந்த எதிர்ப்புற ஆசனத்தில் உட்கார்ந்திருந்தனர். வீரராகவனுக்குக் கீழே இறங்கி ஒரு கப் காப்பி சாப்பிட ஆசை! ஆனால் இறங்கினால் மீண்டும் நன்றாக வெளிச்சமாகி விட்ட பிறகு மேல் தட்டில் ஏறிப் படுத்துக் கொள்வது அவ்வளவு நன்றாயிராது. மேல் தட்டை விட்டுக் கீழே வந்து உட்கார்ந்து விட்டால் அவள் கவனிக்காத வண்ணம் அவளைக் கவனிப்பதும் அவ்வளவு சாத்தியமல்ல! ஆகையால் அவன் தூங்குவது போலவே, ஆனால் அரைக் கண்ணைத் திறந்து கொண்டு நடிக்க ஆரம்பித்தான்.

வண்டி கும்பகோணத்தைவிட்டுக் கிளம்பியது. அந்தக் குடும்பம் எந்த ஸ்டேஷனில் ரயிலில் ஏறியது என்று அவனால் யூகிக்க முடியவில்லை. சம்பாஷணைத் தொடரிலிருந்து ஓரளவு அவர்களைப்பற்றித் தெரிந்து கொள்ளக் காதுகளைத் தீட்டிக் கொண்டான். அவன் பக்கம் அதிர்ஷ்டம் இருந்தது. அந்தப் பெண்ணே ஆரம்பித்தாள். "ஏன் அப்பா! பட்டணத்திலிருந்து ஒரு வேளை இன்று கடிதாசி வருமோ என்னவோ?" என்றாள்.

"ஏண்டா மகாலிங்கம்! நீதான்கூட ஒரு நாள் இருந்து பையனைப் பார்த்து நேரில் பேசிவிட்டு வரக்கூடாதோ? எதற்கு அவசரப்பட்டு வந்தாய்?" என்றார் பெரியவர்.

"பையன் பெல்லாரியிலிருந்து எப்போது திரும்புவானென்று தெரியாது. அப்படி இருக்கும்போது எத்தனை நாட்கள் அங்கே தங்கியிருப்பது? ஆனால் பையனின் தாயார் மிகவும் தங்கமானவள் என்று தெரிகிறது. இந்தச் சம்பந்தம் உடனடியாக நிச்சயமானால் நாம் அதிருஷ்டசாலிகள்தான்! இல்லையா அம்மா!" என்றார் அந்த நடுத்தர வயதுக்காரர் அந்த யுவதியை நோக்கி. அவளுக்கு நாணத்தால் முகம் சிவந்ததுபோல் வீரராகவனுக்குத் தோன்றியது. மந்திரம், தந்திரம், முதலியவற்றிலெல்லாம் அவனுக்குத் துளிக்கூட நம்பிக்கை இல்லை! ஆனால் இன்று பெரிய மகேந்திர ஜாலம்போல், ஆடுதுறைக்காரர்களே அவன் இருந்த வண்டியில் வந்து உட்கார்ந்து அவனுக்குத் தரிசனம் அளித்ததை நினைத்தபோது அவன் உடம்பு புல்லரித்தது. இத்தகைய அபூர்வ அழகியைப் போய்ப் பார்த்துச் சம்மதம் தெரிவிக்க மாட்டேனென்று தாயாரிடம் அனாவசியமாகச் சண்டை போட்டதை நினைத்தபோது அவன் மனம் வெதும்பியது. அவசரப்பட்டு அவன் எழுதித் தாயாரிடம் கொடுத்த கார்டு பட்டுவாடா ஆகக் கூடாதென்று பிரார்த்தித்தான். அவன்தான் அந்தப் பையன் என்று அங்கேயே அறிமுகப் படுத்திக் கொள்ள ஆசை அவனை உந்தித் தள்ளியது. ஆனால், கலைந்திருந்த தலையும், ஸ்னோவை முகராத அவன் முகமும், கசங்கிய ஷர்ட்டும் குறுக்கே நின்றன. "இனிமேல் பெண் பார்ப்பது என்ற சம்பிரதாயம் எதற்கு? தஞ்சாவூரிலிருந்து திரும்பியதும் அம்மாவிடம் சொன்னால் போச்சு! நான்கு நாட்களில் அப்படி யொன்றும் வேறு இடம் குதிர்ந்து விடாது!" என்று மனத்தைத் திருப்திப் படுத்திக் கொண்டான். தொடர்ந்து கீழே எழுந்த பேச்சு அவன் கவனத்தைக் கவர்ந்தது.


சிமிட்டாப் பொடியைக் கையில் வைத்துக் கொண்டே கிழவனார் பேசினார்: "இவளுடைய அதிருஷ்டத்திலே எனக்கு ரொம்ப நம்பிக்கை உண்டு! இவளுக்காகவாவது அந்தப் பட்டிணத்துப் பையன் வரன் நமக்குச் சாதகமாக அமைய வேண்டும்."

"போங்கோ தாத்தா! கல்யாணத்துக்கு ரொம்ப அவசரமாக்கும்?" என்றாள் தாத்தாவின் பேத்தி! அப்போது அவள் முகத்தில் தோன்றிய 'பாவம்' அஜந்தாச் சித்திரங்களை நினைவூட்டியது வீரராகவனுக்கு.

"மகாலிங்கம்! நீ இன்று மாலை வண்டிக்கு நேரே பட்டிணம் போ! நாங்க ஆடுதுறையிலே இறங்கிக் கொள்கிறோம்! பையனைக் கையோடு அழைத்துக் கொண்டு வந்து சேர்! சுந்தரப்பெருமாள் கோவில் கல்யாணத்துக்குப் போய் வந்த வேளை நம்ப வீட்டுக் கல்யாணங்களும் நடக்கட்டும்" என்றார் தாத்தா.

"நானே அதைத்தான் சொல்ல நினைத்தேன்" என்று முத்தாய்ப்பு வைத்தார் மகாலிங்கம். தஞ்சாவூரில் இறங்கியவுடன் முதல் வேலையாகத் தாயாருக்கு விவரமாக ஒரு தந்தி கொடுப்பதற்கு முடிவு செய்தான் வீரராகவன்.

சுந்தரப்பெருமாள் கோவில் இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டதற்கு, ரயிலின் வேகத்



கோயமுத்தூர் ஸ்ரீ கே. சுப்பிரமணியம் (சுப்ரி) அவர்கள் குமாரன் சிரஞ்சீவி கிருஷ்ணமூர்த்திக்கும் கோயமுத்தூர் பிரபல அட்வகேட் ஸ்ரீ மல்லிகார்ஜுனன் அவர்கள் புதல்வி சௌபாக்கியவதி நாராயணி(துர்க்கா)க்கும் ஜூலை 13ம் தேதியன்று கோயமுத்தூரில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் பிரமுகர்களும் வந்திருந்து மணமக்களுக்கு ஆசி கூறினர். வாழ்க, மணமக்கள்!

தைக் கடுமையாக மனத்தில் கண்டித்தான். 'இந்த இஞ்சினுக்கு இப்படி என்ன கொள்ளை போகும் அவசரம்?' என்று அதைத் திட்டினான். யாரோ உறவினர்களின் கல்யாணத்துக்காகப் புறப்பட்ட மகாலிங்கத்தின் குடும்பம் சுந்தரப்பெருமாள் கோவிலில் இறங்கியது. அப்புறம் வீரராகவனுக்கு அந்த ரயிலில் ஒரே முள்ளுக் குத்துவது போன்ற உணர்ச்சி! தாமரைக் குளத்தில் அன்னம் மிதக்கும் அழகிய பாணியில், மகாலிங்கத்தின் பெண், டிக்கெட் பரிசோதகரைத் தாண்டி வெளியே போகும் காட்சியைக் கண்டு ரசித்தான். அதைக் கண்டு பொறாமைப்பட்ட ஒரு கரித் துண்டு அவன் கண்ணை வந்து தாக்கியது. அந்தக் கரித் துண்டைத் தேடிப் பிடித்துச் சபிப்பதற்குள் ரயில் கிளம்பிவிட்டது!

★

''கடவுள் உனக்கு இவ்வளவு சீக்கிரத்திலே நல்ல புத்தியைக் கொடுப்பார் என்று நான் நினைக்கவில்லை!'' என்று கூறிக்கொண்டே தஞ்சாவூரிலிருந்து ஒரு நாள் முன்னதாகவே திரும்பிய வீரராகவனை வரவேற்றாள் பார்வதி அம்மாள். வீரராகவனுக்கு வெட்கமாகத்தான் இருந்தது. ஆனாலும் வெட்கத்தைப்பார்த்தால் காரியம் நடக்குமா? கல்யாணம் ஆகுமா? ''உனக்கு இப்படி மனம் மாறும் என்று என் மனசு ஓரத்திலே கொஞ்சம் நம்பிக்கை இருந்தது. அதனால் தான் நீ எழுதி வைத்த கார்டைக் கூடத் தபாலில் சேர்க்கவில்லை!'' என்றாள் பார்வதி அம்மாள் மீண்டும்.

வீரராகவனுக்கு உள்ளத்திலே சூழ்ந்திருந்த ஒரு பெரிய கவலை மறைந்தது. பிறகு மகாலிங்கம் வந்து போனது பற்றியும், வீரராகவனின் விவரமான தந்தியைப் பற்றியும் அம்மாவும் பிள்ளையும் பேசிக் கொண்டார்கள். ரயிலில் ஆடுதுறைக் காரர்களைப் பார்த்ததாக வீரராகவன் சொல்லவே இல்லை. அதற்குப் பதிலாக, அந்த இடத்துச் சம்பந்தத்தைப் பற்றித் தன் தஞ்சாவூர் சிநேகிதன் ஒருவன் சிலாகித்துச் சொன்னதின் பேரில் தந்தி கொடுத்ததாகவும் மழுப்பி விட்டான். ''அம்மா! பெண்ணின் பெயர் என்னவாம்?'' என்றான் தாயாரிடம். ரயில் சம்பாஷணையில் அந்த யுவதியின் பெயர் அடிபடாதது அவனுக்கு ஒரு பெரிய மனக் குறையாயிருந்தது.

''பெயர் மோகனாவாம்! அந்த மகாலிங்கத்துக்கு நீ பெண்கூடப் பார்க்காமல் கல்யாணத்துக்கு ஒப்புக் கொண்டதில் ஆனந்தம் தாங்கவில்லை. நல்ல மனுஷ்யன்! ஊருக்குப் போனவுடன் முகூர்த்தப் பத்திரிகை அடித்து அனுப்பி விடுவதாகச் சொன்னார். அடுத்த புதன்கிழமையே முகூர்த்த நாள் இருக்கிறதாம். நீ இப்போதே லீவுக்கு எழுதிப் போட்டு விடு!'' என்று கூறிய பார்வதி அம்மாளின் பேச்சில் பாசமும், பரிவும் ஆனந்தமும் நிரம்பியிருந்தன.

★

அடுத்த வாரத்தில் ஒரு நாள் மாலை. மாப்பிள்ளை அழைப்பு முடிந்து மணப் பந்தலில் வந்து இறங்கினான் வீரராகவன். ஒரே உற்சாகம்! இன்னும் சில நிமிஷங்களில் மோஹனா வரப் போகிறாள்! 'அன்று நம்மை ரயிலில் பார்த்தாளோ, பார்க்கவில்லையோ? அதைச் சொல்லிவிட வேண்டியதுதான்!' என்று அவன் மனம் துடித்தது. நிமிர்ந்து உட்புறமாகப் பார்த்தான். என்ன அதிசயம்! மோகனா அலட்சியமான நடையில் கொஞ்சம் கூடக் கல்யாணப் பெண் என்ற சங்கோஜம் இல்லாமல் நின்று கொண்டிருந்தாள். வீரராகவனுக்குக் கொஞ்சம் சொரேரென்றிருந்தது. ஆனால் மறுகணம், 'மணப் பெண்! மணப் பெண்!' என்ற சப்தத்துடன், நாலைந்து பெரிய பிள்ளைகள் சிறுமிகள் சூழக் குனிந்த தலையுடன் ஒரு யுவதி வெளியே வந்தாள். மோகனாவும் இப்போது அவர்களுடன் சேர்ந்து கொண்டாள். வீரராகவனுக்குத் தலை சுற்றியது. ஏமாற்ற உணர்ச்சி! 'மோகனா மணப் பெண் இல்லையென்றால் இதில் ஏதோ பெரிய சூது அல்லவா இருக்கிறது? இப்போதே அதைக் கண்டு பிடிக்காவிட்டால் அப்புறம் மீள்வதேது?.. இப்போ என்ன செய்வது?'' என்று மனத்தைக் குழப்பிக் கொண்டான். இந்த உலகமே சுற்றுவது போலிருந்தது!

''அத்திம்பேரே! மனத்திரையிலே ஏதும் புது சினிமாப் படம் ஓடறதா? ஒரே ரசிப்பில் இருக்கிறீர்களே?'' என்றாள் அந்த ரயில் யுவதி வீரராகவனை நெருங்கி. அவன் திடுக்கிட்டான். ''ஜயம்! அதற்குள்ளேயே உன் அக்காவின் மாப்பிள்ளையைப் பரிகாசம் செய்ய வந்து விட்டாயா?'' என்றார் ரயிலில் வந்த தாத்தா. வீரராகவன் மனசில் இருந்த முடிச்சுக்கள் மள மள வென்று அவிழ்ந்தன! 'அடராமச்சந்திரா! அந்தப் பெண்ணுக்கு அக்கா ஒருத்தி இருந்து தொலைத்தாளா?' என்று அங்கலாய்த்தவாறு துணிவுடன் மணப் பெண் பக்கம் திரும்பினான். 'பரவாயில்லை! இருந்தாலும் ஜயத்தின் வசீகரத்தில் பாதிக்குக்கூட வரமாட்டாள்!' என்று உறுமியது அவன் மனம்! ''மோஹனா! அத்திம்பேர் உன்னைக் கவனிக்கிறார்! ஜாக்கிரதை'' என்றாள் ஜயம் கலீரென்று சிரித்துக்கொண்டு!

''மாப்பிள்ளை! எங்க ஜயம் ரொம்ப அதிருஷ்டசாலி! அவள் அதிர்ஷ்டத்தினால் தான் மோகனாவுக்கு நீங்கள் கிடைத்தீர்கள்! எப்படித் தெரியுமா? ஜயத்தின் அத்தான் ராமு கல்யாணத்துக்குத் தயாராக நிற்கிறான். அக்காவுக்குக் கல்யாணம் செய்யாமல் தங்கைக்குச் செய்யலாமா? மோகனாவும் ராமுவும் ஒரு வயது! அதனால்தான் அவனுக்கு ஜயம் என்று நாங்கள் முடிப் போட்டு விட்டோம்! அடுத்த மாதம் அந்தக் கல்யாணத்தை நடத்திவிடலாம்!'' என்றார் தாத்தா.

வீரராகவன் ஒரு கணம் சிந்தித்தான்! ஜயத்தின் அத்திம்பேர் பதவியை முழு மனத்துடன் ஏற்க நிச்சயித்து விட்டான்! 'ஒரு அழகியை மைத்துனியாக அடைவதற்கும் அதிருஷ்டம் வேண்டாமா என்ன?' என்று மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டான்! கும்பகோணம் – சுந்தரப் பெருமாள் கோவில் பிரயாண நினைவுகள் ஊமை கண்ட கனவாகவே போய்விட்டது என்று நினைக்கும் போதுதான் அவன் இதயத்தின் ஓரத்திலே நெருஞ்சிமுள் உரசுவது போன்றிருந்தது!

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10 for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam

பனி போன்ற க்ரீம் உங்கள் அழகை எடுத்துக் காட்டுகிறது

உங்கள் சருமத்திற்கு இயற்கையான மிருதுத்தன்மையை அளிக்கிறது . . . மற்றும் தழும்பு, மரு முதலிய சின்னங்களை வெளியே தெரியாமல் மறைக்கிறது

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமின் அழகூட்டும் ஆச்சரியமான சக்தியினால் எழிலோங்கும் லாவண்யத்தை நீங்கள் எப்பொழுதும் பெறமுடியும்.

பிரதி காலையிலும் மென்மையான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை முகத்தில் லேசாகத் தடவிக் கொள்ளுங்கள். சில விநாடிகளில் அது மறைந்து களங்கமற்ற அழகையும் ஒன்றுபோல் மிருதுவான சருமத்தையும் நீங்கள் பெறுகிறீர்கள். மேலும் இயற்கையையேயொத்த பட்டின் மிருதுத்தன்மை வாய்ந்த உங்கள் சருமத்தைக் கண்டு ஒவ்வொருவரும் பொறாமைப்படுவர்!



பவுடர் போடுவதற்கேற்ற ஆதாரம் கொடுத்து அதைப் படியச் செய்கிறது

பவுடர் பூசிக்கொள்ளுவதற்கு முன்போ அல்லது அலங்காரம் செய்து கொள்ளுவதற்கு முன்போ எண்ணெய்ப் பசையற்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை எப்பொழுதும் தடவிக்கொள்ளுங்கள். பவுடர் ஒன்றுபோலப் பரவி மணிக்கணக்கில் படிந்து நிற்க இது உதவுகிறது. பனிபோன்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் மூலம் நாள்முழுவதும் காந்தியுடன் கூடிய அழகுடன் நீங்கள் விளங்குவீர்கள்.



பாண்ட்ஸ்
வானிஷிங் க்ரீம்

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

